Registered as a News Paper in Sri Lanka | දිනමුරසු වාරමලර් | பக்கம் 24 ரூபா 30.00
ஏப்ரல் 18 - 24, 2013

வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1010




# இறுதித் தீர்வும்
## இணங்காத கூட்டமைப்பும்

## வந்தார்கள் சென்றார்கள்!



## மூளுமா மூன்றாம் உலகப் போர்?





## பெத்து எடுத்தவதான் தத்துக் கொடுத்துப்புட்டா...

## ஆன்மீகம்

### பாவங்கள் போக்கும் துளசி மாலை

அனுமனுக்கு துளசி மாலை சாத்தி வழிபட்டால், சனீஸ்வரனின் பாதிப்புகளில் இருந்து விடுபடலாம். ஆஞ்சநேயருக்கு மிகவும் பிடித்தது இராம நாமம். அனுமன் ஜெயந்தியன்று 'ராம ராம ராம' நாமம் சொல்வது விசேஷம். 'ஓம் ஆஞ்சநேயாய வித்மஹே, வாயுபுத்ராய தீமஹி, தந்நோ ஹனுமன் ப்ரசோதயாத்' என்பது அனுமனுக்கான காயத்ரி மந்திரமாகும்.

இதையும் சொல்லி வழிபடலாம். அனுமன் ஜெயந்தியன்று ஆஞ்சநேயருக்கு துளசி மாலை அணிவித்து, துளசி அர்ச்சனை செய்யலாம். வெற்றிலை அல்லது வடை மாலை சாத்தலாம். வெண்ணெய் சாத்தி வழிபட்டு பக்தர்களுக்கு அன்னதானம் செய்யலாம்.

துளசி, லட்சுமி, கவுதுஸ்பம் என்ற மூன்றை மட்டும் மகாவிஷ்னு வைத்துக்கொண்டு ஏனையவற்றைத் தேவர்களுக்கு வழங்கிவிட்டார். துளசி தளத்தில் 33 கோடி தேவர்கள், 12 சூரியர், 8 வசுக்கள், அசுவினி தேவர் இருவர் ஆகியோர் வசிக்கின்றனர். இலையின் நுனியில் பிரமன், மத்தியில் மாயோன் மற்றும் லட்சுமி சரஸ்வதி, காயத்ரி, பார்வதி முதலானோர் வசிக்கின்றனர்.

துளசியை நினைத்தால் பாவம் போகும். துளசியைக் காப்பாற்றுபவன் பரமாத்மா ஆகின்றான். துளசியை வழிபட்டால் ஆயுள் பலம், புகழ், செல்வம், மகட்பேறு முதலியன பெருகும். துளசி காஷ்ட (கட்டை) மாலையைக் கழுத்தில் அணிந்தால் பாவங்கள் நீங்கும். துளசி தீர்த்தத்தைப் பருகுகின்றவர்கள் பரமபதம் செல்வர்.

### நன்றியின் நன்மைகள்!

நன்றி உணர்வைப் பொறுத்த அளவில் இயேசுவின் போதனை தெளிவாகவே இருக்கிறது. நாம் நன்மைகள் செய்யும்போது, பலனை, பாராட்டை, நன்றியை எதிர்பாராது செய்ய வேண்டும். ஏனென்றால், அது நமது கடமை, நம்மேல் சுமத்தப்பட்ட பளு. மேலும், நாம் செய்கின்ற நன்மைகளின் ஊற்று இறைவனிடம் இருந்தே வருகிறது. எனவே, நமக்கென்று சொந்தம் கொண்டாட எதுவும் இல்லை.

ஆனால், பிறரிடமிருந்து நாம் பெறுகின்ற நன்மைகளுக்கு நாம் மறவாமல் நன்றி பாராட்ட வேண்டும். ஏனென்றால், அந்த நன்மை நமது உரிமையல்ல, மாறாக இறைவனின் அருள் மேலீட்டால் அருளப்பட்ட கொடை.

எனவே இறைவனுக்கும், இறைவன் யார் வழிக்காக அதை அருளினாரோ அவர்களுக்கும் நன்றி செலுத்துவது நமது கடமை. மேலும், நன்றி சொல்வதால், நமது மனம் பரவலாகிறது. நன்றி தாழ்வு மனத்தைப் போக்கி, தன்னம்பிக்கையைத் தருகிறது. போதும் என்று மனநிலையைத் தருகிறது. பிறரைச் சார்ந்து வாழ்கிறோம் என்னும் தாழ்ச்சியை, எளிய மனத்தைத் தருகிறது. ஏனவே, எப்போதும் நன்றி சொல்வோம். நன்றி மனநிலையோடு வாழ்வோம்.

### அல்லாஹ்வின் அன்பு எச்சரிக்கை

நாட்டை ஆளும் பொறுப்பை ஏற்றுக்கொண்டவர்கள் நாட்டு மக்களுக்கு நம்பிக்கையோடு நற்செயல்கள் புரிபவர்களாக இருக்க வேண்டும்.

அல்லாஹ் அல்குர் ஆனில் கூறுகின்றான்.

உங்களில் மெய்யாக ஈமான் கொண்டு நற்செயல்கள் புரிந்தவர்களை உங்களுக்கு முன்னர் அவ்வாறு வாழ்ந்தவர்களை அதிபதிகளாக்கிய முறையிலே அல்லாஹ் உலகுக்கு அதிபதிகளாக்கி வைப்பான்:

அல்குர்ஆன் 24: 55

இந்த ஆறுதல் யாருக்கு? தலைநிமிர்ந்து நீதி வழி நின்று ஆட்சிசெய்வோருக்கு. மாறாக அகங்காரமும், ஆணவமும் கொண்டு அநியாயத்தையும், அதர்மத்தையும் அவர்கள் கடைப்பிடித்தால் அல்குர்ஆன் கூறுகிறது;

அவர்கள் மீது இழிவும், வீழ்ச்சியும் விதிக்கப்பட்டுவிட்டன. இன்னும் அல்லாஹ்வின் கோபத்துக்கும் பாத்திரமானவர்களாகி விட்டார்கள். **அல்குர் ஆன் 2:61**

இவ் இழிநிலைக்கு ஆளாகாமல் அல்லாஹ்வுக்கு பொருத்தமாக அகில ஆட்சி நடைபெற வேண்டும். உங்களை பூமியின் அதிபதிகளாக்கி நீங்கள் எவ்வாறு செயல் புரிகிறீர்களென்று கவனித்துவருகிறோம். இது அல்லாஹ்வின் அன்பு எச்சரிக்கை.

**எம்.சீ.கலீல், கல்முனை-05.**

## கவிதைப்போட்டி இல 1007



### மரணம்

போதை தலைக்கேற  
போதனைகள் தலைக்கேறவில்லை  
இதனால் இவர்களுக்கு  
இப்படியோர் நிலை  
சாதனையா இது?  
சாவுக்கு நாளில்லை  
வேதனை தரும்  
விரும்பாத மரணம்  
விடை தரும் உங்களுக்கு...

எம்.சி.கலீல், கல்முனை-05.

### விநோத வழிபாடு


விழி கண்ட தெய்வம் - என  
கை மலர் கூப்ப  
சிரமது பணிய  
சித்திர மதுப் புட்டிக்கு  
மலர் மாலை சூட்டி மயங்கும்  
வாலிப பக்தர்களின்  
வெறிகொண்ட  
வழிபாடு விநோதமே!

கிண்ணியா முத்தாலிப்

பா ரா ட் டு க் கு ரி ய து




## கவிதைப் போட்டி இல 1010



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள்.  
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 30.04.2013

கவிதைப் போட்டி இல. 1010 தினமுரசு வாரமலர்,  
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.  
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### பறிபோகும் மனித தரம்!

நிறத்திலும், நேர்த்தியிலும்  
நித்தம் - நித்தம்  
மது போத்தல்கள்  
மாறி - மாறி - மனிதன்,  
தரத்தையும்- தார் மீகத்தையும்  
விலைக்கு வாங்கி  
விடுகிறது!

நா.ஜெயபாலன், பிபிலை.

### இறுதி மரியாதை

மது போத்தலை வணங்கி  
மதுவுக்குச் செலுத்தும்  
இறுதி மரியாதை இது...  
புன் சிரிப்புடன்  
மதுப் போத்தல் எடுத்தவர்கள்  
மனம் நொந்து  
மரண அடியால் துவண்டு  
துன்பத்தில் அழுகிறார்கள்  
மதுபானம் இல்லை!  
மயானம் அழைத்துச்செல்லும்,  
மரணத்தை துளித்துளியாய்-  
உடலில் செலுத்தும்  
எமன் என்று!

A.பாரிஸ், கட்டுக்கெலியாவ.

### மது(சா)வே வாழ்வு

ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்ற  
பலம் வாக்கு போயாச்சு – இன்று  
மது(சா)வே வாழ்க்கை என்ற  
வாழ்வு இன்று உருவாச்சு  
தாலி கட்ட வந்தவளை தரையுருட்டும்  
இவர்களுக்குப்  
பெண் என்றால் என்னவென்று  
புரியவைத்தும் பயனுமில்லை.

சு.ஜெயக்குமாரி, மண்கும்பான்.

### சந்தேகம்

இது குடிகெடுக்கும்  
மதுவரக்கனுக்கு  
பிரியா விடையா  
அன்றேல்  
போதையூட்டி மகிழ்விக்கும்  
மதுபானங்களுக்கு  
வரவேற்பா?

அ.சந்தியாகோ, கண்டி.

### மதுவொழிப்பு...?

இங்கே இருப்ப தெல்லாம்  
பெருங் குடி(கள்)  
இவற்றை இவர்கள்  
ஒழித்து விற்றால் தான்  
பொலிஸ், பிடி(கள்)  
உத்தரவுப் பத்திரம்  
இப்படியும் பூஜித்து  
விற்கலாம் – ஆனாலும்  
மதுவொழிப்பு(த்) தின மூண்டு.

பாண்டியூர்–பொன் நவநீதன்.

## உங்கள் பக்கம்

### உடன் நடவடிக்கை எடுக்கவும்....!

ஒட்டுசுட்டான் பிரதேச சபையின் ஆளுகைக்குள் உள்ள பகுதியான திருமுருகண்டியில் உள்ள பிள்ளையார் கோவிலைச் சூழ அமைந்துள்ள வியாபார நிலையங்கள் பெரும்பாலும் அவ்வீதி வழியாக போக்குவரத்தில் ஈடுபடுகின்ற மக்களை நம்பியே அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அவ்வீதி வழியாகச் செல்லுகின்ற பேருந்துகளைத் தத்தமது கடைகளுக்கு முன்னால் நிறுத்துவதற்கு ஒவ்வொரு கடை உரிமையாளர்களும் முண்டியடிக்கின்றனர்.

வாகனச் சாரதிகளுக்குப் பல்வேறு சலுகைகளும், அதற்காக வழங்கப்படுவதாகக் கூறப்படுகின்றது. சில சமயங்களில் இவ்வாறு கடைகளின் முன்னால் பேருந்து நிறுத்தப்படுவதால் வாகனங்கள் தமது தரிப்படத்திற்குச் செல்வதற்கு இடையூறாகக் காணப்படுகின்றது.

இதுபற்றி சம்பந்தப்பட்ட கடை உரிமையாளர்களிடம் கேட்டால், அவர்கள் தமது வருமானம் பாதிக்கப்பட்டுவிடும் என்ற கருத்தையே முன்வைக்கின்றார்கள்.

இந்நிலைமை மாறி குறித்த பகுதியில் அமைந்துள்ள அனைத்து வியாபார நிலைய உரிமையாளர்களும் பயனடையும் வகையில் சகல வாகனங்களையும் வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்துவதற்கு ஆவன செய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பல்வேறுபட்ட கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டபோதிலும் உரிய பலன்கள் கிடைக்கவில்லை.

எனவே இவ்விடயத்தை முரசின் உங்கள் பக்கத்தினூடாகக் கவனத்திற்குக் கொண்டுவருகின்றோம். இதன்மூலமாவது உரிய பலன் கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றோம்.

**வர்த்தக நிலைய உரிமையாளர், திருமுருகண்டி.**


மடல்கள் மற்றும்  
ஆக்கங்கள் உட்பட சகல  
தொடர்புகளுக்கும்  
தினமுரசு வாரமலர்  
த.பெ.இல:- 167,  
யாழ்ப்பாணம்.  
தொலைபேசி :-0212223628  
தொலைநகல்  
(Fax): 0212221811  
ஈமெயில்:  
(E-mail):-  
thinamurasu@live.com


## வாசகர் சாலை



### மாற்றம் வேண்டும்!

கலகலப்புக்களும், சூடும் முரசில் நிறையவே இருக்கின்றது. ஆனால் சுவாரசியங்கள் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். பாப்பா முரசு தகவல்கள் சிறுவர்களுக்கு மட்டுமல்ல பெரியவர்களுக்கும் தேவையானதாகவே இருக்கின்றது.

அரசியல் கட்டுரைகள் அருமையாக உள்ளது. 19ஆம் பக்கத்தில் இடம்பெற்ற 'சமூகத்தின் முதுகெலும்புகள்' எனும் கட்டுரையில் யாழ்ப்பாணத்தின் பண்பாடுகள், கலாசாரங்களை அப்பட்டமாக எடுத்துக் கூறியுள்ளார் இரவீந்திரகலா. கலாசாரங்களில் ஏற்படும் பிறழ்வுகளை யதார்த்தமாக நேரில் சென்றுபார்த்தது போன்று கட்டுரை அமைந்தது.

சமூகத்தில் ஏற்படும் சீரழிவுகளிலிருந்து ஒவ்வொரு தனிமனிதனும் எவ்வாறு விடுபட வேண்டும் என்பதை அழகாக எடுத்துச் சொல்லியிருந்தார்.

கு.ஆதர்ஷா திருநெல்வேலி.

### வாழ்த்துக்கள்!

காலங்கள் தோறும்  
காத்திருப்பின்றி கைகளில்  
சேர்ந்திடும் தின முரசே - நீ  
ஆயிரம் காலத்துப் பயிராக - பல்  
ஆயிரம் மலராய் நீ மலர்ந்திட - எமது  
வாழ்த்துக்கள்!

சு.ஜெயகுமாரி, மண்கும்பான்.

### பாராட்டுக்கள்!

ஆலாபனைகளற்ற, அடக்கமான முரசுக்கு அன்பு வணக்கம். நேருக்கு நேர் எதையும் தைரியமாகவும், உண்மையாகவும் எடுத்துரைக்கிறாய். முரசில் சுவாரசியங்களான சில தொடர்களை ஆரம்பிக்கலாம். கல்வி சம்பந்தமானவற்றையும் சேர்த்துக் கொள்ளலாம். அதைவிடுத்து, சில பக்கங்களைத் தவிர மிகுதி எல்லாம் பிரமாதம்தான். வெளிநாட்டு கட்டுரை எழுதும் வேணுகிருஷ்ணா அவர்களுக்கு பாராட்டுக்கள். மிகவும் அற்புதமாகவும், விளக்கமாகவும் எழுதுகிறீர்கள். மீண்டுமொரு முறை எனது பாராட்டுக்கள்.

எஸ்.பிரணவன், மஸ்கெலியா.

### சிந்திக்கத் தூண்டும் சிறந்த கருத்துக்கள்!

தினமுரசின் தீரமிக்க செய்திகள் வாசகர்களை வந்தடையும்போது இதன் நேச நேயர்கள், இதனை வாசித்து அது தன் கருத்துச் சுதந்திரத்தை கையாளும் முறையைக் கண்டுகொள்ளலாம்.

இந்தவகையில் சென்ற 1008ஆவது முரசின் உள்ளேயும் வெளியேயும் என்ற, ஆசிரியர் தலையங்கத்தின் உள்ளடக்கத்தில் உண்மைகள் உலகிற்கு வெளிப்படுத்தப்பட்டன. ஆசிரியர் சொன்னவை அதியுயர் பீடங்கள் சிந்திக்கத் தூண்டும் சிறந்த கருத்துக்கள்

எம்.சி.கலீல், கல்முனை-05.

# அபிவிருத்தியில் முன்னின்று உழைப்பவர்

# எம்.பி. சில்வேஸ்திரி அலென்ரின்



## தென்மராட்சி பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் தெரிவிப்பு

**தென்மராட்சிப் பகுதியின் அபிவிருத்தியிலும் இப்பிரதேச மக்களின் குறைகளை தீர்த்து வைப்பதிலும் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காகவும் உழைத்துக் கொண்டிருப்பவர் பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் என பிரதேச செயலகத் திட்டமிடல் திருமதி இரகுநாதன் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.**

வரணி இடைக்குறிச்சி மாதர் சங்க பரிசளிப்பு விழா மற்றும் கௌரவிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும்போது, மக்கள் படும் துன்ப துயரங்களை நன்கு அறிந்தவராகவும் அவர்களுக்கு தேவையான உதவிகளையும் வழங்குபவராகவும் காணப்படுவதுடன், மக்களின் பிரச்சினைகள் எங்கெங்கெல்லாம் இருக்கின்றனவோ அங்கே சென்று அவர்களுடன் கலந்துரையாடி அவர்களின் பிரச்சினையை தீர்த்துவரும் பாராளுமன்ற உறுப்பினரின் செயற்பாட்டின் ஊடாகவே தென்மராட்சி பிரதேசமானது தன்னிறைவுடைய பிரதேசமாக மாற்றமுடியும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையின் மனித உரிமைகள் விடயத்தில் பிரித்தானியா கவலை தெரிவித்துள்ளது

இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் குறித்து பிரித்தானியா கவலை வெளியிட்டுள்ளது. 2012ம் ஆண்டில் இலங்கை மனித உரிமை நிலை மைகள் திருப்தி அடையும் வகையில் அமையவில்லை என பிரித்தானியா சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த ஆண்டில் பல பாதகமான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது. குறிப்பாக கருத்து சுதந்திர முடக்கம், நீதிமன்றின் சுயாதீனத் தன்மைக்கு எதிராக செயற்படல், ஊடக சுதந்திர முடக்கம் போன்றன தொடர்பில் திருப்தி அடைய முடியாது என பிரித்தானியா தெரிவித்துள்ளது.

சட்டவிரோத ஆட்கடத்தல்கள், மனித உரிமை பாதுகாவலர்கள் மீதான ஒடுக்குமுறைகள் உள்ளிட்ட பாரிய மனித உரிமை மீறல் சம்பவங்கள் 2012ம் ஆண்டிலும் நீடித்ததாக பிரித்தானியா குற்றம் சுமத்தியுள்ளது.

2011ம் ஆண்டில் காணாமல்போன லலித்குமார் மற்றும் குகன் ஆகியோர் தொடர்பில் காத்திரமான விசாரணைகள் நடத்தப்படவில்லை எனவும் மனித உரிமை மேம்பாடு, ஜனநாயகம் போன்றவற்றில் பொதுநலவாய அமைப்புக்களின் கொள்கைகள் கோட்பாடுகளை பின்பற்றுமாறு இலங்கையை வலியுறுத்துவதாக பிரித்தானியா கோரியுள்ளது.

## அகதிகளை திருப்பி அனுப்புகிறது அவுஸ்திரேலியா

அவுஸ்திரேலியாவின் பிரதான துறைமுகமான கரால்டனுக்கு கடந்த வாரம் வந்திறங்கிய இலங்கை அகதிகள் நாடு கடத்தப்படுவர் என அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் பிரண்டன் ஓ கொன்னர் தெரிவித்துள்ளார்.

இவர்களில் 66 பேர் அடங்குவதாக அவர் குறிப்பிட்டார். குறித்த அகதிகளின் படகு நேரடியாக பிரதான துறைமுகத்தை சென்றடைந்த நிலையில் அவர்கள் தொடர்பிலான சட்ட விசாரணைகள் இடம்பெற்றுவருவதாக அவர் கூறியுள்ளார்.

இந்த நிலையில் அவர்கள் நேர்மையான அகதிகளாக இல்லாத பட்சத்தில், உடனடியாக அவர்கள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படவிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவின் சட்டதிட்டங்களை மதிக்கவில்லை என்றால் அகதிகள் திருப்பி அனுப்பப்படுவர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## சகோதரிகள் இருவர் பாலியல் வல்லுறவு

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரிகள் இருவர் பலரினால் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டுள்ளனர். இதன்பேரில் இரு சந்தேக நபர்கள் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மஹவ தெதுரு ஓயா திட்ட அணைக்கட்டுக்கு அருகாமையில் 16 மற்றும் 20 வயதுடைய இவ்விரு யுவதிகளும் முதலில் அவர்களது காதலர்களால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியதன் பின்னர், அவ்விடத்திற்கு மேலும் ஆறுபேர் வந்து அவர்கள் கத்தக் கத்த வல்லுறவு புரிந்துள்ளனர்.

பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டுள்ள இரு சகோதரியரும் குருணாகலை பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருவதுடன், இதுதொடர்பில் சந்தேகத்திற்குரிய நபர்களை கைதுசெய்வதற்காக மஹவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.



# விநோத திருமணம்

"திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன" என்கின்ற இந்த முதுமொழியை தற்பொழுது நடக்கவுள்ள இந்த திருமணத்தைக் குறித்து கற்பனைசெய்து பார்த்தால் "சொர்க்கம் என்ற ஒன்று உண்டா" என்ற சந்தேகம் சிலருக்கு தோன்றக் கூடுகிறது.

பிரிட்டன் வசித்த மார்.ஃபிட்(56) என்பவர் சிறுவனாக இருந்த போது பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் லெஸ்லி. இரண்டு மனைவியின் மூலமாக 5 குழந்தைகளைப் பெற்ற இவருக்கு 50 வயதில் ஓர் விபரீத ஆசை தோன்றியது.

விபரீதத்தின் விளைவாக பாலின மாற்று அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட இவர், பெண்ணாக மாறி தனது பெயரை ஹெலன் மார்.ஃபிட் என்று மாற்றிக் கொண்டார்.


இதேபோல், கேட்டி என்ற பெயருடன் 5 குழந்தைகளுக்கு தாயாக வாழ்ந்த 46 வயது பெண்ணும் தனது விபரீத ஆசையால் பாலியல் மாற்று அறுவைசிகிச்சை செய்து ஆணாக மாறினார்.

அத்துடன் அவரவர் வேலையை பார்த்துக் கொண்டு இருந்து விட்டால், இவர்கள் செய்திகளில் இடம்பெற இயலாது அல்லவா? ஆகையால் "காலத்துக்கும் மாறாதது மாறிவரும் மாற்றம் மட்டும் தான்" என்ற கோட்பாட்டின்படி, பாலின மாற்றத்திற்கு பின்னர் மாறுபட்ட ஓர் தாம்பத்தியத்தை சுவைக்க துடித்த இருவரும் விதிவசத்தால் ஒருவரை ஒருவர் சந்தித்து காதல் வயப்பட்டுள்ளனர்.

காதல் முற்றி, கல்யாண நிலைக்கு சென்றுவிட்ட நிலையில் விரைவில் ஹெலன் மார்.ஃபிட், ஃபெலிக்ஸ் லாஸ் இணையர் தம்பதியராக மோதிரம் மாற்றிக் கொள்ள தீர்மானித்துள்ளனர்.

# உள்ளாடை தெரிய ஜீன்ஸ் அணியத் தடை!





அமெரிக்காவின், லூசியானா மாகாணத்தில், உள்ளாடை தெரியும்படி இடுப்புக்கு கீழ் ஜீன்ஸ் அணியத் தடை விதிக்கப்பட்டு உள்ளது. இளைஞர்கள் உள்ளாடை தெரியும்படி, இடுப்புக்கு கீழ் ஜீன்ஸ் அணிவது, தற்போதைய பெஷனாக உள்ளது. இளம்பெண்களும் இதற்கு விதிவிலக்கல்ல. அமெரிக்காவின், லூசியானா மாகாணத்தில் உள்ள டெரிபோன் பரிஷ் என்ற நகரில், உள்ளாடை தெரியும்படி ஜீன்ஸ் அணிவதை, அந்த ஊர் பெரியவர்கள், ஒழுக்கக் குறைபாடாக கருதுகின்றனர். உள்ளாடை தெரியும்படி ஜீன்ஸ் அணிந்து செல்லும் பெண்ணுக்கு பின், பல இளைஞர்கள் சுற்றுவதாக புகார் கூறப்பட்டது.

இதையடுத்து, பரிஷ் நகரில், ஒழுக்கக் குறைபாடாக ஜீன்ஸ் அணிபவர்களுக்கு அபராதம் விதிப்பது தொடர்பாக தீர்மானம் கொண்டு வரப்பட்டது. தீர்மானத்தை ஆதரித்து எட்டு உறுப்பினர்களும், எதிர்த்து ஒருவரும் வாக்குப் போட்டார். தீர்மானம் வெற்றி பெற்றதால், உள்ளாடை தெரியும்படி ஜீன்ஸ் அணிய தடை விதிக்கும் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுவிட்டது. முதல் முறையாக இந்த தவறு செய்பவர்களுக்கு, 2,500 ரூபாய் அபராதமும், இரண்டாவது முறை தவறு செய்தால், 5000 ரூபாய் அபராதம் மற்றும், 16 மணி நேரம், சமூக சேவையும் செய்ய வேண்டும், என்ற தண்டனை வரையறுக்கப்பட்டு உள்ளது.

# 35 ஆண்டுகளுக்கு முன் தவறிய பணப்பை உரியவரிடம்...!



பிரிட்டனில், 35 ஆண்டுகளுக்கு முன் தவறவிட்ட பணப்பை, தற்போது உரியவரிடம் கிடைத்து உள்ளது. பிரிட்டனின் கேம்பிரிட்ஜ் ஷையர் பகுதியைச் சேர்ந்தவர் ரிச்சர்ட் லேன், 58. இவர், 1978ம் ஆண்டு, பொழுதுபோக்கு நிலையத்தில், தன்னுடைய பணப்பையை தவறவிட்டார். "இனி அது கிடைக்காது" என, முடிவு செய்தார் ரிச்சர்ட்.

சமீபத்தில், கேம்பிரிட்ஜ் ஷையர் பகுதியில் உள்ள, பொழுதுபோக்கு நிலையம் இடிக்கப்பட்டு, புதுக் கட்டடம் கட்டப்பட்டது. அப்போது, லிப்ட் அருகே, ஒரு பணப்பை கிடப்பதை பார்த்த கட்டட ஒப்பந்தகாரர், அதை பொலிசிடம் ஒப்படைத்தார். அவர்கள், இந்த பணப்பை குறித்த அறிவிப்பை வெளியிட்டனர். இந்த அறிவிப்பை, ரிச்சர்ட்டின் தாயார் கேட்டார். உடனே, மகனுக்கு இதுகுறித்து தெரியப்படுத்தினார். பணப்பையை பெற்றுக்கொண்ட ரிச்சர்ட்டுக்கு, ஆச்சரியம் தாங்க முடியவில்லை என பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# முதல் முறையாக தேர்தலில் போட்டியிடும் திருநங்கை!

பாகிஸ்தானின் வரலாற்றிலேயே முதல்முறையாக திருநங்கை ஒருவர் தேர்தலில் போட்டியிட தேர்தல் ஆணையம் அனுமதி அளித்துள்ளது. கராச்சி தொகுதியில் போட்டியிட, பிந்தியா ராணா என்பவர் தாக்கல் செய்த வேட்பு மனுவை, தேர்தல் ஆணையம் ஏற்றுக் கொண்டுள்ளது. இது குறித்துப் பேசிய பிந்தியா ராணா, பாகிஸ்தான் அரசியல் பற்றி நான் இதுவரை கவலைப்பட்டதில்லை. ஆனால், தேர்தலில் மாபியா, மிகப்பெரிய தொழிலதிபர்கள், அரசியல்வாதிகள், பணக்காரர்கள் மட்டும் போட்டியிடும்போது பொதுமக்களும் அரசியலில் ஈடுபடவேண்டும் என்று கருதியே இந்த முடிவு எடுத்துள்ளேன். பாகிஸ்தானில் திருநங்கைகள் அனுபவிக்கும் கஷ்டங்களை எடுத்துரைப்பேன் என்று கூறியுள்ளார்.



வாரமலர்
தினமுரசு

த.பெ.இல:- 167. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

## வாய்ச்சொல்லில் வீரரடி!

"அரசுக்கு மனத்துணிவு இருந்தால் வருகின்ற ஜூன் மாதமே வட மாகாண சபைத் தேர்தலை அரசு நடத்தட்டும். அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு களமிறங்கத் தயாராகவே இருக்கின்றது" இப்படி கடந்த வாரம் கூட்டமைப்பு பகிரங்கமாக அறிவித்திருந்தது.

இதைக் கேட்ட தன்மானத் தமிழர்களுக்கு புல்லரிப்பு ஏற்பட்டு உடம்பெல்லாம் சாம்பல் பூசிக் கொண்டு திமிறிக் கொண்டு இருந்திருப்பார்கள்.

வட மாகாண சபை தேர்தல் நடைபெற்றால் கூட்டமைப்புக்கே வெற்றி வாய்ப்பு அதிகம். அதனால் அரசு அஞ்சுகின்றது என்று தமிழ்த் தேசிய ஊடகங்கள் பரப்புரையை ஆரம்பித்திருக்கின்றன.

இதுநாள்வரை கூட்டமைப்புக்குள் ஒற்றுமையில்லை, தமிழ் மக்களை கூட்டமைப்பின் உள் முரண்பாடுகள் ஏமாற்றமடையச் செய்துள்ளன என்றெல்லாம் திட்டித் தீர்த்த ஊடகங்கள் வழமைபோல் தேர்தல் என்றதும் பிளேட்டை மாற்றத் தொடங்கியிருக்கின்றன.

இவ்வளவும் ஏன் நடக்கின்றது? " ஆடத்தெரியாதவன் மேடை சரியல்லை" என்பது போல் ஏற்கெனவே பாராளுமன்ற அதிகாரங்களையும், உள்ளூராட்சி அதிகாரங்களையும், மாகாண சபை அதிகாரங்களையும் கூட்டமைப்பு மலடாக்கிவிட்டுள்ள நிலையில் இவர்களுக்கு மாகாண சபை அதிகாரங்கள் மீது என்ன அக்கறை?

செப்டெம்பர் மாதமே வட மாகாண சபை தேர்தலை நடத்தப்போவதாக அரசாங்கம் திட்டவட்டமாக அறிவித்துள்ள போது கூட்டமைப்புக்கு என்ன அவசரம்?

ஒருவேளை அமெரிக்கா போன்ற நாடுகளின் நிதி உதவிகள் கிடைக்கும் வாய்ப்புக்காக அவசரப்படுகின்றார்களா? அல்லது புலம் புலிகளின் பணம் கூட்டமைப்புக்காக வாக்குகளை சேகரிக்க தயாராகிக் கொண்டிருக்கின்றதா? அல்லது கூட்டமைப்பை பதிவுசெய்வதற்கு முன்னர் வட மாகாண சபை தேர்தலில் இறங்கி விட்டால் அந்தப் பேச்சை சில வருடங்களுக்கு மரணப்படுக்கையில் போட்டுவிடலாம் என்ற அவசரமா?

ஏன் இத்தனை கேள்விகளை கேட்க வேண்டியுள்ளதென்றால், கூட்டமைப்பின் அவசரத்தில் தமிழ் மக்களுக்கான நன்மையோ, அழிவுற்ற தேசத்தின் துரித மீள் எழுச்சிக்கான வேலைத்திட்டமோ இருப்பதாகத் தெரியவில்லை.

கூட்டமைப்பை நோக்கி பாரதியாரின் இந்தக் கவிதை வரிகளை எத்தனை முறை கூறினாலும் தகும்.

நெஞ்சி லூரமுமின்றி
நேர்மைத் திறமுமின்றி
வஞ்சனை செய்வாரடி கிளியே
வாய்ச் சொல்லில் வீரரடி.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

-பிரகஸ்பதி-





# மட்டு. இரட்டைக் கொலைகளின் பின்னணி

## அதிர்ச்சியூட்டும் தகவல்

### மகளும் பாடசாலை நண்பர்களுமே கொலையாளிகள்.

**கொழும்பிலிருந்து** விசாரணை நடத்தவேண்டிய சூழல் மட்டக்களப்பு செங்கலடியில் நடைபெற்ற இரட்டைக் கொலையால் ஏற்பட்டிருந்தது. இந்தக் கொலையும் விசாரணையும் எவ்வாறிருக்கிறது என்பது பற்றியே இந்த வாரம் ஆராயவிருக்கிறோம்.

செங்கலடி பதுளை வீதிச் சந்திக்கருகில் கணவனும் மனைவியும் கொடூரமான முறையில் ஏப்ரல் 8ஆம் திகதி அதிகாலை படுக்கையில் வைத்துக் கொலை செய்யப்பட்டிருந்தனர். கடை ஒன்றின் உரிமையாளரான சிவகுரு ரகு (வயது 48) மற்றும் அவரது மனைவியான ரகு விப்ரா (வயது 41) ஆகியோரே இவ்வாறு வெட்டிக் கொலை செய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் தங்களது வீட்டில் உறங்கிக்கொண்டிருந்த வேளையிலேயே இந்த கொலைச் சம்பவம் இடம்பெற்றதாகவும் ஏறாவூர் பொலிசார் கூறினர்.

இக்கொலை தொடர்பான விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டிருந்த நிலையில் தடயங்கள், மற்றும் குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பதில் பெரும் சிக்கல் நிலை ஒன்று காணப்பட்டது.

குற்றங்கள் இப்படி நடந்திருக்கலாம், அப்படி நடந்திருக்கலாம் என்ற விளக்கங்களுக்கு மத்தியில் இரண்டு பெண் பிள்ளைகளைக் கொண்ட கொலை செய்யப்பட்ட தம்பதியினரின் மூத்த மகள் முன்னர் திருமணம் செய்திருந்த மாப்பிள்ளையால் கொலை மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்ற வகையில் ஒரு பக்க விசாரணைகள் முடக்கி விடப்பட்டிருந்தன. ஆனால் அதனைவிட வேறு வழிகளும் தேடப்பட்டுக் கொண்டிருந்தன. இந்த இரட்டைக் கொலை நடைபெற்ற இடத்திற்கு 8ஆம் திகதி காலை கிழக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர சென்று பார்வையிட்டிருந்தார்.

கொலை செய்யப்பட்டமையானது, வீட்டுக்கு வெளியே இருந்து கொலை செய்வதற்காக வந்ததற்கான எந்தவித அடையாளங்களும் இருந்திருக்கவில்லை. ஆனால் கொலை செய்யப்பட்டிருக்கிறது, இருவரும் படுக்கையிலேயே காணப்பட்டனர்.

சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு விசேட முறையில் விசாரணைகள் நடத்தப்பட்டன. அதனையடுத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை இரட்டைப் படுகொலைகள் தொடர்பாக அவருடைய மகள் உட்பட 4 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் நால்வரும் மாணவர்கள் என்பதே திடுக்கிடும் தகவலாக இருக்கிறது. அதாவது கொலை செய்யப்பட்டவர்களின் இளைய மகளும், அவளுடைய சக பாடசாலை நண்பர்களுமே கொலைச் சந்தேக நபர்களாகும். இந்த இரட்டைக்கொலைகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக விசேட புலனாய்வாளர்கள் கொழும்பிலிருந்து வரவழைக்கப் பட்டிருந்த குழுவினராலேயே இந்தக் கொலையாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

தமது தாயும் தந்தையும், செங்கலடிச் சந்தியிலுள்ள அவர்களுடைய வர்த்தக நிலையத்துக்குச் சென்றதும் தனிமையில் வீட்டில் இருக்கும் பிள்ளைகளின் விளையாட்டின் விபரீதம்தான் இவ்வாறான நிலை ஒன்றை கொண்டு வந்து விட்டிருக்கிறது என பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கும் நிலை ஒன்று தற்போது உருவாகியிருக்கிறது.

கடந்த 8ஆம் திகதி இரட்டைக் கொலை நடைபெற்றதையடுத்து விசாரணைகள் பல்வேறு வழிகளிலும் முடக்கிவிடப்பட்டிருந்தாலும், யாரும் கைது செய்யப்படவில்லை என்றிருந்த வேளையில், இரட்டைக் கொலைச் சம்பவம் தொடர்பாக அதிர்ச்சியூட்டும் பல்வேறு தகவல்கள் வெளியாகியிருந்தன.

இச்சம்பவம் குறித்த நீதிமன்ற விசாரணைகள் கடந்த புதன்கிழமை மட்டக்களப்பு நீதிமன்ற நீதிபதி கே. கருணாகரன் முன்னிலையில் மஜிஸ்திரேட் நீதிமன்றில் இடம்பெற்றபோதே அந்தத் தகவல்கள் வெளியாகின.

கொலை செய்யப்பட்ட பெண்ணின் தந்தை பொன்னுத்துரை சுந்தரமூர்த்தி சாட்சியம் அளிக்கையில், சம்பவம் தினம் நள்ளிரவு வேளையில் அடிக்கும் சத்தம் கேட்டது. எழுந்து முன்னால் இருந்த மகளின் வீட்டைப் பார்த்தேன். ஆள் அலறும் சத்தமும் வந்தது. உடனே குசினிப் பக்கம் சென்றேன். கதவுகள் மூடிய நிலையிலேயே இருந்தன. யன்னல் ஊடாக படுக்கையறையைப் பார்த்தேன். மருமகனுக்கு ஒருவன் அடித்துக் கொண்டிருந்தான்.

மின்விளக்கு எரிந்தபோதிலும் யன்னலின் சிறிய துவாரத்தினால் அங்கு அடித்துக் கொண்டிருந்த நபரை அடையாளங்காண முடியவில்லை. நான் அதிர்ச்சியடைந்து செய்வதறியாது அங்குமிங்கும் ஓடினேன்.

அப்படியிருக்க கதவு மூடும் தடியொன்று விழும் சத்தம் கேட்டது. அதையடுத்து ஒரு நபர் ஓடிச் செல்வதை காணமுடிந்தது. நான் மகளின் வீட்டிற்குச் சென்று தம்பி தம்பி என்று மருமகனைக் கூப்பிட்டேன். எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. பின்னர் மகள், மகள் கூவியழைத்தேன். பதில் எதுவும் இல்லை.

அப்படியிருக்க அவ்வீட்டில் உறங்கிய பேத்தி எழுந்து வந்து கூப்பிட்டாள். நான் சத்தமிட்டு குசினிப் பக்க கதவைத் திறக்கச் சொன்னேன். திறந்து என்ன அம்மப்பா என்று கேட்டாள். ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை என்று கூறிவிட்டு மகளின் படுக்கையறைக்குச் சென்றேன்.

அங்கு மகளும் மருமகனும் இரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்தனர். உடனே அக்கம் பக்கத்தவர்களை அழைத்தேன். எவரும் எழுந்து வரவில்லை. முன்னால் உள்ள ஆஸ்பத்திரிக்குச் சென்று நிலைமையைக் கூறினேன். அங்கு பொலிஸாருக்கு அறிவிக்கும்படி தெரிவித்தார்கள். ஓடோடிச் சென்று செங்கலடி சந்தியில் கடமையிலிருந்த பொலிஸாரிடம் சம்பவத்தை கூறினேன். விரைந்து வந்து பார்த்தார்கள் என்று கூறினார்.

அதேநேரம், மகள் தக்சனா (வயது 16) நீதிமன்றில் சாட்சியம் அளிக்கையில், கடந்த 7ஆம் திகதியன்று மாலை 4.30 மணியளவில் அப்பா, அம்மா, அக்கா அனைவரும் உடுப்பு எடுக்க கடைக்குச் சென்று அன்றிரவு வீட்டிற்கு வந்தோம்.

அக்கா அம்மம்மாவின் வீட்டில் உறங்கச் சென்றார். எங்கள் அம்மா அக்காவுக்கு இரவுச் சாப்பாட்டிற்காக மீன் கறி எடுத்துச் சென்றார். அக்கா கொஞ்சம் சாப்பிட்டுப் பார்த்து விட்டு கறி கசக்குது என்றார். அதற்கு அம்மா உனக்கு இதுதான் கதை என்றார். அதன் பின்னர் அப்பாவும் அக்கறியை சாப்பிட்டுப் பார்த்துவிட்டு ஓம் கசக்கிறதுதான் என்றதும் அக்கறியை, வீசிவிட்டோம். அதன் பிறகு அம்மம்மாவின் வீட்டில் சமைத்த ஆட்டிறைச்சிக் கறியை சாப்பிட்டோம்.

அத்தினம் நள்ளிரவு வேளையில் அலறல் சத்தம் கேட்டது. நுளம்பு வலைக்குள்ளிருந்தவாறு அம்மாவைக் கூப்பிட்டேன். அப்போது வாசலில் நின்று அம்மப்பா என்னைக் கூப்பிட்டு குசினிக் கதவை திறக்குமாறு கேட்டார், திறந்தேன். அதன் பின்னர் படுக்கையறையை அவதானித்தேன். அம்மா கட்டிலிலும், அப்பா நிலத்திலும் இரத்த வெள்ளத்தில் இறந்து காணப்பட்டனர் எனக் கூறியிருந்தார்.

இந்தச் சாட்சியங்கள் இந்த இரட்டைக் கொலையில் முக்கிய திருப்பமாக அமைந்திருந்தது. இதனையடுத்து நடைபெற்ற விசாரணைகளின் முடிவு இளைய மகளும் அவரது நண்பர்களும் சேர்ந்து தீட்டியதே இந்த கொலைத்திட்டம் என்பதும் தெரியவந்திருக்கிறது.

பிள்ளைகள் எவ்வளவு மோசமான முறையில் சிந்திக்கின்றனர் என்பதும் அதனால் எவ்வாறான விபரீதங்கள் ஏற்படுகின்றன என்பதும் இந்த பாவமான கொலைகளினால் தெரிய வந்திருக்கிறது. அதேநேரம் கொலைக்கான காரணங்கள் நம்முடைய வீட்டிலேயே உருவாகின்றன என்பதற்கும் இது ஒரு சான்றாக அமைகிறது.

தனது தாய் பிள்ளை செய்தால் பேசுகிறார் என்பாதற்காக இந்தக் கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகவும், தந்தை இடையில் குறுக்கிட்டதால் தந்தையும் மரணமாக வேண்டி ஏற்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

அன்பு, பாசம், பணிவு, அடக்கம் என நல்ல பண்புகள் அடுக் கப்பட்டு பிள்ளைகளுக்குக் கற்பிக்கப்பட்டாலும் அவற்றினை கடைப்பிடிப்பதில் பிள்ளைகளுக்கு உள்ள சிரமம் எவ்வளவுக்கு மோசமானதாக இருக்கிறது என்பது இந்த கொலையினால் தெரியவந்திருக்கிறது.

அதேநேரம், பிள்ளைகளை தனிமையில் அதுவும் எல்லா வசதிகளுடனும் வீட்டில் விட்டுச் செல்லும் பெற்றோருக்கும் இந்தக் கொலைகள் நல்லதொரு பாடமாக அமைந்திருக்கின்றன என்றே சொல்லிக் கொள்ள வேண்டும்.

குற்றச்செயல்களே பாதுகாப்புக்குப் பிரச்சி னைகளாக இருக்கின்றன என்பது எல்லோருக்கும் தெரிந்து இருந்தாலும் வசதிகளின் அதிகரிப்பும் வாய்ப்புகளின் சந்தர்ப்பங்களும், தொலைக்காட்சிகளும், திரைப்படங்களும் கொண்டு வந்திருக்கும் வீணான மோசமான நிலைக்கு நாம் எல்லோருமே பொறுப் பேற்றாக வேண்டும். அந்தவகையில் அடுத்த வாரம் மட்டக்களப்பின் விபச்சாரக் கலாசாரம் பற்றி ஆராயலாம்.



(முரசு 1008 இல் வெளியாகிய கட்டுரையின் தொடர்ச்சி...)

# இந்துக்களது மெய்ஞ்ஞான சிந்தனைகளே! விஞ்ஞானத்தின் முன்னோடி!


### கண்டுபிடிப்பு என்பது என்ன?

விஞ்ஞானக் கண்டுபிடிப்பு புதிதாக எதனையும் இப்பூவுலகில் தோற்றுவிப்ப தல்ல. ஏற்கனவே உள்ளவற்றைக் கண்டு பிடித்து வடிவமாற்றம் செய்து, அதனை மனிதர்களின் வாழ்வியல் தேவைகளிற்குப் பயன்படுத்திவரும் ஒரு தொடர் செயற்பாட்டு முறைமையாகும். 'விசை' என்ற சக்தியை எடுத்துக்கொண்டால், இது பல்வேறு வடிவங் களில் பிரபஞ்சம் எங்கும் நிறைந்து காணப் படுகின்றது. அதனை தொழில்நுட்ப வல்லு நர்கள் வாகனத்தைச் செலுத்துவதற்கும், மோட்டாரை இயக்குவதற்கும் மின்னை உற்பத்தி செய்வதற்கும் ரொக்கட்டை விண்ணுக்குச் செலுத்துவதற்கும் பயன்படுத்தப்படுகின்றன.

அவ்வாறே மின்காந்த அலைகள் (Waves) இப்பிரபஞ்சமெங்கும் நிறைந்து காணப்படுகின்றன. அதனை உரியமுறை யில் பயன்படுத்தி விஞ்ஞானிகள் றேடியோ வாகவும், தொலைபேசியாகவும், தொலைக் காட்சியாகவும் செயற்பட வைக்கின்றனர். விஞ்ஞானத்தின் இந்த அடிப்படைத் தத்துவத்தை உண்மையினை தமிழர் தம் பெரும் தத்துவமான சைவ சித்தாந்தம் 'உள்ளது போகாது; இல்லாதது வராது' எனக் கூறியிருப்பது சிந்திக்கத்தக்கது.

### புவியீர்ப்புத் தத்துவம்

நாம் வாழும் இந்தப் பூமிக்குப் புவியீர்ப்புச் சக்தி உண்டு என்பதை சேர் ஜசாக் நியூட்டன் என்ற விஞ்ஞானி கண்டுபிடித்ததாக அறிகி




றோம். ஆனால் இற்றைக்கு 5000ஆம் ஆண்டுகளிற்கு முன்பே தோற்றம் பெற்ற இந்துக்களது வேதங்களின் உட்பிரிவுகளில் ஒன்றான உபநிடதத்தில் இந்தச் செய்தி கூறப்பட்டிருப்பதனைக் காணலாம். பிரஸ்தான உபநிடதத்திலே இருவிதமான சக்திகள் பற்றிப் பேசப்பட்டுள்ளன. ஒன்று பிரதான சக்தி, இது எதிர்ப்பு சக்தி எனப்படுகிறது. மற்றது 'அபான சக்தி' இது ஈர்ப்புச் சக்தி எனப்படு கிறது. இந்த ஈர்ப்புச் சக்தியினையே நியூட்டன் என்ற விஞ்ஞானி பிற்காலத்தில் கண்டு பிடித்துள்ளார்.

கோள்களின் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்த பிரபல விஞ்ஞானி கலிலியோ கலிலி, பூமியும் மற்றக் கிரகங்களும் சூரியனைச் சுற்றி வருகின்றன. உண்மையினைக் கண்டு பிடித்துள்ளதாக விஞ்ஞான உலகம் நம்புகிறது. ஆனால் இவருக்குப் பல நூற்றாண்டுகளிற்கு முன்பே வாழ்ந்த இந்திய வானவியல் மேதை யான ஆரியப்பட்டர், பூமி சூரியனைச் சுற்றி வருவதை 'லாகவ கவுரவா' எனக் குறிப்பிட் டுள்ளார். இதன் கருத்து யாதெனில், ஒரு சிறிய அமைப்பானது பெரிய அமைப்பினால் ஈர்க்கப்பட்டுச் சுற்றிவருவது என்பதாகும். மேலும் வேதங்களின் உட்பிரிவுகளில் ஒன்றான ஆத்நேயப் பிராமணம் "சூரியன் உதிப்பதுமில்லை, மறைவதுமில்லை" என்றும், பூமி தன்னுடைய அச்சில் தன்னைத் தானே சுற்றிக் கொள்வதால் இரவு பகல் தோற்றம் பெறுகிறது எனவும் குறிப்பிட் டுள்ளது. இதனையே ஐரோப்பிய விஞ்ஞானி கோபர் நிக்கல், "சூரியன் நிலையாக இருக்கிறது. பூமிதான் சூரியனைச் சுற்றி வருகிறது." என்று கண்டுபிடித்துக் கூறியுள்ளார்.

### இந்து ஆலயமும் கோள்களும்

இந்துசமயத்தைப் பொறுத்தவரை ஆலய வழிபாடு முதன்மையானது. அந்த ஆலயத்தில் வான மண்டலத்திலுள்ள நவகோள்களிற்கு பிரதான இடம் கொடுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். நவகோள்களை நவக்கிரகங்களாக



பிரதிஷ்டை செய்து வழிபட்டும் பூசித்தும் வருவது இந்துக்களது மரபாகும். இதற்குக் காரணம் நவக்கிரகங்களின் தாக்கத்திலிருந்து மனிதன் தன்னைக் காலத்திற்குக் காலம் காத்துக் கொள்ளவேண்டும் என்பதற்காகவே. விஞ்ஞானிகளும் கோள்களின் செயற்பாடு களினால் காலத்துக்குக் காலம் பூமியில் பல மாறுதல் ஏற்படுகின்றன என்பதை ஏற்றுக் கொண்டுள்ளனர். கடும்மழை, வெள்ளப் பெருக்கு, கடல் கொந்தளிப்பு, சூறாவளி முதலான ஏற்படுவதாகக் கண்டுபிடித்துள்ளனர். அமாவாசையில் கடல் கொந்தளிப்பதும், பூரணையில் கடல் அமைதியடைவதும் கோள்களின் செயற்பாடுகளினா லேயே என்பது இந்துக்கள் பல்லாயிரம் வருடங்களிற்கு முன்பே கண்டுபிடித் துள்ளனர். வேதகால மக்கள் இயற்கைச் சக்திகளான இடி, மின்னல், காற்று, மழையினை வழிபட்டுள்ளனர் என்ற செய்தியினையும் இங்கு நாம் நோக்கலாம்.

இந்து சமயத்தில் சிவசக்தி வழிபாடு பிரபல்ய மானது மட்டுமன்றி, மிகவும் முக்கியமானது மாகும். இறைவனைச் சிவனாகவும், சக்தியாக வும் கண்டுவழிபட்டவர்கள் இந்துக்கள். "சிவமில்லையேல் சக்தியில்லை, சக்தியில்லை யேல் சிவமில்லை" என்பதே இந்து சமயத் தத்துவம். இதன் வடிவமாக சிவமூர்த்தங்களில் ஒன்றான 'அர்த்தநாரீஸ்வரர் வடிவம் விளங்கு கிறது. விஞ்ஞானிகள் கூறும் அணுத் தத்துவத் தின் குறியீடாகவும், விளக்கமாகவுமே இவ் வடிவம் காணப்படுகிறது. என்பதை அணு பற்றிய விஞ்ஞானிகளின் விளக்கத்தைக் கொண்டு அறிந்துகொள்ளலாம்.

அணுத் தத்துவத்தைக் கண்டுபிடித்துக் கூறியவர் டால்டன் என்ற விஞ்ஞானி. பொருள் களின் பிரிக்க முடியாத மிகச் சிறிய பகுதியே! அணு என்றார். அந்த அணுவை உடைக்காதே என்றும் சொன்னார். ஆனால் அவரின் பின்வந்த விஞ்ஞானிகள் அணுவை உடைத்து, அதன் சக்தியை ஆக்க, அழிவுத் தேவைகளிற்குப் பயன்படுத்தி வருகின்றனர். அணுவின் அமைப்பானது மின்துகள்களால் ஆனாது எனவும் புரோத்திரன் எனப்படும் பொசிட்டிவ் துகள்களும், எலற்ரோன் எனப்படும் நெகடிவ் துகள்களும் அந்த அமைப்பினுள் காணப்படு கின்றது எனவும், இரண்டும் ஓர் எல்லையில் சுழன்றுகொண்டிருப்பதாகவும் விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

அணுவின் அமைப்பிலுள்ள புரோத்திரனை யும், எலத்திரனையும்தான் இந்துக்கள் தெய்வீக நிலைப்படுத்திக் குறியீட்டுத் தன்மையில் சிவ சக்தியாக வழிபட்டு வந்துள்ளனர் என்பதைப் புராணங்கள் தெரிவிக்கின்றன. சிவத்தை பொசிட்டிவ் சக்தியாகவும் (புரோத்திரன்) உமையை நெக்கடிவ் சக்தியாகவும் (எலத்திரன்) வழிபட்டுள்ளனர். அணுக்கட்டமைப்பில் எலத்திரனின் பங்கு முக்கியமானது. செயலாற்றுவது அதுதான். படைப்பு சக்தியைச் சார்ந்திருப்பது. அதற்கு ஆதாரமாக சிவன் இருக்கிறான் எனக் கூறப்படுகிறது.

இந்தப் படைப்புத் தத்துவத்தையே அபிராமிப் பட்டர் 'ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டமெல்லாம் பூத்தாளை' எனக் குறிப்பிடுவர். சிவத்துள் சக்தி அடங்கும் என்பதும் இந்து சமயத் தத்துவமாகும்!.

மேலும் அணுக்கட்டமைப்பைச் சிதைக்கும் போது, அதனுள்ளிருந்து பிரமாண்டமான சக்தி வெளிப்படுவதாகவும் விஞ்ஞானிகள் தெரிவித் திருந்தனர். சிவன் ஊழியக் காலத்தில் உருத்தி ரனாக வடிவெடுத்து ஊழியத்தாண்டவும் புரிந்து அழித்தல் தொழிலை மேற்கொள்வதாக சைவசித் தாந்தம் கூறுகிறது. இதனை ருத்திர தாண்டவம் என சிவாகமங்கள் கூறுகின்றன. அணுத் தத்துவத்தின் பேருண்மையை உணர்ந்த இந்து மெய்ஞானிகள் அதனைத் தெய்வீக நிலைப்படுத்திப் பார்ப்பதிலும், வழிபடுவதிலும் மக்களை நல்வழிப்படுத்தியும் வந்தனர்.

சிவமூர்த்தங்களில் நடராஜர் மூர்த்தமும் முக்கியமானது. இந்துக்களது சிறந்த கலை வடிவமாகவும், சைவசித்தாந்தம் கூறும் ஐந்தொழில் தத்துவத்தை விளக்கும் மூர்த்தமாகவும் இருந்துவருகிறது. இதுவும் விஞ்ஞானிகளின் அணுத்தத்துவத்தை விளக்குவதாக அமைந்துள்ளது.

விஞ்ஞானிகள் கூறும் வெடித்துச் சிதறும் (Big Bang) தத்துவத்தின் வெளிப்பாடாக, அதன் குறியீடாக இந்த நடராஜத் திருவுருவம் காணப் படுகிறது. இதனை கலாநிதி ஆனந்தகுமாரசுவாமி



தனது 'Dance of siva' என்ற நூலில் விளக்கி யுள்ளார். நடராஜத் திருவுருவத்தில் உடுக்கை ஏந்திய கை ஓங்கார ஒலியையும், (வெடித்துச் சிதறல் ஏற்பட்டபோது தோன்றிய ஒலி) அது பிரபஞ்சப் படைப்புத் தத்துவத்தையும் விளக்கும். இந்தப் பிரபஞ்சம் பெரு வெடிப்புச் சிதறல் மூலம் (Big bang) தோன்றியது என்ற விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்புக்கு மூலமாயிருப்பதைக் காணலாம்.

மேலும் நடராஜன் திருவுருவத்தின் தலை முடிச் சிதறல் அணு வெடிப்புச் சிதறலை விளக்கும்! அவரது நடனக்கோலம் அணு வினுள்ளே உள்ள அணுத்துகள்களின் தொடர்ச்சியான செயற்பாட்டை விளக்கும். அதாவது அணுவினுள்ளே உள்ள மின் அணுத்துகள்களின் வடிவமே! நடராஜர் நடனத் திருக்கோலம் என ஆனந்தக் குமாரசுவாமி விளக்கியுள்ளார்.

அணுகுண்டைக் கண்டுபிடித்தவர் ஜன்ஸ்டைன் என்ற விஞ்ஞானி. இவர் தனது கடைசிக் காலத்தில் பகவத்கீதையைக் கற்கும் வாய்ப்பைப் பெற்றிருந்தார் எனவும், முன்பே கீதையைக் கற்பதற்கு வாய்ப்புக் கிடைத்திருப்பின் தனது கண்டுபிடிப்பு புதிய பரிமாணத்தில் சென்றிருக்கும் என்று தெரிவித் துள்ளார். இதற்குக் காரணம் பகவத்கீதையில் வரும் 'விஷ்வரூப தரிசனம்" அணுகுண்டு வெடிப்பின்போது ஏற்படும் சுவாலையை ஒத்துக் காணப்பட்டமையே ஆகும். ஆகவே அணுத் தத்துவம் பற்றி இந்துக்கள் முன்பே அறிந்திருந்தனர் என்பதையும், அதனைக் கடவுளாகப் போற்றி வழிபட்டனர் என்பதையும் அறிந்துகொள்ளலாம்.

இந்துக்கள் இறைவன் அணுவுக்குள் அணு-வாகவும், அணுவுக்கு அப்பாலும் உள்ளனர். என்ற கொள்கையுடையவர்கள். "அவனின்றி ஓர் அணுவும் அசையாது" என்று இந்துக்கள் கூறுவதும் இந்த அணுத் தத்துவத்தையே!

மிக அண்மையில் சுவிச்சர்லாந்திலுள்ள ஐரோப்பிய அணு ஆராய்ச்சி நிலையம் ஹிக்போசன் அல்லது கடவுளின் துணிக்கை என்ற புதிய விஞ்ஞானக் கண்டுபிடிப்புப் பற்றிக் கூறியிருந்தது. இது ஒருவிதத்தில் கடவுளின் இருப்புத் தோற்றம், பற்றிய ஆராய்ச்சியாகவே கருதப்படுகிறது.

இந்த ஆய்வுபற்றி, இந்த ஆய்வு நிறுவனத் தில் பணிபுரியும் இந்திய விஞ்ஞானியான ராஜீவ்லோஜன் கூறுகையில், எமது அணியி லுள்ள ஹிக்போசன் என்பவர் கண்டுபிடித் துள்ள கடவுளின் துணிக்கையைக் கண்டு பிடிப்பதற்குப் பயன்படுத்திய இயந்திரத்தைக் கண்டுபிடிக்க இருபது வருடங்கள் சென்றுள்ள தெனவும், பிரபஞ்சத்தின் மர்மம் பற்றித் தமக்கு எதுவும் தெரியாது எனவும் 20 வருடத்திற்கு மேலான ஆய்வில் பிரபஞ்சத்தின் 1/4 பகுதியைக் கூட ஆய்வுக்குட்படுத்த முடியாதிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

ஆனால் இறைவனின் இருப்புப் பற்றியும், பிரபஞ்சத் தோற்றம் பற்றியும், வேதாகமங்கள் பல ஆயிரம் ஆண்டுகளிற்கு முன்பே பரப்பிரமம் எனவும் 'பதி' எனவும் கண்டுபிடித்துக் கூறியுள்ளன. பிரமத்துள் இப்பிரபஞ்சம் அடக்கம் எனவும், பிரம்மமே பிரபஞ்சமாக தோற்றம் பெறுகிறது எனவும் இந்து சமய வேதாந்த, சித்தாந்த ஞானிகள் கண்டுபிடித்துக் கூறியுள்ளனர்.

ஹிக்போசனின் 'கடவுளின் துணிக்கை' கண்டுபிடிப்பு முயற்சியினையே மணிவாசகர் திருவாசகத்தில் 'நோக்கரிய நோக்கே! நுணுக்கரிய நுண்ணுணர்வே! போக்கும் வரவும் புணர்விலாப் புண்ணியனே..."எனப் பாடியுள்ளார். (போக்கு –அழிதல், வரவு – படைப்பு) அணு நுண்ணியது; இறைவனும் நுண்ணியதில் நுண்ணியன். அதனால் அவனை எளிதில் கண்டுகொள்ள முடியாது. ஆனால் அவனைக்காண முயற்சிப்பவர்களிற்கு காட்சியாக வருபவன் என்பதையே மாணிக்க வாசகர் விளக்கியுள்ளார்.

இதனையே கவியரசர் கண்ணதாசன் 'பூச்சியத்திற்குள்ளே! ஒரு இராச்சியத்தை ஆண்டுகொண்டு புரியாமலே! இருப்பான் ஒருவன் எனப் பாடியுள்ளார். மேலும், நவீன விஞ்ஞானிகள் இந்த அண்டம் பற்றிக் கண்டு பிடித்துக் கூறியுள்ள விஞ்ஞான உண்மைகள் பலவற்றை, மணி வாசகரின் திருவாசகத் தின் ஒரு பகுதியான 'திருவண்டம்" பகுதியிலே கண்டுகொள்ளலாம்.

இந்தப் பிரபஞ்சம் எவ்வாறு தோன்றியது என்பதற்கு விஞ்ஞானி கள் Big Bang கோட்பாட்டை முன்வைப்பர். அதாவது பெருவெடிப்பின் மூலம் ஏற்பட்டதே இப்பிரபஞ்சமும், நட்சத்திரங்களும், கோள்களும் என்பர். இந்த நட்சத்திரக் கூட்டத்தை விஞ்ஞானிகள் பால் வீதி (Milk way) என்பர். பால் வீதியில் தான் உயிரினங்களின் முதற் படைப்பு ஆரம்பமாகியது என்பர்.

N.P. ஸ்ரீந்திரன்
ஆசிரிய ஆலோசகர்,
வலிகாமம் கல்வி வலயம்.

இந்து சமயப் புராணங்கள் காத்தல் கடவுளாகிய விஷ்ணுவையும், படைத்தல் கடவுளாகப் பிரம்மாவையும் கூறியிருப்பதுடன், பாற்கடலில் பள்ளிகொள்ளும் விஷ்ணுவின் நாவிக் கமலத்திலிருந்து பிரம்மா தோன்றியே படைத்தல் தொழிலைச் செய்வதாகவும் கூறியிருக்கும் பால்வீதிப் படைப்புக் கோட் பாட்டுடன் ஒப்பு நோக்கத்தக்கதாகும். அதாவது மெய்ஞானிகளினதும், விஞ்ஞானிகளினதும் கருத்துப்படி உயிரினங்களின் முதல் தோற்றம் பால்வீதியில் நிகழ்ந்துள்ளது என்ற உண்மை புலப்படுகிறது.

(தொடரும்...)

> அணுவின் அமைப்பிலுள்ள புரோத்திரனையும், எலத்திரனையும் தான் இந்துக்கள் தெய்வீக நிலைப்படுத்திக் குறியீட்டுத் தன்மையில் சிவ சக்தியாக வழிபட்டு வந்துள்ளனர் என்பதைப் புராணங்கள் தெரிவிக்கின்றன. சிவத்தை பொசிட்டிவ் சக்தியாகவும் (புரோத்திரன்) உமையை நெக்கடிவ் சக்தியாகவும் (எலத்திரன்) வழிபட்டுள்ளனர். அணுக்கட்டமைப்பில் எலத்திரனின் பங்கு முக்கியமானது.செயலாற்றுவது அதுதான். படைப்பு சக்தியைச் சார்ந்திருப்பது. அதற்கு ஆதாரமாக சிவன் இருக்கிறான் எனக் கூறப்படுகிறது.




**கிருத்தவ** வீரர்களிடையே அப்போது சரியான ஒருங்கிணைப்பு இருந்தது. தவிர, தங்களுக்குப் பின்னால் பெரியபெரிய நாடுகள் ஆதரவாக இருக்கின்றன என்கிற மானசீக பலம் அவர்களுக்கு இருந்தது. ஆகவே, இஸ்லாமிய சாம்ராஜ்ஜியத்தை வேருடன் அழித்து, மாபெரும் கிருத்தவ சாம்ராஜ்ஜியத்தை–ஜெருசலேத்தை தலைநகராகக் கொண்டு –மத்திய கிழக்கில் நிறுவிவிடுவது என்கிற பெருங்கனவுடன் அவர்கள் பாய்ந்துகொண்டிருந்தார்கள்.

துரதிர்ஷ்டவசமாக அப்போது தான் சுல்தான் முஹம்மது காலமாகி, அடுத்தபடியாகப் பதவியேற்ற முஸ்தகீர் என்பவரும் ஒரே ஆண்டில் மரணமடைந்திருந்தார்.

முஸ்லிம்களிடையே ஒற்றுமை என்கிற முஹம்மதின் திட்டமும் அவர்களுடன் சேர்ந்து காலமானதுதான் இதில் பெரும் சோகம்.

பாலஸ்தீன் என்னும் பெரு நிலப்பரப்பின் மிக முக்கிய அடையாளமான ஜெருசலேம் என்கிற நகரைக் கைப்பற்றுவது என்னும் நோக்கமுடன் தொடங்கப் பட்டதுதான், சிலுவைப் போர்கள். உண்மையில் நிலத்தைக் கைப் பற்றுவதல்ல இப்போர்களின் நோக்கம். அது மட்டுமே என்றால் வழக்கமான நாடு பிடிக்கும் யுத்தங்களுள் ஒன்றாக இதுவும் கருதப்பட்டு இருக்கும். மாறாக, இஸ்லாத்தின் பரவலைத் தடுத்து, மத்திய ஆசியாவில் கிருத்தவ சாம்ராஜ்ஜியம் ஒன்றை நிறுவுவதன்மூலம் நிரந்தரமாக கிருத்தவர்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் இடையில் ஓர் இரும்புத்திரை எழுப்புவதே சிலுவைப்போர்களின் ஆதார நோக்கமாக இருந்திருக்கிறது.



கிருத்தவம் எத்தனையோ வழிகளில் பரவிக் கொண்டிருந்தது. பிரசாரம் அவற்றுள் ஒன்று. மக்கள் இயல்பான உணர்ச்சிப் பெருக்கால் கிருத்தவத்துக்கு மாறிக்கொண்டிருந்தது இன்னொன்று. நாடுகளை வெற்றி கொள்வதன்மூலம் மதத்தைப் பரவலாக்குவது செயல் திட்டத்தின் மூன்றாவது அம்சம்தான்.

ஆயினும் ஜெருசலேம் விஷயத்தில் ஐரோப்பிய சிலுவைப் போர் வீரர்கள் நடந்துகொண்ட விதம் பற்றி சரித்திரம் அத்தனை நல்லவிதமாகக் குறிப்பிடுவதில்லை. யுத்த நெறிமுறைகளை அவர்கள் காற்றில் பறக்கவிட்டார்கள் என்பது மிக மேலோட்டமான ஒரு குற்றச் சாட்டு. வெற்றிகொள்ளும் பகுதிகளில் இருந்த மாற்று மதத்தவர்களை அவர்கள் காட்டுமிராண்டிகள் போல் வெட்டிச் சாய்த்ததுதான் இன்றளவும் சிலுவைப் போர்களில் முதல் அடையாளமாகச் சொல்லப்பட்டு வருகிறது.

மிஷாட் என்கிற சரித்திர ஆசிரியர், விட்டால் உலகிலுள்ள அத்தனை முஸ்லிம் மற்றும் யூத மதத்தவர்களையும் கொன்று புதைத்துவிட்டு, அவர்களைப் புதைத்த இடங்களிலெல்லாம் தேவாலயங்களை எழுப்பி, அடையாளத்தை மறைத்துவிடும் வெறியில் அவர்கள் இருந்தார்கள் என்று சற்று மிகையாகவே இதனைச் சித்தரித்திருக்கிறார். அத்தனை மோசமாக மற்ற ஆசிரியர்கள் சொல்லாவிட்டாலும் அட்டூழியங்களைப் பற்றிக் கணக்கு வழக்கில்லாத புள்ளிவிவரங்கள் கிடைக்கவே செய்கின்றன.

அப்போது மத்திய ஆசியாவில் ஆட்சிப்பொறுப்பில் இருந்த கலீஃபாக்களின் திறமைக் குறைவும் இதற்கு ஓர் எல்லைவரை காரணம்.

முந்தைய நூற்றாண்டுகளில் எத்தனைக்கெத்தனை முஸ்லிம்களின் ஆட்சி வலு ஏறிக்கொண்டே இருந்ததோ, அத்தனைக்கத்தனை பத்தாம் நூற்றாண்டுக்குப் பிறகு பலமிழந்து கொண்டிருந்தார்கள். வாரிசு அரசியல் இதன் முக்கிய காரணம். சுல்தானுக்குப் பிறகு அவர் மகன் என்கிற ஏற்பாடு ரேஷன் கார்டுக்குப் பொருந்தலாமே தவிர மாபெரும் சாம்ராஜ்ஜிய நிர்வாகத்துக்கு எப்போதும் உகந்ததல்ல. சுல்தான் திறமைசாலியாக இருந்தால் அவரது மகனும் அப்படியே இருப்பார் என்று கூறுவதற்கில்லை அல்லவா? தவிரவும் நெருக்கடிமிக்க நேரங்களில் இத்தகைய ஏற்பாடு மிகுந்த அபத்தம் விளைவிப்பதாக மாறிவிடுவததையும் தவிர்க்க முடியாது.

இன்னொரு காரணம், சுயநலம், சொந்த தேசத்திலிருந்தே எத்தனை கொள்ளை அடிக்க முடியும் என்று ஆட்சியாளர்கள் கணக்கிட்டுப் பார்த்துக் கொண்டிருந்தது. வசூலிக்கப்படும் வரிகளைச் சில தனிநபர்களே பெரும்பாலும் பங்கு போட்டுக் கொள்ளும் வழக்கம், அன்றைய மத்திய ஆசியா முழுவதும் பரவலாக இருந்து வந்தது. இதனால் இராணுவம் போன்ற முக்கிய துறைகளுக்கு உரிய பலம் சேர்ப்பதற்கான பணம் போய்ச் சேராமலேயே போய்விட்டது.

சுல்தான்களைச் சுற்றி இருந்த காக்கைக்கூட்டம் மூன்றாவது முக்கிய காரணம். இவர்கள் பெரும்பாலும் அமைச்சர்களாகவோ, பிராந்திய கவர்னர்களாகவோ, முக்கியத் தளபதிகளாகவோ இருந்தார்கள். பெரும்பாலும் சுல்தானைத் தலைநகரிலிருந்து கிளப்பி எங்காவது கோடை வாசஸ்தலத்துக்கோ, குளிர்வாசஸ் தலங்களுக்கோ அழைத்துப் போய் நிரந்தர போதையில் ஆழ்த்தி வைத்திருப்பார்கள். கச்சேரி, மது, கேளிக்கை என்று வாழ்க்கையை உல்லாசமாக அனுபவித்துக் கொண்டிருந்த சுல்தான்களுக்கு யுத்தம் என்று வரும்போது இயல்பாக அச்சம் ஏற்பட்டு, வேறு யாரிடமாவது சிந்திக்கும் பொறுப்பைக் கொடுத்துவிடுவார்கள்.

போதாது?

சாம்ராஜ்ஜியம் அழியத் தொடங்கியது இதனால்தான். ஜெருசலேத்தைக் கைப்பற்றிய சிலுவைப் போர் வீரர்களை அடக்கி, அதன் ஆட்சியை மீண்டும் இஸ்லாமிய சாம்ராஜ்ஜியத்தின் கீழ் கொண்டுவர, முஹம்மத் என்கிற ஒரு சுல்தான் கிடைத்தார் என்றால், அந்த வெற்றிக்கு வயது அவரது ஆயுட்காலம் வரை மட்டுமேதான். முஹம்மதின் மரணத்துக்குப் பிறகு மீண்டும் பழைய குருடி கதவைத் திறந்து வைத்து கிருத்தவர்களுக்கே ஜெருசலேத்தை வழங்கினாள்.

சிலுவைப் போராளிகளிடம் ஒரு திட்டம் இருந்தது. நகரம் தங்கள் வசம் இருக்கும் காலத்தில் கூடியவரை இஸ்லாமிய மற்றும் யூத அடையாளச் சின்னங்களை அழித்து ஒழித்துவிடுவது. வழிபாடு நடக்கிறதோ இல்லையோ, ஜெருசலேம் எங்கும் கிருத்தவ தேவாலயங்களை எழுப்பி நிறுத்திவிடுவது. காலத்தின் ஓட்டத்தில் நடந்தவையெல்லாம் மறந்துபோகக்கூடும். சாட்சிகளாக நிற்கும் தேவாலயங்கள் காலம் கடந்துநிற்கும். ஜெருசலேம், கிருத்தவர்களின் பூமிதான் என்பதை அவையே எடுத்துச் செல்லும். தேவாலயங்களின் அடியில் புதைந்த உயிர்களும் பிற மதங்களின் அடையாளச் சின்னங்களும்கூட அதற்கே மௌன சாட்சியாக வேண்டிய அவசியம் உண்டாகும்.

இந்தச் செயற்திட்டத்தின்படி அவர்கள் இயங்கினார்கள். ஒட்டுமொத்த ஐரோப்பாவும் திரண்டெழுந்து அவர்களுக்குப் பண உதவி செய்தது. எல்லாவற்றுக்கும் மேலாக போப்பாண்டவரின் ஆசீர்வாதம். வேறென்ன வேண்டும்? எப்படியும் ஒரு ஐம்பதாண்டு காலத்துக்குள் ஜெருசலேத்தை மையமாக வைத்து ஒரு பெரிய கிருத்தவ சாம்ராஜ்ஜியத்தைக் கட்டி எழுப்பி விட முடியும் என்றே அவர்கள் நினைத்தார்கள். கி.பி.1173 வரை இது தொடர்ந்தது.

(தொடரும்...)

# பெத்து எடுத்தவதான்... தத்துக் கொடுத்துப் புட்டாள்...



**இங்கிலாந்தில்** வசிக்கும் 19 வயது யுவதியான பொப்பி ஒரு பிரச்சினையால் மிகவும் குழப்பமடைந்திருந்தாள். அவளது தாய் தந்தையரின் உடல் நிறமோ வெள்ளை. அவளுடைய நண்பர்கள், உறவினர்கள் எல்லோருமே வெள்ளை நிறம். ஆனால், அவள் மட்டும் கறுப்பு. பொப்பி சட்டக் கல்லூரி மாணவி. இங்கிலாந்தில் மென்செஸ்டர் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று வந்தாள்.

தன் நிற வேற்றுமையைக் கண்டு குழப்பமடைந்த அவள், இது தொடர்பில் தனது பெற்றோரிடம் முறையிட்டாள்.

மகளின் கேள்வியால், அவளது தாய் ஜெனியும், தந்தை கிளிப்பும் திகைத்து போனார்கள். என்ன செய்வதென்று தெரியாமல் இறுதியில் அவளிடம் உண்மையை கூறினார்கள்.

நீ எங்களுடைய சொந்த குழந்தையில்லை என்றும் இலங்கையிலிருந்தே உன்னை தத்தெடுத்தோம் என்று அவளிடம் கூறினார்கள்.

திகைத்துப் போன பொப்பி தனது உண்மை தாய் இருக்கிறாளா? என்று தேடும் முயற்சியில் ஈடுபட்டாள்.

பத்தொன்பது ஆண்டுகளுக்கு முன் தாங்கள் இலங்கை தீவிற்கு சென்றதாகவும், குழந்தையில்லாத தங்களுக்கு ஒரு குழந்தையை தத்தெடுக்கும் ஆர்வம் ஏற்பட்டதாக கூறிய பொப்பியின் பெற்றோர் இலங்கையில் நுவரெலியா என்ற பிரதேசத்தில் இலட்சுமி என்ற பெண்ணுக்கு பிறந்த குழந்தையை தாங்கள் தத்தெடுத்து இங்கிலாந்துக்கு கொண்டு வந்ததாக கூறினார்கள்.

அன்றிலிருந்து இன்றுவரையிலும் தங்களது சொந்தக் குழந்தையாகவே அவளை வளர்த்தார்கள். எந்த பேதம் வித்தியாசமுமின்றிற் எல்லா வசதிகளையும் அவளுக்கு செய்து கொடுத்தார்கள் வளர, வளரத்தான் பொப்பிக்கு தன் நிற வித்தியாசம் தெரிய வந்தது.

தன் வளர்ப்பு பெற்றோர் மூலம் உண்மை தெரிந்த பொப்பி, தனது உண்மை தாயை கண்டு பிடிக்க ஆவல் கொண்டாள். அவளது (வளர்ப்பு தாயும், தந்தையும்) அதற்கு சம்மதித்தனர். அவள் இலங்கை வர ஏற்பாடு செய்தார்கள்.

இலங்கைக்கு தன் நண்பர்களுடன் வந்த பொப்பிக்கு பேராதனை பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் ஆங்கில ஆசிரியை சிவமதி சிவமோகன், அவரது நண்பர் சசிகுமார் ஆகிய இருவரும் உதவுவதற்கு முன்வந்தார்கள்.

முதலில் சசிகுமார் ரம்பொடவத்தை தேயிலை தோட்டத்திற்கு குழந்தையை தத்து கொடுத்த லெட்சுமி என்ற பெண்ணை தேடி போனார். அவரிடம் அந்த புகைப்படமும், தத்துக்கொடுத்த பத்திர பிரதியும் இருந்தன.

அந்த தோட்டத்தில் இலட்சுமி என்ற பெயர் கொண்ட பத்தொன்பது பெண்கள் இருந்தனர். எனினும் பொபியின் தாயார் அங்கு காணப்படவில்லை.

மனம் தளராத பொப்பிக்கு அவள் நீர்கொழும்பில் தங்கி இருந்த ஹோட்டலில் பணி புரியும் சுரங்க பெரேரா என்பவர் உதவுவதற்கு முன்வந்தார்.

அவரது ஏற்பாட்டின்படி பொப்பியும் அவள் நணபரகளும் ரம்பொடவத்தையில் உள்ள புளுபீல்ட் தேயிலை தோட்டத்திற்கு வந்தனர். அங்கு அவள் தாய் இலட்சுமி வேலை செய்துவந்ததாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

அந்த தோட்டத்தில், பொப்பி தனது உண்மை தாயை சந்தித்தாள். 32 நாட்களேயான குழந்தையாக தன்னை பிரிந்த மகள். இன்று 19 வயது அழகிய இளம் யுவதியாக நின்றதை கண்ட அந்த தாய்க்கு சோகமும் மகிழ்ச்சியும் கலந்த எண்ணங்கள் கண்களில் நீர்வழிய தாயும் மகளும் அரவணைத்து கொண்டனர்.

மொழியால் பேசிக்கொள்ள முடியாத அவர்கள் தங்கள் அரவணைப்பால் தங்கள் உணர்ச்சிகளை கொட்டினார்கள்.

இன்று மீண்டும் பிறந்ததாக உணர்கிறேன் என்றாள் பொப்பி. தன் மகளை பிரியவேண்டிய நிரப்பந்தத்தை விளக்கினார் 'கலிங்க இலட்சுமி' என்ற அந்த தாய். ஏற்கனவே எனக்கு இரு குழந்தைகள். இரண்டுமே பெண்கள். அந்த நிலையில் நான் மீண்டும் கர்ப்பமானேன்.

அப்போதுதான் என் குழந்தைகளின் தந்தை இறந்து போனார். நிர்க்கதியான நான் எனது கடைசி குழந்தையாவது எங்காவது நலமாக வாழட்டும் என்றுதான் தத்துக்கொடுக்க சம்மதித்தேன். என் குழந்தையை நான் நினைக்காத நாளில்லை. இப்போது இவ்வளவு காலம் கழித்து அவளை காண்பது ஒரு கனவுபோல இருக்கிறது என்றாள் அந்த தாய்.


பொப்பின் மகிழ்ச்சியோ அளவிட முடியாதது. இப்போது தனக்கு இரண்டு தாய்கள் என்று சொல்லி மகிழ்ந்தாள். தனது உண்மை தாயை இறுதிவரை காப்பாற்றுவேன் என்றார்.

# இறுதித் தீர்வும் இணங்காத கூட்டமைப்பும்

**தமிழ்** மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைக்கு அதிகாரப் பரவலாக்கத்தின் ஊடாக நியாயமான தீர்வொன்றை இலங்கை அரசு வழங்கும் என்ற நம்பிக்கை மெல்லத் தகர்ந்து கொண்டிருக்கின்றது.

அதிகாரப் பரவலாக்கம் என்பது தனிநாட்டுக்கான கோரிக்கை அல்ல. அது இலங்கையிலுள்ள சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களுடன் இணைந்து வாழ்வதற்கும், பாரபட்சமற்ற உரிமை களுடனான ஐக்கியமாக வாழ்வதற்கும் தமிழ் மக்கள் கொண்டிருக்கும் அபிலாஷைகளாகும்.

இலங்கையின் பூகோள அமைப்பும், பிராந்தியச் சூழலும் இலங்கை நாடு



இரண்டாக பிரிந்து இரு நாடுகளாக ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை. இலங்கை என்ற ஒரு தேசத்தில் சிங்களவர்களும், தமிழர்களும், முஸ்லிம்களும் தத்தமது இனத் தனித்துவங்களுடனும், பாதுகாப்புடனும், சமாந்திரமான உரிமைகளுடனும் வாழ்வதே நன்மையாகும்.

அதேவேளை இனத்தனித்துவம் என்பதும், உரிமைகள் என்பதும் ஒரு இனம் இன்னொரு இனத்தின் பண்பாட்டுக்குள்ளும், வாழ்க்கை முறைமைக்குள்ளும், கலாசாரத்துக் குள்ளும் மூக்கை நுழைப்பதுமல்ல.

இலங்கைக்குள் அதிகாரப் பரவலாக்கமானது மாகாணங்களுக்கு அதிகாரத்தை பகிர்ந்தளிப்பதாகவே இருக்கமுடியும்.

13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதானது இலங்கையில் தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும், சிங்கள மக்களுக்கு இணையாக வாழ்வதற்கான, அரசியல் தீர்வொன்றுக்கான நடைமுறைச்சாத்தியமாக ஆரம்பமாக அமையுமென்பது உண்மையைப் புரிந்துகொண்டவர்களின் திடமான நம்பிக்கையாகும்.

ஆனந்தசங்கரி அவர்கள் கூறுவது போல், இந்தியாவிலுள்ள மாநிலங்கள் போன்றதொரு அரசியல் வழிமுறைதான் இலங்கை தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்கான தீர்வாக இருக்க முடியும் என்று கூறுவதும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் இருபது வருடங்களுக்கும் மேலாக 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமை யாக நடைமுறைப்படுத்துவதில் ஆரம்பித்து மூன்று கட்டங்களாக நடைமுறைப்படுத்துவதன் ஊடாக தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைக்கு நடைமுறையிலேயே தீர்வொன்றைக் காணலாம் என்று கூறிவருவதும் நம்மால் புரிந்து கொள்ளக்கூடியதுதான்.

ஆனந்தசங்கரி அவர்கள் சுற்றிவளைத்துக் கூறுவது 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துங்கள், அதாவது மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை பகிர்ந்தளியுங்கள் என்பது தான். அப்படித்தான் பிறரால் புரிந்து கொள்ளமுடிகின்றது.

அதை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நேரடியாகவே கூறிவருகின்றார். ஒருவேளை அமைச்சர் கூறுவதைப்போல் தாமும் கூறினால் அது அரசியலில் தமது தனித்துவத்தை கேள்விக்குள்ளாக்கிவிடுமென்று சங்கரி சிந்திக்கின்றாரோ யார் கண்டது.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷை களுக்கு தீர்வு எவ்வாறானதாக இருக்க முடியும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறுவது வேடிக்கையானதாகும். ஆனால் கேட்பதற்கு உணர்ச்சிபூர்வமாகவே இருக்கின்றது. தமிழ் மக்கள் தேசிய இனத்தின் பிரச்சினைக்கு தீர்வாக இருக்கமுடியும் என்று கூறுகின்றனர்.

"தம்மைத் தாமே ஆளுகின்ற" என்ற சொற்பதத்தின் உள் அர்த்தம் என்ன?

அது சிங்கள மக்களுக்கும், முஸ்லிம் மக்களுக்கும் இல்லாத கூடுதல் அரசியல் பலமா?

அல்லது தேர்தல்களே நடத்தப்படாமல் தமிழ் மக்களின் ஆளுமைக்குரியவர் களாக கூட்டமைப்பினரே பரம்பரையாக தமிழ் மக்களின் தலையில் மலம் பூசும் அரசியல் சூழலா?

அல்லது இலங்கை மத்திய அரசாங்கம் எவ்வகையிலும் தலையீடு செய்யாத, எதற்கும் மத்திய அரசையோ, பாராளுமன்றத்தையோ நாடவேண்டிய அவசியம் இல்லாத கட்டுப்பாடற்ற அதிகாரமா?

ஏனைய மாகாணங்களிலிருந்து முற்றிலும் வேறு மாதிரியான நிர்வாகமாக வடக்கும், கிழக்கும் இருக்கவேண்டும். அதில் இலங்கை இராணுவம், பொலிஸார் என எவரும் உள்ளடங்காத அதற்குப் பதிலாக கூட்டமைப்பினர் துப்பாக்கிகளுடன் ஆட்களை நிறுத்துகின்ற சர்வாதிகாரமாக இருப்பதே "தமிழர்கள் தம்மைத்தாமே ஆளுகின்ற" என்ற சொற்பதத்திற்கு கூட்டமைப்பு கூறும் அர்த்தமாகுமா?

கூட்டமைப்பு கூறுகின்ற உணர்ச்சி மிகுந்த அந்த வார்த்தைப் பிரயோகங்களைக் கேட்டு தமிழ் மக்களுக்கு பூரிப்பாகத்தான் இருந்திருக்கின்றது. புலிகளுக்குப் பிறகு புலிகளின் தனிநாட்டுக் கோரிக்கையைப் போன்றதொரு தீர்வைத்தான் கூட்டமைப்பு கோருகின்றது. புலிகள் முட்டாள்தனமாக செயற்பட்டு அழிந்துபோனார்கள். கூட்டமைப் பினரோ அதி உச்சபட்டசமான புத்தி சாதுரியமாக விஷயங்களைக் கையாண்டு மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை சர்வதேச தூக்குமேடையில் தூக்கி நிறுத்திவிட்டு கடைசி விருப்பமாக தமிழ் மக்களுக்கு, தனிநாட்டுக்கு ஒப்பான தீர்வை எழுதி வாங்கிவிடுவார்கள் என்று தமிழ் மக்களை நம்பச் செய்வதற்கு தமிழ் கூட்டமைப்பும், புத்திஜீவிகள் என்போரும் கடும் பிரயத்தனம் செய்து கொண்டிருக்கின்றார்கள்.

இந்தக் கூட்டமைப்பு தமிழ் மக்களை நம்பச் செய்வதற்கு பெரிதாக முயற்சிக்கத் தேவையிருக்கவில்லை. ஒரே வார்த்தையைத் தான் மந்திரமாக பிரயோகித்தார்கள். அந்த வார்த்தை ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் சுயநினைவு இழக்கச் செய்தது. அந்த வார்த்தைதான் "தன்மானமுள்ள தமிழன் ஒவ்வொருவரும் கூட்டமைப்புக்கு வாக்களிப்பார்கள்" என்பதுதான் அந்த மந்திர வார்த்தை.

கூட்டமைப்பு தமிழ் மக்களின் அதிக வாக்குகளைப் பெற்று தமிழ் மக்கள் தரப்பில் முக்கிய பிரதிநிதிகள் என்ற இடத்தை வகிக்கின்றனர். அதனால் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்கு பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு வருமாறு அரசு அழைக்கின்றது.



அரசு இவ்வாறு அழைக்கின்ற தற்போதைய சூழலை கூட்டமைப்பு சரியாக புரிந்து கொள்ளவேண்டும்.

கூட்டமைப்பு நம்பிய புலிகள் அழிக்கப்பட்டிருக்கின்றார்கள். மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை தற்போதைய அரசுக்கு பெரும்பான்மை சிங்கள மக்கள் வழங்கியிருக்கின்றனர். கூட்டமைப்பு இல்லாமலே அரசு நினைத்தால் தீர்வொன்றை தானே பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

இந்தியாவோ, அமெரிக்காவோ கூறு வதையும், வலியுறுத்துவதையும் தலை சாய்த்து கேட்பதற்கும், அவர்களின் வற்புறுத்தலுக்கு பொருத்தமான தீர்வை ஏற்றுக்கொண்டு நடப்பதற்கும் தற்போதைய அரசு தயாராக இல்லை.

இந்தச்சூழலிலையே கூட்டமைப்பை அரசு பேச்சுக்கு அழைக்கின்றது. அதுவும்

இலங்கையின் பூகோள அமைப்பும், பிராந்தியச் சூழலும் இலங்கை நாடு இரண்டாக பிரிந்து இரு நாடுகளாக ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை. இலங்கை என்ற ஒரு தேசத்தில் சிங்களவர்களும், தமிழர்களும், முஸ்லிம்களும் தத்தமது இனத் தனித்துவங்களுடனும், பாதுகாப்புடனும், சமாந்திரமான உரிமைகளுடனும் வாழ்வதே நன்மையாகும்.

அதேவேளை இனத்தனித்துவம் என்பதும், உரிமை கள் என்பதும் ஒரு இனம் இன்னொரு இனத்தின் பண்பாட்டுக்குள்ளும், வாழ்க்கை முறைமைக்குள்ளும், கலாசாரத்துக்குள்ளும் மூக்கை நுழைப்பதுமல்ல.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் பேச்சு வார்த்தைகள். காலம் இழுத்தடிக்கப்படாமல் ஆறுமாத காலத்துக்குள் நடத்தி முடிக்கப்பட வேண்டும் என்பதில் அரசு தீர்மானமாகவே இருப்பதையும் தெரிவித்துள்ளது.

அரசு இந்த அறிவிப்பை வெளியிட்டு ஒரு வருடம் கடந்துவிட்டது. இது நாள்வரையும் கூட்டமைப்பு பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் கலந்துகொள்ளவில்லை. அதற்காக கூறுகின்ற காரணம் என்னவென்றால் அரசு தீர்வைத் தராமல் காலத்தை இழுத்தடிக்குமாம், சர்வதேச சமூகத்தை திருப்திப்படுத்தத்தான் பாராளுமன்றத் தெரிவுக்குழுவை கூட்டியுள்ளதாம்.

கூட்டமைப்பு ஒரு வருடமாக இழுத்தடித் துள்ளதையும், தமிழ் மக்களை திருப்திப் படுத்தும் தீர்வை பெறமுடியாமல் அமெரிக்காவின் காலில் விழுந்து கிடப்பதையும் தமிழ் மக்கள் தேசியத்தின் வேலைத்திட்டமாகத்தான் பார்க்கின்றார் களா? புலிகள் அழிக்கப்பட்ட பின்னரான நான்கு ஆண்டுகால கூட்டமைப்பின் அரசியல் சாதனை இதுதானா?

கூட்டமைப்பு இல்லாவிட்டால் அரசு தீர்வைத் தராதா? இந்த சூழல் கூட்டமைப்பின் வலிமையைக் காட்டுகின்றதா? அல்லது கூட்டமைப்பின் கையாலாகத்தனமா? கூட்டமைப்பு பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கு கொள்ளாததே தீர்வொன்றைக்காண முடியாமைக்கான தடையாக உள்ளது என்று அரசு கூறுவது தீர்வை வழங்காமைக்கான நியாயமா? தீர்வு வழங்கப்படாமல் இருப்பதே தமது அரசியல் இருப்புக்கான அடித்தளமாக இருக்கும் என்று கூட்டமைப்பு திட்டமிட்டே காலத்தை இழுத்தடிக்கின்றதா?

இவ்வாறான கேள்விகளுக்கு பதில் தெரியாதவர்களாக தமிழ் மக்கள் இருக்கின்றார்கள். தமிழ் மக்களின் இம்மாதிரியான தெளிவற்ற நிலைமை

**அலசுவது மதியூகி**

தான் கூட்டமைப்பின் அரசியல் வெற்றியா கவுள்ளது. வாக்குச் சேகரிக்கும் அரசியல் யுக்தியாக இருக்கிறது.

தமிழ் மக்களுக்கு இந்த நாட்டில் உண்மையான விடுதலைக்கும், அரசியல் உரிமைகளுக்கும் தடையாக இருப்பவர்கள் யார்? யார்? என்ற பட்டியல் சுவாரஸ்ய மானதும், நீளமானதுமாகும். அதில் ஆச்சரியம் என்னவென்றால் அந்தப் பட்டியலில் முதன்மையானவர்களும், முக்கியமானவர்களும் கூட்டமைப்பில் இருப்பவர்களும், புத்திஜீவிகள் என்போரும்தான்.

தமிழ் மக்களை கடவுள்தான் காப்பற்ற வேண்டும் என்று தந்தை செல்வநாயகம் கூறினார். இன்று அவர் இருந்தால், யாரிடம் இருந்து கடவுள் காப்பாற்றவேண்டும் என்று கேட்டால் தந்தையின் விரல்கள் கூட்டமைப்பை நோக்கி நீளும்.

# மூளுமா மூன்றாம் உலகப் போர்?

**தொகுப்பு – வேணுகிருஷ்ணா**

**மீண்டும்** மூன்றாம் உலகப்போர்ப் பீதி உலகப் போர் III -இதனை WWIII அல்லது மூன்றாம் உலகப்போர் என்பதாகவும் கூறுகின்றனர். இரண்டாம் உலகப் போர் என்பதன் கருத்தாக்கத் தொடர்ச்சியாக, அணு ஆயுதம் கொண்டு, மிகுந்த அளவில் அழிவை உருவாக்கும் இயல்பு கொண்ட போரினை உலகப் போர் III குறிப்பிடுகிறது.

குறைந்தளவில் அணு ஆயுதங்களின் பயன்பாடுகள் என்னும் பாராம்பரியமான காட்சிகள் தொடங்கி பூமிக் கோள் என்பதையே அழித்துவிடக் கூடியதானவரையிலும் கருத்தாக்கங்களின் வீச்சு பரந்துபட்டதாக இருக்கக்கூடிய ஒரு போரே இந்த ஊகம்.

சோவியத் ஒன்றியம் சிதைவதற்கும் மற்றும் பனிப்போர் முடிவதற்கும் முன்னராக உருவான ஆயுதப் போட்டியின் விளைவாக, அமெரிக்க ஐக்கிய நாடு மற்றும் சோவியத் ஒன்றியம் ஆகியவற்றின் இடையில் போர் மூள்வது நடைபெறும் சாத்தியம் என்பதான ஒரு முன்னறிவித்தல் இருந்தே வந்தது.

## மாபெரும் அச்சுறுத்தல்கள்

1956ஆம் ஆண்டு, சூயஸ் நெருக்கடியின் போது, "இப்போரினை நிறுத்தாவிடில், இது மூன்றாம் உலகப் போராக மாறிவிடும் ஆபத்து உள்ளது" என சோவியத் பிரதமரான நிக்கோலாய் பல்கானின் பிரிட்டானிய பிரதமர் அந்தோனி ஈடனுக்கு மடல் ஒன்றை அனுப்பினார்.

1962ஆம் ஆண்டின் கியூபா ஏவுகணை நெருக்கடி மூன்றாம் உலகப்போர் என்னும் ஆபத்திற்கு மிக அருகில் சென்ற ஒரு நிகழ்வாக பொதுவாகக் கருதப்படுகிறது. ஆனால், மூன்றாம் உலகப்போருக்கு மிக அருகிலான நிகழ்வுகள் என வேறு பலவற்றையும் வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

1983ஆம் ஆண்டு செப்டெம்பர் 26ஆம் நாள், கொரியன் ஏயர்லைன்ஸ் விமானம் 007 என்பதனை சோவியத்துக்கள் சுட்டு வீழ்த்தி 25 நாட்களே ஆகியிருந்த நிலையில், ஸ்டானிஸ்லே பெத்ரோவ் என்பவரின் ஆணைக்குக் கீழிருந்த எச்சரிக்கை நிலையம் ஒன்று, ஐந்து கண்ட - இடை எறி ஏவுகணைகள் உள்நோக்கி வருவதாகத் தவறுதலான எச்சரிக்கையை விடுத்தது. இது தவறான எச்சரிக்கை என பெத்ரோவ் சரியாகப் புரிந்துகொண்டார். ஆகவே தாம் கண்டறிந்ததை அவர் தமது மேலதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தவில்லை. பெத்ரோவின் நடவடிக்கையினால் மூன்றாம் உலகப் போர் மூளாதிருந்தது என்றே கூறலாம். காரணம், உள்வரும் எறி ஏவுகணைகளுக்கு எதிராக அணு ஆயுதங்களால் உடனடியாக பதிலிறுப்பு செய்வது என்பதே அப்போதைய சோவியத் கொள்கையாக இருந்தது.

1983ஆம் ஆண்டு நவம்பர் இரண்டாம் நாள் தொடங்கி ஒரு பத்து நாட்களுக்கான ஆணைத்தள நேட்டோ பயிற்சி முகாமாக நடைபெற்ற ஏபில் ஆர்ச்சர் 83 (Able Archer 83) என்பதில் சோவியத்துக்கள் தங்களது அணு ஆயுதங்களை ஆயத்த நிலையில் வைத்தது மட்டுமின்றி, போலந்து மற்றும் கிழக்கு ஜெர்மனியில் உள்ள தங்களது விமான அலகுகளையும் விழிப்புநிலையில் வைத்திருந்தனர். மூன்றாம் உலகப் போருக்கான மிக நெருக்கமான அழைப்பு என்பதாகவே பல வரலாற்று ஆசிரியர்களும் இதனைக் கருதுகின்றனர்.

1999ஆம் வருடம் ஜூன் மாதம் 12 தொடங்கி 26ஆம் நாள் வரையிலும் ரஷ்யா மற்றும் நேட்டோ துருப்புக்கள் கொசாவோவில் உள்ள பிரிஸ்டினா விமான நிலையத்தின் மீதான ஒரு பரஸ்பர எதிர்ப்பு கொண்டிருந்தனர். நேட்டோ தளபதி வெஸ்லி கிளார்க் இதற்குப் பதிலிறுப்பாக பிரிட்டிஷ் நாட்டு தலைமைத் தளபதியான சேர் மைக் ஜாக்சன் (Sir Mike Jackson) வானிலிருந்து இறங்கும் வீரர் படை கொண்டு இந்த விமான நிலையத்தைத் தகர்க்க வேண்டும் எனக்கோரினார். "உங்களுக்காக நான் மூன்றாவது உலகப் போரைத் தொடக்கப் போவதில்லை" என ஜாக்சன் இதற்குப் பதில் அளித்ததாகக் கூறப்படுகிறது.

சி.ஐ.ஏ நிறுவனத்தின் மூல. முகவரான மைல்ஸ் கோப்லேண்ட் (Miles Copeland) எதிர்காலத்தில் இஸ்லாமிய- அராபிய உலகுடன் அமெரிக்காவும் இஸ்ரேலும் போரில் ஈடுபடுமாறு சோவியத் அவர்களை ஏய்க்குங்காலை மூன்றாவது உலகப் போர் தொடங்கிவிடும் என்று கூறினார்.

## 'உலகப் போர்' என்பதை நிர்ணயிப் பதிலான சிரமம்

'World War' என்னும் ஆங்கிலச் சொல்லானது இரண்டாம் உலகப்போரின் போதுதான் பரவலாகப் பயன்படலானது. ஜெர்மானிய உயிரியலாளரும், தத்துவவாதியுமான எர்னஸ்ட் ஹெக்கல் முதலாம் உலகப் போருக்குப் பின்னர் மிக விரைவிலேயே இவ்வாறு எழுதினார்:

'There is no doubt that the course and character of the feared "European War"... will become the first world war in the full sense of the word.

"Indianapolis Star September 20, 1914"

முதலாம் உலகப்போர் என்னும் சொற்தொடரின் முதன் முறையான பயன்பாடு இது. இதன் ஆரம்ப காலப் பயன்பாடு 1913ஆம் ஆண்டின்போதே அறியப்பட்டிருந்தது. போரின் இறுதிக் கட்டம் நெருங்குகையில் இந்தச் சொல் மீண்டும் பயன்படலானது.

1920ஆம் ஆண்டுகளில் பெரும்போர் என்று அறியப்பட்டிருந்த இது, பெரும்போர் என்று அழைக்கத் தகுதிகொண்டிருந்த நெப்போலியப் போர்களை கண்டுகொள்ளாமல்விட்டது. பனிப்போர் என்பதனைப் போல இதுவும், கூட்டணி மோதல்களே எனினும் இரண்டாம் உலகப் போரினைப் போல தொடர்ச்சியான ஒரே மோதல் அல்ல.

மூன்றாவது உலகப் போர் எனக் கருதும் அளவிலான பெரும் போர் ஒன்று உருவாவதற்குப் பல வருடங்கள் ஆகலாம். முதல் இரண்டு உலகப் போர்களுக்கு முன்னரும் பின்னரும் நடைபெற்ற தீவிரமான போர்கள் மற்றும் அவற்றுடன் நெருக்கமான முறையில் தொடர்புற்றிருந்தவை ஆகிய அனைத்தும் தற்போது பெருமளவிலான போர் என்பதன் பகுதியாக இல்லை. இவற்றில் 1912ஆம் ஆண்டு தொடங்கி 1913ஆம் ஆண்டு வரையிலான பால்கன் போர்கள், 1919ஆம் ஆண்டு தொடங்கி 1921ஆம் ஆண்டு வரையிலான போலந்து-சோவியத் போர், மச்சூரியாவிலும் பின்னர் சீனாவிலும் ஜப்பானின் படையெடுப்பு, ஸ்பானிஷ் உள்நாட்டுப் போர், எதியோப்பியா மற்றும் அல்பேனியா மீதான இத்தாலியப் படையெடுப்புகள், 1938ஆம் ஆண்டு ஜெர்மன் ஆஸ்திரியா நாட்டைக் கைப்பற்றிய நிகழ்வான அன்ஸ்க்லஸ் மற்றும் அதைத் தொடர்ந்து செக்கோஸ்லோவாக்கியா கையகப்பட்டது ஆகியவை அடங்கும். எனவே, மூன்றாம் உலகப் போரின் தொடக்கம் எது என்பதை பின்னோக்கிக் கண்டு ஒரு குறிப்பிட்ட நிகழ்வினைக் குறிப்பிட இயலாது.

சில பகுப்பாய்வாளர்களும் மற்றும் வரலாற்று ஆசிரியர்களும் பனிப்போரை மூன்றாம் உலகப் போர் என அடையாளம் காணலாம் எனக் கருதுகின்றனர்.. காரணம், அமெரிக்கா மற்றும் பின்னர் நேட்டோ ஆகியவை ஒரு தரப்பிலும், சோவியத் ஒன்றியம் மற்றும் வார்சோ ஒப்பந்தம் என்பதன் உறுப்பினர் நாடுகள் மறுபுறத்திலும் தங்களது பிரதிநிதிகளான வெளிநாட்டு சண்டைத் துருப்புக்கள் கொண்டு போரிட்டன. 2006ஆம் ஆண்டு ஒரு நேர்காணலின்போது அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் தற்போதைய பயங்கரவாதத்தின் மீதான போர், 'மூன்றாம் உலகப் போரினை' ஒத்தது எனக் கூறினார்.

## பிரபலக் கலாசாரம்

பிரபல கலாசாரத்தில் மூன்றாம் உலகப் போர் என்பது பொதுவான ஒரு கருப்பொருளாக உள்ளது. மூன்றாம் உலகப் போர் என்பதன் ஒரு அடிப்படை நிலையாக நிறைவேற்றம் மற்றும் பின்விளைவினைச் சித்தரிப்பதான இலக்கியமாக, பின் வருவதை முன்னுரைப்பதான அறிவியல் புனைவுகள் இருந்துவருகின்றன. மூன்றாம் உலகப் போரினை மையமாகக் கொண்டு பல திரைப்படங்கள் வெளியாகியுள்ளன. பல சித்திரக் கதைகள், ஒளிக்காட்சி விளையாட்டுக்கள், பாடல்கள், பத்திரிகைகள், வானொலி நிரல்கள், செய்தித்தாள்கள், வலைத்தளங்கள் மற்றும் விளம்பரப் பலகைகள் ஆகியவற்றில் இது குறிப்பிடத்தக்க கருப்பொருளாக உள்ளது.

## 'Cold War' எனப்படும் பனிப்போர்

இருபதாம் நூற்றாண்டில் உலக அமைதிக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக விளங்கிய ஒன்று அமெரிக்காவுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையே நிலவிய 'Cold War' எனப்படும் பனிப்போர். அந்த பனிப்போர் உருவானதற்கு அடிப்படை காரணம் ரஷ்யாவில் லெனினுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த ஸ்டாலினும், அவருக்கு அடுத்து வரிசையாக வந்த கொம்யூனிச ஆட்சியாளர்களும் தங்கள் படை பலத்தை அசுர வேகத்தில் பெருக்கிக்கொண்டதொடு தாங்கள் நம்பிய கம்யூனிசத்தை உலக நாடுகளில் நிலை நிறுத்த முற்பட்டதுதான். ஆனால் கம்யூனிசத்தை வெறுத்த அமெரிக்காவோ, ரஷ்யாவின் ஆயுத குவிப்பை எதிர்கொள்ள நேரடி ஆயுத போட்டா போட்டியில் இறங்கியது. அதன் விளைவுதான் 'Cold War' எனப்படும் பனிப்போர்.

## பனிப்போரின் முற்றுப்புள்ளி மிக்கைல் கொர்பசேவ்

பனிப்போரை முடிவுக்குக் கொண்டு வந்த அந்த வித்தியாசமான அரசியல் தலைவரின் பெயர் மிக்கைல் கொர்பசோவ் (Mikhail Gorbachev). 1931-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2-ஆம் நாள் தெற்கு ரஷ்யாவின் Stavropol வட்டாரத்தில் உள்ள Privolnoye எனும் கிராமத்தில் பிறந்தார் கொர்பசோவ். அவர் சிறுவயதாக இருந்தபோது ரஷ்யாவில் ஜோசப் ஸ்டாலினின் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஸ்டாலினின் ஆட்சியில் ஒன்பது ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்தார் கொர்பச்சொவின் தாத்தா Andreyevich Gorbachev. ஸ்டாலினின் கொம்யூனிச ஆட்சியை பார்த்து வளர்ந்தார் கொர்பசோவ்.

பள்ளியில் சிறந்து விளங்கிய அவர் தம்து பதினைந்தாவது வயதிலேயே இளையர் கம்யூனிஸ்டு லீகில் சேர்ந்தார். 1950-ஆம் ஆண்டில் மாஸ்கோ பல்கலைக்கழகத்தில் சேர்ந்து சட்டம் பயின்றார். பல்கலைக்கழக மாணவராக இருந்தபோதே கம்யூனிஷ்டு கட்சியில் உறுப்பினராக இருந்தார். பல்கலைக்கழகத்திலேயே தான் சந்தித்த Raisa Titarenko என்ற பெண்ணைர்தான் பட்டம் பெற்ற 1953- ஆம் ஆண்டிலேயே மணந்துகொண்டார். சட்டத்தில் பட்டம் பெற்று தாம் பிறந்த Stavropol வட்டாரத்திற்கு திரும்பிய கொர்பசோவ் கம்யூனிஸ்டு →



> அனுயுகத்தின் தந்தையெனக் கூறப்படும் அல்பேர்ட் ஐன்ஸ்டீனிடம் ஒரு நண்பர் கேட்டார்: "மூன்றாவது உலகப்போரில் என்ன ஆயுதம் பயன்படுத்தப்படும்?" அதற்கு அந்த அறிவியல் மேதை தந்த பதில்: "மூன்றாவது உலகப் போரைப் பற்றி எனக்குத் தெரியாது.
> நான்காவது உலகப் போரில் கல்லும், வில்லுமே பயன்படுத்தப் படும்..."
> இதற்கு என்ன பொருள்? மூன்றாம் உலகப்போர் வந்தால் அனு ஆயுதங்களால் உலகமே அழிந்துபோகும். அதன் பிறகு கற்காலத்தில் இருந்துதான் நாகரிகம் தோன்றும். அப்போது கல்லும், வில்லும் தானே ஆயுதமாகும். இதைத்தான் அந்த அறிஞர் அவ்வாறு எச்சரித்துள்ளார்.




**புலிகளின் வீழ்ச்சி தொடர்! இந்த வாரம் தவிர்க்க முடியாத காரணத்தால் இடம்பெறவில்லை இல்லை என்பதை வாசகர்களுக்கு கவலையுடன் அறியத் தருகின்றோம்.**

# பெண் உளவாளி

# நாச வேலைகளை ஞாபகப்படுத்தியது தென்கொரியா!



**தற்போது** தென்கொரியாவில் வசிக்கும் வடகொரியாவின் முன்னாள் 'டொப்' பெண் உளவாளி, "வடகொரிய ஜனாதிபதியின் உத்தரவுப்படி நான் 115 பேரை கொன்றேன்" என்று தெரிவித்திருக்கிறார். மரண தண்டனையில் இருந்து மன்னிப்பு வழங்கப்பட்டு, தற்போது தென் கொரியாவில் வசிக்கிறார் இவர்.

வடகொரியாவுக்கும், தென் கொரியாவுக்கும் இடையே மோதல் வெடித்துள்ள நிலையில், தென்கொரியாவில் இரகசிய இடம் ஒன்றில் இருந்து இவர் கொடுத்த பேட்டி, தென்கொரிய மீடியாக்களில் பரபரப்பாக வெளியாகியுள்ளது.

இந்த முன்னாள் பெண் உளவாளி, தென்கொரியா விமானம் ஒன்றில் பயணியாக சென்று குண்டு வைத்துவிட்டு பாதி வழியில் இறங்கிவிட, விமானம் வானில் வெடித்து சிதறியது. அதில் பயணம் செய்த 115 பேரும் கொல்லப்பட்டனர்.

தற்போது 51 வயதாகும் கிம் ஹைறன்–ஹி, 25 வயது இளம் பெண்ணாக இருந்தபோது செய்த வேலை அது.

1987ஆம் ஆண்டு, அப்போதைய வடகொரிய ஜனாதிபதி கிம் ஜொங்–இல், தென்கொரியாவுக்கு சொந்தமான கொரியன் ஏர்வேஸ் விமானம் KAL 858I குண்டு வைத்து வீழ்த்தும்படி உத்தரவிட்டார்" என்கிறார் கிம்.

அதையடுத்து, இளம் பெண்ணான இவரும், சற்று வயதான மற்றொரு உளவாளியான கிம் சியுங்–இல் என்பவரும், தந்தை–மகள் என்ற கெட்டப்பில் ஐரோப்பா சென்றனர். அங்கிருந்து ஈராக் தலைநகர் பக்தாத் வந்து, கொரியன் ஏர்வேஸ் விமானம் KAL 858இல் ஏறினர்.

இது பக்தாத்தில் இருந்து தென் கொரியாவின் தலைநகர் சோல் செல்லும் பயணிகள் விமானம்.

இந்த விமானத்தை தேர்ந்தெடுக்க காரணம், விமானம், பக்தாத்தில் இருந்து புறப்பட்டு, அபுதாபியில் பயணிகளை ஏற்றி இறக்கிய பின்னரே சோல் நகரத்துக்கு செல்லும். இந்த அப்பா–மகள் உளவாளிகள், பாக்தாத்தில் விமானம் ஏறி, விமானத்தில் வெடிகுண்டை வைத்துவிட்டு, அபுதாபியில் இறங்கி கொண்டனர்.

அங்கிருந்து புறப்பட்ட விமானம், தென்கொரியா செல்லுமுன், தாய்லாந்து எல்லை அருகே வானில் வெடித்துச் சிதறியது. அதில் பயணம் செய்த 115 பேரும் கொல்லப்பட்டனர்.

அதுவரை இவர்கள் திட்டம் வெற்றி. ஆனால், அதன்பின் மிக சுலபமாக அபுதாபியில் வைத்து இருவரும் கைது செய்யப்பட்டனர்.


திட்டத்தை நிறைவேற்றும் போது சிக்கிக் கொண்டால் உடனே தற்கொலை செய்துகொள்ள வேண்டும் என்ற உத்தரவுடன், சயனைட் வில்லைகள் இவர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்தன. கைது செய்யப்பட்டதும், இருவரும் தற்கொலை செய்து கொள்ள முயன்றதில், தந்தையாக வந்த உளவாளி உயிரைவிட்டார். இவர் தப்பித்துக் கொண்டார்.

அதையடுத்து, தென்கொரியாவில் வழக்கு நடந்து இவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

அதன்பின் தென்கொரிய அரசு, "இவர் வடகொரிய அரசு உத்தரவால் நாச வேலை செய்தாரே தவிர, சொந்தமாக திட்டமிட்டு செய்யவில்லை" என்ற கோணத்தில், இவருக்கு மன்னிப்பு அளித்து விடுதலை செய்தது.

தற்போது தென்கொரியாவில் திருமணம் செய்து, இரண்டு குழந்தைகளுக்குத் தாயாக வசித்துவரும் இவரது பேட்டியை பிளாஷ் பண்ண வைத்து, முன்பு வடகொரியா செய்த நாச வேலைகளை மீண்டும் ஞாபகப் படுத்துகிறது தென்கொரியா!

இவர் தனது பேட்டியின் இறுதியில், "வடகொரியா உளவாளிகள் எப்போது என்னை தேடி வருவார்களோ என்ற பயத்துடன் தென்கொரியாவில் வாழ்கிறேன்" என்றும் கூறியிருக்கிறார்.



# புலிகளின் வதை முகாமில்

## வதை 57 — மணியம்

**நான்** அவரைச் சிறைக்குள் கண்டபொழுது அடையாளம் பிடிக்க முடியவில்லை. ஏனையவர்கள் சொல்லித்தான் ஓரளவு ஊகிக்க முடிந்தது. பொலிஸ் சேவையிலிருந்த போது மிகவும் கம்பீரமாக இருந்து பலரைப் 'பதம்' பார்த்த தமோதரம்பிள்ளை, அவரின் அப்பனுக்கும் அப்பனான புலிகளின் பிடியில் சிக்கிய பின்னர், புலிகளால் 'துவைக்கப்பட்டு' சிதிலமாகிப் போய் இருந்தார். அங்கு நான் அவரைக் கண்ட பொழுது அவர் மனம் பிறழ்ந்த நிலையிலேயே இருந்தார். யாருடனும் பேசமாட்டார். அநேகமான நேரங்களில் அந்தச் சிறிய ஹோலுக்குள் முன்பக்கமிருந்து பின்னுக்கு நடந்தவண்ணம் இருப்பார்.

இந்த இன்ஸ்பெக்டர் தமோதரம்பிள்ளையுடனான எமது கணக்கு வழக்கு புலிகள் தோன்றுவதற்கு முன்னரானது. அது 1960களில் தோன்றிய ஒன்றாகும். அப்பொழுது எமது கட்சி ஆரம்பித்த வெகுஜன அமைப்பான தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம். 1966 – 70 காலப்பகுதியில் வடபகுதி முழுவதும் தீண்டாமைக்கும் சாதி அமைப்புக்கும் எதிரான போராட்டத்தைப் பெரிய அளவிலும் எழுச்சியுடனும் முன்னெடுத்து வந்தது. ஆலயப் பிரவேசம், தேநீர்க்கடைப் பிரவேசம், பொது இடங்களிலுள்ள கிணறுகளில் தாழ்த்தப்பட்ட மக்கள் தண்ணீர் அள்ளுதல் என, அந்தப் போராட்டம் வட பகுதியெங்கும் தீச்சுவாலையாகக் கொழுந்துவிட்டுச் சுழன்றடித்தது.

அந்தப் போராட்டத்துக்கு எதிராக அந்தநேரத்தில் இரண்டு 'வில்லன்கள்' தோன்றினார்கள். ஒருவர் பிரசித்தி பெற்ற மாவிட்டபுர ஆலயப் பிரவேசப் போராட்டத்துக்கு எதிராகச் சாதி வெறியர்களையும், குண்டர்களையும் திரட்டி வைத்துக் கொண்டு, மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலில் நின்று ஆலயப் பிரவேசம் செய்ய வந்த தாழ்த்தப்பட்ட மக்களை தாக்கி அட்டகாசம் செய்த முன்னாள் வவுனியா பாராளுமன்ற உறுப்பினரும், அடங்காத் தமிழர் முன்னணியின் தலைவரும், ஓய்வுபெற்ற கணிதப் பேராசிரியருமான சி.சுந்தரலிங்கம்.

மற்றையவர் அப்பொழுது சங்கானை பொலிஸ் நிலையத்தில் சார்ஜனாகப் பணியாற்றிய தாமோதரம்பிள்ளை. அவர் தடித்த சாதி வெள்ளாளரும் சாதி வெறியருமாக இருந்தார். தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்தில் சங்கானைப் பகுதியிலிருந்த நிச்சாமம் கிராமம் ஆரம்பம் முதல் முன்னணியில் நின்றதால், அங்கு சாதி வெறியர்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் இடையில் பல மோதல்கள் நிகழ்ந்ததுடன், சில உயிர்ச்சேதங்களும்கூட இரு பகுதியிலும் ஏற்பட்டன. அதனால் அங்கு எப்பொழுதும் ஒரு பதட்ட நிலை இருந்து வந்தது.

ஆனால் பதட்டத்தைத் தணித்து சட்டத்தையும் ஒழுங்கையும் பேணவேண்டிய பொலிஸார், சாதி வெறியர்களின் பக்கம் நின்றுகொண்டு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பல துன்புறுத்தல்களைச் செய்தனர். சில பொலிஸ் நிலையங்களில் சிங்களவர்கள் பொலிஸ் பொறுப்பதிகாரிகளாக இருந்தபோதிலும், அங்கு இரண்டாம் நிலையில் கடமையாற்றிய தமோதரம்பிள்ளை போன்றவர்கள் சிங்களப் பொறுப்பதிகாரிகளையும் மீறி தாம் நினைத்த பாட்டுக்குச் செயற்படும் ஒரு சூழல் இருந்தது.

அந்த நிலைமைக்கு ஒரு காரணம், அந்த நேரத்தில் ஆட்சியிலிருந்த பிரதமர் டட்லி சேனநாயக்க தலைமையிலான ஐ.தே.க அரசாங்கத்தில் தமிழரசுக் கட்சியும் தமிழ் காங்கிரஸ் கட்சியும் பங்காளிகளாக இருந்தமையாகும். வட பகுதியின் உயர்சாதி மேட்டுக்குழாமினரின் பிரதிநிதிகளாக அன்றும் இன்றும் இருந்துவரும் இவர்கள், தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைப் போராட்டங்களை ஒடுக்குவதில் அரச இயந்திரத்தின் ஒரு பகுதியான பொலிஸாரை – குறிப்பாக தமிழ் பொலிஸாரை அந்தநேரத்தில் பயன்படுத்திக் கொண்டனர். அதிலும் நிச்சாமம் கிராமமும், தமோதரம்பிள்ளை பணியாற்றிய சங்கானை பொலிஸ் நிலையமும் தமிழரசுக் கட்சியின் பெரும் தூண்களில் ஒருவரான வட்டுக்கோட்டைப் பாராளுமன்ற உறுப்பினர் அ.அமிர்தலிங்கத்தின் தொகுதியில் இருந்ததால், அதே கட்சியின் தீவிர ஆதரவாளரான தமோதரம்பிள்ளை போன்றவர்கள் தாம் நினைத்தபடி தாழ்த்தப்பட்ட மக்களுக்கெதிராக வெறியாட்டம் ஆடமுடிந்தது.

தமோதரம்பிள்ளை அந்த நேரத்தில்தான் கைதுசெய்த தாழ்த்தப்பட்ட மக்களைப் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டுவந்து விரும்பியவாறு அடித்து நொருக்கினார். அதுமட்டுமல்லாமல் அவர்களுக்கு பொலிஸ் தடுப்புக் காவலில் இருக்கும்போது வழங்க வேண்டிய உணவோ, தேநீரோ கூட வழங்காமல் பார்த்துக் கொண்டார். தண்ணீர் தாகத்தால் தவித்த அந்த தாழ்த்தப்பட்ட மக்கள் தண்ணீர் கேட்ட பொழுது, தமோதரம்பிள்ளை செய்த ஈனச்செயல் அங்கு பணியாற்றிய சிங்களப் பொலிசாரையே வெட்கித் தலைகுனிய வைத்தது.

தீண்டாமைக்கு எதிரான போராட்ட காலத்தில் சங்கானை உட்பட வடபகுதியின் சில கிராமங்களில் சாதி வெறியர்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களின் போராளிகளுக்குமிடையில் பாரிய மோதல் சம்பவங்களும் நிகழ்ந்தன. இரு பக்கத்திலும் பலர் கொலையுண்ட துர்ப்பாக்கிய நிலையும் தோன்றியது. சங்கானையில் தான் சாதி வெறியர்களின் வெறியாட்டம் மிகவும் மோசமாக இருந்தது. அங்கு தாழ்த்தப்பட்ட மக்களின் மரண ஊர்வலத்தில் கூட சாதி வெறியர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இவை எல்லாவற்றையும் பொலிசார் கண்டும் காணாமல் இருந்தனர். அதுமாத்திரமல்லாமல், அடாவடித்தனம் செய்த சாதி வெறியர்களை விட்டுவிட்டு, தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் போராடிய இளைஞர்களை கைதுசெய்து வந்து பொலிஸ் நிலையத்தில் வைத்து அடித்து நொருக்கினர். இதில் அங்கு சார்ஜனாகக் கடமையாற்றிய தாமோதரம்பிள்ளையே முன்னணியில் நின்றார். அவர் பல தாழ்த்தப்பட்ட இளைஞர்களின் நெஞ்சில் தனது பூட்ஸ் காலால் ஏறி மிதித்ததின் காரணமாக, சிலருக்கு இரத்த வாந்திகூட ஏற்பட்டது. அதையும்விட கேவலமாக, அவர்கள் தாகத்தினால் தண்ணீர் கேட்டபோது சிறுநீரைக் கொண்டு வந்து அவர்களது வாயில் பலவந்தமாகப் பருக்கி மிருகத்திலும் கேவலமாக நடந்துகொண்டார்.

சாதி வெறியர்களினதும் பொலிசாரினதும் இந்த அடாவடித்தனங்களையெல்லாம் அந்தத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினரான அ.அமிர்தலிங்கமும் அவரது தமிழரசுக் கட்சியும், தமிழர்களின் இன்னொரு கட்சியான தமிழ் காங்கிரசும் வேடிக்கை பார்த்தனவே தவிர, குறைந்த பட்சம் இரு பகுதியினரையும் சமரசம் செய்து வைக்கக்கூட முயற்சிக்கவில்லை. அத்துடன் நின்றால் பரவாயில்லை. வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதுபோல, தாழ்த்தப்பட்ட மக்களின் போராட்டத்துக்கு அரசியல் சாயம் பூசும் நோக்குடன், "கம்யூனிஸ்ட்டுகள் சங்கானையில் ஒரு சாங்காயை, ஒரு வியட்நாமை உருவாக்க முயல்கிறார்கள்" என பாராளுமன்றத்தில் அமிர்தலிங்கம் பேசினார். (அவரது இறுமாப்புக்குப் பதிலடி கொடுப்பது போல, தாழ்த்தப்பட்ட மக்கள் பெருமளவு வாழும் வட்டுக்கோட்டைத் தொகுதியில் அடுத்த 1970ம் ஆண்டுத் தேர்தலில் அவரை மக்கள் மண் கவ்வ வைத்தனர்)

இந்த தாமோதரம்பிள்ளை செய்த அடாவடித்தனத்துக்குப் பரிசாக பின்னர் அவருக்கு சப் இன்ஸ்பெக்டர் பதவி உயர்வு வழங்கப்பட்டு, கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்துக்கு அனுப்பப்பட்டார். பின்னர் பொறுப்பதிகாரியாகத் தரம் உயர்த்தப்பட்டு, குருநகர் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி ஓய்வு பெற்றார். அங்கு கடமையாற்றிய நேரத்தில்தான் துரையப்பாவைக் கொலை செய்தவர்களைக் கைதுசெய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டார். அதற்காக அவரைக் கைதுசெய்த புலிகள், அவரைக் கடுமையான சித்திரவதை செய்த பின்னர்தான் இருந்த சிறையில் அடைத்து வைத்திருந்தனர்.

தீண்டாமை ஒழிப்புப் போராட்ட காலத்தில் மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான கொடும் செயல்களில் ஈடுபட்ட முன்னாள் வவுனியா பாராளுமன்ற உறுப்பினர் சி.சுந்தரலிங்கம், பின்னர் வயது மூப்பின் காரணமாக இயற்கை மரணமெய்தினார்.

(துன்பியல்கள் தொடரும்...)



# பாப்பா முரசு

**இப்பகுதிக்கு சிறுவர்கள், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.**

## வாரம் ஒரு திருக்குறள்



பொறையுடைமை

**ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து.**

(தீங்கு செய்தவரைப்) பொறுக்காமல் வருத்தினவரை உலகத்தார் ஒரு பொருளாக மதியார்; ஆனால் பொறுத்தவரைப் பொன்போல் மனத்துள் வைத்து மதிப்பர்.

குறள்:155

# ஏமாந்த ஆட்டு வியாபாரி!


**ஒரு** ஆள் சந்தைக்குச் சென்று ஒரு ஆட்டுக்குட்டியை வாங்கிக்கொண்டு வந்தான். அது சின்னதாக இருந்த காரணத்தால் இரக்கப்பட்டு தோளில் தூக்கிச் சுமந்துகொண்டே வந்தான். அவனுடைய கிராமம் இன்னும் தூரத்தில் இருந்தது.

அந்த ஆள் ஒரு அப்பாவிபோல் இருந்ததால் வழியில் பார்த்த நான்கு குடிகாரர்களுக்கு அந்த ஆட்டுக்குட்டியை ஏமாற்றிப் பறித்து விருந்துண்ண ஆசை ஏற்பட்டது.

அவன்போன பாதையிலேயே வேறு வழியில் முன்னால் போய் நால்வரும் தனித்தனியே கொஞ்சதூரம் இடை வெளி விட்டு வழியில் காத்திருந்தனர்.

அவன் பக்கம் வந்தவுடன் முதலாம வன் ஏய் எதுக்காக ஒரு கழுதைக் கட்டியைச் சுமந்து செல்கிறாய்? என்று கேட்டான். இவன் ஏமாறவில்லை. அவன் ஏதோ கேலி செய்கிறான் என்று சொல்லி சட்டை செய்யாமல் போனான்.

கொஞ்சத் தூரம் போனவுடன் இரண்டாமவன் எதிரில் வந்து, என்னப்பா எதுக்கு ஒரு பன்றியைச் சுமந்துகொண்டு போகிறாய்? என்று சொல்லிச் சிரித்தான். இவனுக்கு என்னமோ போல் ஆகிவிட்டது.



மேலும் கொஞ்சத் தூரம் போனவுடன் மூன்றாமவன் எதிரில் வந்து, அட! என்னப்பா செத்த பாம்பை இப்படியா கழுத்தில சுத்திக் கொண்டு போவாங்க? என்றான். இவனுக்கு உண்மையிலுமே சந்தேகம் வந்துவிட்டது. என்ன இப்படி ஒவ்வொருத்தனும் ஒரு மாதிரியா சொல்லிட்டுப் போறான், நான் வாங்கியது ஆட்டுக்குட்டிதானா அல்லது வேறெதாவது கிரகமா? என்று மிரண்டவனாய் நடந்தான்.

நான்காமவனும் எதிரில் வந்து ஏன் தனியாய் ஒரு பிணத்தை தூக்கிட்டுப்போறே அப்படின்னு கேட்டான். அவ்வளவுதான் இவனுக்கு சந்தேகம் உறுதியாகி விட்டது. நான் ஏதோ ஒரு குட்டிச் சாத்தானை, ஆட்டுக்குட்டி என்று நினைச்சு ஏமாந்து வாங்கிட்டு வந்திட்டேன்! என்று சொல்லி அந்த ஆட்டுக்குட்டியைத் தூக்கிப் புதரில் எறிந்துவிட்டு ஓட்டம் பிடித்தான்.

சிறிது நேரத்தில் அது அந்தக் குடிகாரர்கள் நால்வருக்கும் உணவாயிற்று!

**நீதி: நாம் ஏமாளியாக இருந்தால் மற்றவர் நம்மை ஏமாற்றுவது மிக எளிது.**

## சம்பளம்!

ராயதுர்க்கத்தை அரசாண்ட பொம்மல நாயக்கர் தன்னுடைய போர்வீரர்களுக்குச் சம்பள பட்டு வாடா செய்யும் விதம் வினோதமானது. பத்து நாட்களுக்கு ஒரு தட்வை பொம்மல நாயக்கர், சம்பளப் பணத்தை (நாணயங்களாக) ஒரு மூட்டையாகக் கட்டி தன்னுடைய அரண்மனை உப்பரிகையிலுள்ள பெரிய பீரங்கியின் வாயில் வைத்துச்சுடுவார்.

600 அடிகளுக்கு அப்பாலுள்ள இராணுவப் பயிற்சி முகாமிலுள்ள போர் வீரர்கள் மத்தியிலே இந்தப் பணமுடிச்சு போய் விழும். சேனைத் தலைவர் அதை எடுத்து வீரர்களுக்குப் பட்டுவாடா செய்வார்.

## தகவல் களஞ்சியம்

- 1978 இல் இலங்கையில் சுதந்திர வர்த்தக வலயம் உருவானது.
- 'கலிகால சாகித்திய சர்வ ஏ பண்டித்' என அழைக்கப்படும் அரசன் 2 ஆம் பராக்கிரமபாகு.
- திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் 1330 பாடல்களை உடையது.
- நாள் ஒன்று ஆரம்பமாகும் நேரம் 00.00 மணித்தியாலமாகும்.
- லீப் வருடம் (நெட்டாண்டு) 366 நாட்களைக் கொண்டது.
- பெண்ணின் தலையும் பசுவின் உடலும் கொண்டது காராம்பசு ஆகும்.
- பாலைவனக் கப்பல் எனப்படும் ஒட்டகத்தின் முதுகில் திமில் எனும் அவயமும் உண்டு.
- இந்து சமுத்திரத்தின் நித்திலம் (முத்து) என்று இலங்கை அழைக்கப்படுகிறது.
- உதயதாரகை 1841 இலங்கையில் வெளிவந்த முதல் தமிழ் பத்திரிகை ஆகும்.
- 1895 கல்வியியல் கல்லூரியும் 1917 ஆம் ஆண்டில் சாரணர் இயக்கமும் நிறுவப்பட்டது.
- 1990 முதல் சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கல்வி பற்றிய கருப்பொருள் – வாழ்க்கைக்காகக் கற்றல்.
- துடுப்பாட்டத்தில் புகழ் பெற்ற நாடு கள் இந்தியா, இங்கிலாந்து அவுஸ்திரேலியா, பாகிஸ்தான் இலங்கை.
- இரண்டாம் உலகப் போரின்போது ஹிரோஷிமா, நாகசாகி நகரங்கள்மீது அணுகுண்டுகள் வீசப்பட்டன.

**ச.சஜீவன், இணுவில்.**

## கோப்பியின் வருகை

ஆபிரிக்க நாடான எதியோப்பியாவிலிருந்து கோப்பி வந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது.

சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அரபு வர்த்தகர்கள் ஆபிரிக்காவிலிருந்து கோப்பியைக் கொண்டுவந்து வியாபாரம் செய்தார்கள் என்று நம்பப்படுகிறது. அதை நீரில் சுட வைத்து ஒரு பானத்தை அவர்கள் உருவாக்கினார்கள். அதற்கு அவர்கள் வைத்த பெயர் காவ்வா. தூக்கத்தை தவிர்க்கச் செய்கிற வஸ்து என்பது அதன் பொருள்.

✻ ஒவ்வொரு நாளும் உலகம் முழுவதும் அருந்தப் படும் கோப்பியின் அளவு 160 கோடி கப்கள்.

✻ அமெரிக்கர்கள் மட்டும் ஒரு ஆண்டுக்கு கோப்பிக்காக ஏறத்தாழ ரூ.2 லட்சம் கோடி செலவு செய்கிறார்கள்.

✻ ஒரே ஒரு கப் கோப்பி தயாரிக்க ஏறத்தாழ 140 லீற்றர் நீர் தேவைப்படுகிறது, தெரியுமோ? கோப்பிச் செடியை வளர்த்து, கோப்பிக் கொட்டையை பதப்படுத்திப் பயன்படுத்துவது வரை அவ்வளவு நீர் செலவாகிறது.

✻ கோப்பி என்றதும் சுறுசுறுப்புக்குப் பிறகு மறக்காமல் ஞாபகத்துக்கு வருவது - அதைக் குடித்ததும் எழும் மணம். கோப்பியைப் பிடிக்காதவர்கள் அதை துர்நாற்றம் என்பார்கள்.

✻ இஸ்ரேலில் உள்ள டெல் அவீவ் பல்கலைக் கழகத்தில் நடத்திய ஆய்வில் எச்சிலில் கோப்பி யைக் கலந்து அதன் விளைவைப் பரிசோதனை செய்யப்பட்டது. கோப்பியின் எதிரிகள் மூச்சைப் பிடித்துக் கொண்டு கேட்கவேண்டும் - துர்நாற் றத்தை உண்டாக்கும் நுண்கிருமிகள் வளர் வதை கோப்பி தடுக்கிறது என்று அவர்கள் கண்டுபிடித்தார்கள்.

ஒருவேளை, இந்த ஆராய்ச் சியை செய்தவர்கள் கோப்பிப் பைத்தியமாக இருப்பார்களோ?

## பெர்னாட்ஷா செய்த தமாஷ்!



பெர்னாட்ஷாவைப் பார்த்து; அவருடைய நண்பர் ஒருவர் எடக்கு மடக்காக, "பெர்னாட்ஷா திடீரென உங்களுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்று வைத்துக் கொள் வோம். அப்போது நீங்கள் என்ன செய்வீர்கள்?" என்று கேட்டார்.

அதற்கு பெர்னாட்ஷா, "கடவுளுக்கு நன்றி சொல்வேன்," என்றார்.

இதைக் கேட்ட அவரது நண்பர் சற்று குழப்பமடைந்து, "என்னது, கடவுளுக்கு நன்றியா? ஏன் அப்படி?" எனக் கேட்டார்.

அதற்கு பெர்னாட்ஷா, "பைத்தியக்காரத்தனமாகக் கேள்விகள் கேட்கும் உங்களைப் போன்றவர் என்னை நெருங்கப் பயப்படுவார்கள் அல்லவா?" என்று குறும்பாக பதில் சொன்னார்.

கேள்வி கேட்ட நண்பரின் முகத்தில் லீற்றர் கணக்கில் அசடு வழிந்தது.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள்.
சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகத 30.04.2013

**வர்ணம் தீட்டும் போட்டி இல.988**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல:167,**
**யாழ்ப்பாணம்.**

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 986**

பரிசுக்குரியவர்:
இ.தமிழரசி, பரந்தன், கிளிநொச்சி.

பாராட்டுக்குரியவர்கள்

01. கு.சர்மியா, புன்னாலைக்கட்டுவன் மேற்கு.
02. மா.சாருஜன், தோணிக்கல், வவுனியா.
03. ச.சந்தியா, தெமட்டகொட.
04. த.வர்ணன், கோவில் வீதி, திருகோணமலை.
05. எவ்.அஸ்மியா, அக்கரைப்பற்று.
07. மு.கௌதமி, அரியாலை, யாழ்ப்பாணம்.
08. தி.விதுஷன், கடற்கரை வீதி, மன்னார்.

**எல்லோருக்கும் - அவள் பயங்கரக் கொள்ளைக்காரி, படு பயங்கரக் கொலைகாரி என்றுதான் தெரியும். அவள் அதுவும் ஒரு பெண் - ஏன் அப்படி மாறினாள் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? பூ ஒன்று புயலான கதை. ஏற்கனவே முரசில் புரட்டப்பட்ட இப்பக்கங்கள், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் புரட்டப்படுகின்றன.**

153

# கொள்ளை ராணி பூலான்தேவி

## திருப்பங்கள் நிறைந்த பூலானின் வாழ்க்கை வரலாறு

**காடுகள்** கணவாய்கள் என்று கொள்ளைக் கோஷ்டிகள் நடமாடும் பகுதிகள் எங்கும் பொலிசாரின் கண்காணிப்பு அதிகமாயிற்று.

எங்கும் சல்லடை போட்டுத் தேடத் தொடங்கினார்கள்.

"சிறை அதிகாரியையும், பொலிஸ் அதிகாரியையும் கொல்வதற்கு இத்தனை அவசரப்பட்டது சரியில்லை; அடுத்தடுத்து கொன்றிருக்க வேண்டாம்!" என்றார் பாபா.

கூறத் தயங்கியதால் பாபா தானாகவே பூலானைக் கண்டித்தார்.

பூலான் நேரடியாகவே விளக்கம் சொல்லாமல், " நடந்தது நடந்துவிட்டது. இனி என்ன செய்ய வேண்டுமோ அதனைத்தான் யோசிக்க வேண்டும்!" என்றாள்.

தான் செய்த காரியம் தவறு என்று பூலான் வருந்தவில்லை. ஆனால் வாதம் செய்யவும் விரும்பவில்லை என்பது பாபாவுக்குப் புரிந்தது.

நீண்டநேர கலந்தாலோசனையின் பின்னர் பாபா தனது முடிவை அறிவித்தார்.

"எங்கள் ஆயுதங்களைப் பத்திரமான இடங்களில் மறைத்து வைத்துவிட்டு, சில கால்த்திற்கு சகல நடவடிக்கைகளையும் நிறுத்திவிடுவோம். வேறு எங்காவது சென்றுவிட்டு, பொலிசார் ஓய்ந்த பின்னர் திரும்பவும் ஒன்று கூடுவோம். மறுபடியும் ஆரம்பிக்கலாம்!" என்றார் பாபா.

பூலானுக்கு அந்த முடிவில் இணக்கம் ஏற்படவில்லை.

"பொலிசாருக்குப் பயந்து ஓடவேண்டுமா?" என்று முணுமுணுத்தாள். அருகில் இருந்த மான்சிங் அவள் கையை அழுத்தினான். 'பேசாமல் இரு' என்று அர்த்தம்.

பாபாவின் பேச்சுக்கு மறுவார்த்தை ஏது? அதுமட்டுமன்றி பூலான். கூடவே மான்சிங்கையும் அணைத்துக் கொண்டாள்.

பூலான்தேவியும் மான்சிங்கும் அன்றிரவு ஒன்றாகவே தங்கினர். காலையில் எழுந்தபோது பூலானின் முகம் பிரகாசமாக இருந்தது. கலைந்து கிடந்த கூந்தலைச் சரிப்படுத்திக் கொண்டாள்.

மான்சிங் அசந்து தூங்கிக் கொண்டிருந்தான். மெல்லக் குனிந்து அவன் நெற்றியில் மென்மையாக முத்தமிட்டாள்.

சட்டென்று மான்சிங் கண்களைத் திறந்து பார்த்து, பூலானை நேருக்கு நேர் பார்க்க சங்கடப்பட்டான். எழுந்து அமர்ந்து கொண்டான்.

பூலான் அவன் பக்கமாக நெருங்கி, அவன் மார்பைத் தன் விரல்களால் நீவிவிட்டாள்.

"துர்க்கையம்மாவின் அருளால் மறுபடி சந்திப்போம்" என்றாள். அவள் குரல் தழுதழுத்தது. மான்சிங்சின் கண்களிலும் ஈரம்.

பூலானும், பல்வான் சிங்கின் காதலியான மீராவும் புறப்பட்டனர். பூலான் கைத்துப்பாக்கி ஒன்றையும், ரவைகளையும் தனக்குத் துணையாக எடுத்துச் சென்றாள்.

பாபாவும், மான்சிங்கும் விடை கொடுத்தனர். மான்சிங்கால் பூலானின் பிரிவைத் தாங்கவே முடியவில்லை. அழுதுவிடுவான் போலிருந்தது.

பூலான் இப்போது பிரிவைத் தாங்கும் அளவுக்கு மனதைத் திடப்படுத்தி இருந்தாள். இரவு



பொலிசாரிடம் இருந்து தப்ப வேறு மார்க்கமும் இருக்கவில்லை.

கூட்டம் கலைந்த பின்னர் பூலானை தனியாக அழைத்த பாபா தன் முடிவுக்கான காரணத்தை விளக்கினார்.

பாபா தலைமையில் பூலான் உட்பட கொள்ளைக் கோடிஷ்டித் தலைவர்கள் பலர் அவசரமாகக் கூடியிருந்தனர்.

பூலானைப் பற்றி அவள் முகம் எதிரே குறைசொல்ல பாபாவைத் தவிர வேறு யாருக்கும் தைரியம் இருக்கவில்லை.

முன்னர் ஒரு தடவை பூலானை இவர்களிடம் பாபா அறிமுகப் படுத்தியபோது, இந்தப் பெண் பெரிதாக என்ன சாதிக்கப் போகிறாய்?" என்ற சந்தேகம் அவர்கள் பார்வையில் இருந்தது.

இப்போது பூலானை அவர்கள் பார்த்த பார்வையில் அச்சம் அச்சம்தான் இருந்தது.

பாபாவுடன் தனிமையில் உரையாடிய போது பூலானை எதிர்க்கருத்துக் கூறியவர்கள், பூலான் முன்பாக அடக்கமாக இருந்ததையும் பாபா கவனிக்கத் தவறவில்லை.

எவருமே பூலானை குறை

பூலானுக்குத் துணையாக இன்னொரு கொள்ளைக் கோஷ்டி தலைவனான பல்வான்சிங்கின் காதலி மீரா என்பவளை அனுப்ப பாபா முடிவுசெய்தார்.

மறுநாள் காலையில் பூலான் புறப்பட வேண்டியிருந்தது. அன்றிரவு பூலானுக்கு மட்டுமல்ல மான்சிங்குக்கும் தூக்கம் வரவில்லை.


மான்சிங் அருகே சென்று பூலான் அமர்ந்து கொண்டாள்.

இருவருக்கும் பிரிவை நினைக்கும் போதுதான், தங்களிடையே தங்களையும் அறியாமல் இறுக்கமாகிவிட்ட பந்தம் புரிந்தது.

"மான்சிங்!" என்று அழைத்தாள் பூலான்.

அவன் கண்கள் கலங்கியிருந்தன. அவர்கள் இருந்த இடத்தில் குப்பி விளக்கு ஒன்று எரிந்துகொண்டு இருந்தது.

விளக்கை ஊதி அணைத்தாள்



மான்சிங்குடன் பகிர்ந்துகொண்ட இதமான நிகழ்வுகள் அவள் மனதை பஞ்சுபோலாக்கி இருந்தன.

பூலானும், மீராவும் நேராக பம்பாய்க்குச் சென்றனர். பூலானிடம் பணமும், நகைகளும் இருந்தன. அதனால் செலவுக்குச் சிரமம் இருக்கவில்லை.

உத்தரப் பிரதேசம் எங்கும் பூலானைப் பொலிசார் தேடுவதாகவும், விரைவில் பூலானைப் பிடித்துவிடலாம் என்று நம்புவதாகவும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்திருந்தார்.

"பூலான்தேவியும் அவள் கோஷ்டியும் பதுங்கி இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து நெருங்கிவிட்டோம். இன்னமும் சில நாட்களுக்குள் பூலான் உயிருடனோ, அல்லது பிணமாகவோ கிடைப்பாள்!" என்று உத்தரப்பிரதேச பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரும் கூறியிருந்தார்.

இச்செய்திகளை மீரா பூலானுக்குப் படித்துக் காண்பித்தபோது, அடக்கமாட்டாமல் சிரித்துவிட்டாள் பூலான்.

"இப்படியுமா பொய் சொல்லுவார்கள்? இதற்காகவே நிற்கவைத்துச் சுடலாம்" என்றாள்.

தினமும் பத்திரிகை வாங்கித் தன்னைப் பற்றிய செய்திகளைப் படிக்கச் சொல்லிக் கேட்பது, பூலானுக்கு சுவாரசியமானபொழுது போக்காகிவிட்டது:

சிறிய வீடொன்றை வாடகைக்குப் பிடித்துத் தங்கியிருந்தனர். அக்காவும் தங்கையும் என்று சொல்லித்தான் தங்கியிருந்தார்கள்.

மூன்று மாத காலம்வரை பூலானும், மீராவும் யாருக்கும் சந்தேகம் வராதபடி நாட்களைக் கடத்திவிட்டனர்.

பூலானும், மீராவும் கடைத்தெருவுக்கு சென்று வந்தபோது, எதிரேவந்த ஒருத்தன் மீராமேல் வேண்டுமென்றே மோதிக்கொண்டு சென்றான்.

**திருப்பங்கள் தொடரும்...**

மருத்துவம்

# கர்ப்பிணிகளுக்கு கால் வீக்கம் ஏன் ஏற்படுகிறது?



குழந்தையின் எடை அதிகரிக்கும்போது அது அடிவயிற்றில் உள்ள இரத்த நாளங்களை அழுத்தும். அதில் Inferior Vena Cava அழுத்தப்படும்போது கால் வீக்கம் ஏற்படுகிறது. Inferior Vena Cava பாதங்களிலிருந்து இரத்தத்தை மேல் எடுத்து செல்லும். இப்போது அழுத்தினால் அது சரியாக இரத்தத்தை மேலே கொண்டு செல்ல முடியாது. எனவே இரத்தம் காலில் தேங்க ஆரம்பிக்கும் பொழுது வீக்கம் ஏற்படுகிறது.

இந்த கால் வீக்கம் காலை நேரங்களில் குறைவாக இருக்கும். நேரம் செல்லச் செல்ல அதிகரிக்கும். வெயில் காலங்களில் வீக்கம் அதிகரிக்கும். சிலருக்கு கை வீக்கம் கூட ஏற்படும்.

**எப்படி சமாளிப்பது:**

வீக்கம் அதிகமாக இருப்பின் சற்று பெரிதாக செருப்புகள் வாங்கி உபயோகியுங்கள்.

முடிந்தவரை வலதுபக்கம் படுக்கவும். இது மீதான அழுத்தத்தை சற்றுக் குறைக்கும்.

கால்களை உயர்த்தி வைக்கவும்.

நிறைய தண்ணீர் குடியுங்கள். குறைந்தது 2, 2 1/2 லீற்றர் குடியுங்கள்.

உப்பின் அளவை உணவில் குறைத்து கொள்ளுங்கள்.

நடைப்பயிற்சி அல்லது நீச்சல் தொடர்ந்து செய்வது நல்லது.

கால்களை கீழிருந்து மேலாக நீவிவிடலாம்.

பார்லி கஞ்சி, வெந்தயக் கஞ்சி பருகலாம்.

வீக்கத்தில் பச்சை முட்டைக்கோஸ் இலைகளை வைத்து கட்டி கொண்டாலும் வீக்கம் குறையும்.

ஹோமியோபதியில் இதற்கு மருந்துகள் உண்டு. உரிய சிகிச்சை பெறலாம்.

**எப்பொழுது வீக்கம் கவலைப்பட வைக்கும்?**

திடீர் என கை, கால், முகம் வீங்கினாலோ அல்லது இந்த பாகங்களில் வீக்கம் அதிகமாக இருந்தாலோ அது Pre-ecla msiathf இருக்க வாய்ப்பு உள்ளது. Pre-eclampsia என்பது (கொடி) சரியாக வேலை செய்யாதபோது ஏற்படுகிறது. எனவே உடனடியாக மருத்துவரை அணுக வேண்டியது அவசியம்.

**எப்பொழுது நலம் ஆகும்?**

குழந்தை பிறந்த 2-3 வாரங்களில் முற்றிலும் வீக்கம் குறைந்து, மறைந்துவிடும்.

# மது அருந்தினால்....? விளைவு!

**மது அருந்தினால் உடனடியாக இறப்பு ஏற்படாவிட்டாலும் படிப்படியாக என்ன விளைவுகள் ஏற்படுகின்றன என்று பார்ப்போம். மதுவின் பொதுவான மூலக்கூறு எதில் அற்ககோல் பொதுவாக மதுவகைகளில் எவ்வளவு எதில் அற்ககோல் (Ethyl Alcohol) உள்ளது என்று கீழே பார்க்கவும்.**

1. ரம்.... 50-60%
2. விஸ்கி, பிராந்தி, ஜின் - 40-45%
3. ஷெர்ரி, போர்ட் - 20%
4. வைன்-10-15%
5. பீர் - 4-8 % பொதுவாக...
6. சாராயம் - 40-50%

**மது அருந்தியவுடன் ஏற்படும் விளைவுகளில் முதலானது**

கிளர்ச்சி நிலை (excitement) :

முதலில் மது அருந்தியவுடன் ஏற்படுவது கிளர்ச்சி. தயக்கங்களிலிருந்து மெதுவாக விடுதலையும், சுதந்திரமான மனப்பான்மையும் ஏற்படும்.

அற்ககோல் அணுக்கள் மிக சிறியதாக இருப்பதால் நொதிகளின் உதவியுடன் செரித்து பின் இரத்தத்தில் கலக்க வேண்டியதில்லை. இவை நேரடியாக சவ்வூடு பரவல் மூலம் இரத்தத்தில் வெகுவிரைவில் கலக்கும். அதனால்தான் உடனடி போதை ஏற்படுகிறது. மிகுந்த தன்னம்பிக்கையும், சுய கட்டுப்பாட்டை இழத்தலும் மெதுவாக ஏற்படும். இந்த நேரத்தில்தான் இரகசியங்களையும் மக்கள் உளர ஆரம்பிப்பார்கள். நல்ல மரியாதையும் பண்புகளும் மறக்க ஆரம்பிக்கும். ஆடை ஒழுங்காக உள்ளதா என்று கவனம் இருக்காது. இரத்தத்தில் 20 மி.கி. அற்ககோல் இருக்கும் போதே கூர்மையாக பார்க்கும் திறன் குறையும்.

**இரத்தத்தில் 30 மில்லிகிராம் அற்ககோல் இருக்கும்போது...**


1. தசை கட்டுப்பாடு இழக்கும். 2. தொடு உணர்வுகள் குறையும். 3. சிந்தனை, புரிந்துணர்வு, மதிப்பிடும் தன்மை ஆகியவை பாதிக்கப்படும்.

இரத்தத்தில் 50 மில்லிகிராமுக்கு மேல் போனால்,

1. வாய் வார்த்தைகள் குளறுதல், 2. நடையில் தள்ளாட்டம், 3. அதிக மயக்கம், 4. ஞாபக மறதி 5. அதிக குழப்பம். ஆகியவை ஏற்படும்.

பார்வைத்திறன் குறைவதால் பொருட்களை அதிக வெளிச்சத்தில்தான் பார்க்க முடியும். குறைந்த வெளிச்சத்திலுள்ள பொருட்கள் தெரியாது.

கால நேர, தூர மதிப்பீடுகள் குறையும். அதனால் வீதியில்வரும் வாகனங்களின் வேகம், எவ்வளவு தூரத்தில் வருகிறது என்று சரியாக கணிக்கமுடியாது. இதனால்தான் மது அருந்தி வாகனம் செலுத்துவதால் விபத்துகள் நிறைய ஏற்படுகின்றன. மது அருந்தி வீதியில் நடப்போருக்கும் வாகனங்கள் வரும் தூரம், வேகம் ஆகியவை தெரியாது.



## ‘நினைத்தது யாரோ?’ மீண்டும் வருகிறார் விக்ரமன்

தனது முதல் படத்திற்கு புதுவசந்தம் என்று பெயர் வைத்த நேரமோ, என்னவோ தமிழ் சினிமாவில் ஒரு புதுவசந்தமாகவே நுழைந்து இன்று மிகச்சிறந்த இயக்குநர்களில் ஒருவராகக் கருதப்படுபவர் இயக்குனர் விக்ரமன். குடும்பப் பின்னணியில் சமூகநோக்கும் கலந்துவரும் அவரது பொழுதுபோக்குப் படைப்புகள் வயது வித்தியாசமின்றி அனைத்து ரசிகர்களாலும் கவரப்படுபவைகளாக இருக்கும். அந்தவரிசையில் தற்பொழுது முற்றிலும் புதுமுக நடிகர்களை வைத்து ‘நினைத்தது யாரோ’ என்கிற படத்தை இயக்கிவருகிறார். கிட்டத்தட்ட 80 சதவிகிதம் படப்பிடிப்பு முடிவடைந்த நிலையில் உள்ள இந்தப் படத்தில் ரெஜித் என்கிற பொறியியல் பட்டதாரியை கதா நாயகனாக அறிமுகப்படுத்தியிருக்கிறார் இயக்குனர் விக்ரமன்.

## திருமணம் த
## அதிர்ச்சி

கன்னட நடிகையான ரிஷிகா
சிங்கிற்கும் சந்தீப் என்பவருக்கும்
இம்மாதம் 15ஆம் திகதி திருமண
நடத்த முடிவு செய்யப்பட்டது.
திடீரென்று திருமணத்தை
சந்தீப் நிறுத்திவிட்டார். இதனால்
அதிர்ச்சியடைந்த ரிஷிகா சிங் மன
பாதிக்கப்பட்ட நிலையில்
சிகிச்சைக்காக மருத்துவமனையில்
அனுமதிக்கப்பட்டதாக தகவல் பரவி
இதுகுறித்து ரிஷிகா
கூறுகையி
ஏப்ர


வச்சுக்கவா

## ஓய்வுக்கு வந்தது கானக்குயில்

பிரபல திரைப்பட பின்னணி பாடகிகளில், கானக்குயில் என்ற பெயரெடுத்த லதா மங்கேஷ்கர், மும்பை நகரில் நடைபெற்ற, தீனாநாத் மங்கேஷ்கர் விருது வழங்கும் நிகழ்ச்சியில் சிறப்புவிருந்தினராக கலந்துகொண்டு பேசினார்.

அப்போது லதா மங்கேஷ்கர் கூறுகையில், சங்கீத உலகில் எதிர்பார்க்காத அளவிற்கு மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இந்த பரிணாம வளர்ச்சி, வரவேற்கப்பட வேண்டியது என்றாலும், என்னை அதில் ஐக்கியப்படுத்திக் கொள்ள முடியவில்லை. சமீப காலத்தில், திரைப்படங்களுக்கு பாடல்கள் பாடினேன். ஆனால், என் பணியை நான் தொடரமுடியாத நிலையில் உள்ளேன். இந்த சூழ்நிலையில், பின்னணி பாடகியாக நீடிப்பதில் எனக்கு விருப்பம் இல்லை. அதனால் இனி பாடுவதை நிறுத்திக் கொள்ளப் போகிறேன் என்று தெரிவித்துள்ளார். தனது 13 வயதிலிருந்து பாடல் பாடுவதை துவங்கிய, லதா மங்கேஷ்கர் 36 மொழிகளில் பாடல்கள் பாடி தன் இன்னிசை குரலுக்கு மொழி பேதங்கள் இல்லை என்பதை இசை ரசிகர்கள் மத்தியில் தெளிவுபடுத்தியுள்ளார்.

## மரியானுக்கு எதிராக அன்புமணியின் அம்பு

தனுஷ் நடிக்கும் ‘மரியான்’ படத்திற்கு முன்னாள் மத்திய அமைச்சர் அன்புமணி ராமதாஸ் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில், ‘மரியான்’ படத்தின் விளம்பரத்தில் தனுஷ் புகைபிடிக்கும் காட்சி முதன்மைப்படுத்தி வெளியிடப்பட்டுள்ளது. புகைபிடிக்கும் காட்சி விளம்பரங்களில் இடம்பெறுவது, இந்திய புகையிலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். புகைபிடிக்கும் பழக்கத்தை தவிர்க்கவேண்டும் என்று நடிகர் ரஜினிகாந்த் பகிரங்கமாக வேண்டுகோள்விடுத்துள்ள நிலையில், தனுஷ் புகைபிடிக்கும் விளம்பரக் காட்சி அதிர்ச்சி அளிக்கிறது. எனவே, ‘மரியான்’ படத்தில் புகைபிடிக்கும் காட்சிகள் இடம்பெறாமல் தவிர்க்க வேண்டும். ரஜினிகாந்தின் நல்ல முன் உதாரணத்தை தனுஷ் பின்பற்ற வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

## நயனுக்கு கிடைத்த
## நந்தி விருது

தெலுங்கு திரையுலகில் ஆந்திர அரசின் நந்தி விருதுகள்
விருதாக கருதப்படுகிறது. 2011ஆம் ஆண்டுக்கான நந்தி விருது
அண்மையில், ஆந்திர முதல்வர் கிரண்குமார் ரெட்டி, இந்தி நடி
அமிதாப்பச்சன் ஆகியோர் பங்கேற்று விருதுகளை வழங்கினார்
இதில் சிறந்த நடிகைக்கான விருது நயன்தாராவுக்கு கிடைத்த
ஸ்ரீ ராம ராஜ்ஜியம் என்ற தெலுங்கு படத்தில் சிறந்த நடிப்பை
வெளிப்படுத்தியதற்காக இவ்விருது அவருக்கு கிடைத்தது. சிற
நடிகருக்கான விருதை மகேஷ்பாபு பெற்றார். நாகார்ஜுனா, லட்
மஞ்சு போன்றோரும் விருதுகள் பெற்றனர். அமிதாப்பச்சனுக்கு
என்.டி.ஆர். நினைவு விருதை கிரண்குமார் ரெட்டி வழங்கினார்.



## கௌதம் கார்த்திக்கின் புதிய எதிர்பார்ப்பு

கௌதம் கார்த்திக் மணிரத்னத்தின் கடல் படத்திற்கு பின்பு ஐஸ்வர்யா ரஜினிகாந்தின் படத்தில் நடிக்கிறார் என்று கூறப்பட்டது. இந்நிலையில் சிலம்பாட்டம் புகழ் இயக்குநர் சரவணன் படத்தில் நடிக்க கௌதம் கார்த்திக் ஒப்பந்தமாகியுள்ளார்.

இந்த படத்தில் அவருக்கு ஜோடியாக லக்ஷ்மி மேனன் நடிக்கிறார். கடல் படத்தில் மீனவராக நடித்த கௌதம் இதில் கல்லூரி மாணவராக நடிக்கிறார். அவரின் காதலி தான் லக்ஷ்மி. ஃபோட்டோஷூட் முடிந்துவிட்ட நிலையில் வரும் மே மாத இறுதியில் படப்பிடிப்பை துவங்கவிருக்கிறது. ஏற்கெனவே கௌதம் நடித்த கடல் படம் சரியாக ஓடாததால், தற்போது நடிக்கும் இந்தப் படம் கைகொடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



## கிளப்புகிறது தலைவா...

பட்டையை ‘துப்பாக்கி’ வெற்றிக்குப் பின்பு விஜய், தலைவாவில் நடித்து வருவதால் இந்தப் படத்திற்கு ரசிகர்கிடையே பெரும் எதிர்பார்ப்பு காணப்படுகிறது.

நாயகன் விஜய், இயக்குனர் ஏ.எல். விஜய் முதன்முறையாக இணைந்திருக்கும் இப்படத்தில் விஜய்க்கு ஜோடியாக அமலாபால் நடிக்கிறார். ஜி.வி.பிரகாஷ் குமார் இசையமைத்துவரும் இப்படத்தின் இறுதிக்கட்ட படப்பிடிப்பு அவுஸ்திரேலியாவில் நடந்து வருகிறது. விஜய் ரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் இப்படத்தின் டீசர் வெளியாகி, தற்போது மேலும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

உ
ஆ
மறு
மல
வெ
எந்
இ
எ
கூ

# திருமணம் தடைப்பட்டதால் அதிர்ச்சியில் நடிகை

கன்னட நடிகையான ரிஷிகா சிங்கிற்கும் சந்தீப் என்பவருக்கும் இம்மாதம் 15ஆம் திகதி திருமணம் நடத்த முடிவு செய்யப்பட்டது.

திடீரென்று திருமணத்தை சந்தீப் நிறுத்திவிட்டார். இதனால் அதிர்ச்சியடைந்த ரிஷிகா சிங் மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக தகவல் பரவியது.

இதுகுறித்து ரிஷிகா கூறுகையில், ஏப்ரல் 15ஆம் திகதி திருமணம் நடப்பதாக இருந்தது. இதற்காக அடிக்கப்பட்ட திருமண அழைப்புகள் என் வீட்டில் இருக்கின்றன. கல்யாணத்துக்கு வேண்டிய துணிமணிகளும் வாங்கிவிட்டேன். முன்னதாக நடக்க இருந்த நிச்சயதார்த்தம் திடீரென்று நின்றுவிட்டது. நான் மனஅழுத்தத்துக்கு ஆளானேன்.

நிச்சயதார்த்தம் நிறுத்தப்பட்டால் எந்த பெண்ணின் மனதும் பாதிக்கத்தானே செய்யும். நிச்சயதார்த்தம் நின்றதற்கு அவரது அம்மாவின் தூண்டுதல்தான் காரணம். திருமணத்துக்கு பின்னர் நடிப்பதை நிறுத்திக்கொள்ளும்படி சந்தீப் கூறியதை நான் மறுத்துவிட்டேன். என் மன அழுத்தத்துக்கு ஆயுர்வேத மருந்துடன் மருத்துவ ஆலோசனையும் பெற்றேன், என்றார்.



ஜாமீன்



...ந்தவா

# சித்தார்த்துக்கும் இருக்கிறது விபரீத ஆசை!

தமிழில் பாய்ஸ் படம் மூலம் அறிமுகமான சித்தார்த் தெலுங்கில் முன்னணி நடிகராக விளங்கி வருகிறார்.எனினும் தமிழ் நாட்டு நடிகரான அவருக்கு தமிழில் ஒரு நிலையான இடத்தை பிடித்து விட வேண்டும் என்கிற ஆர்வமே அதிகமாக இருக்கிறது. தற்போது, தமிழில் சுந்தர் சியின் இயக்கத்தில் "தீயாவேலை செய்யனும் குமாரு" படத்தில் நடித்துவருகிறார்.

படப்பிடிப்பில் இருந்த சித்தார்த்துடன் ஒரு சின்ன பேட்டி:

**இந்தியில் அதிகம் நடிக்காதது ஏன்?**

தமிழ், தெலுங்கில் முன்னணி நடிகராக இருப்பதால் இந்தியில் கவனம் செலுத்தவில்லை. தமிழ், தெலுங்கு படங்களுக்கு தான் முன்னுரிமை அளிக்கிறேன். ஆனாலும், இந்தி திரையுலகில் நானும் ஒரு அங்கமாக இருப்பதில் பெருமையடைகிறேன்.

**உங்களின் வளர்ச்சி குறித்து?**

கடந்த, 11 ஆண்டுகளாக படங்களில் நடிக்கிறேன். ஒவ்வொரு முறை படப் பிடிப்பிற்கு செல்லும்போதும் இன்று தான் புதிதாக நடிக்க வந்தது போன்ற மனநிலையுடன் தான் செல்வேன்.

எப்படிப்பட்ட வேடங்களில் நடிக்க விருப்பம்?

பொதுவாக, நான் சீரியசான வேடங்களிலும், காதல் படங்களிலுமே அதிகம் நடித்துள்ளேன். சமீபத்தில், இந்தியில் வெளியான "சாஸ்மே பதூர்" படத்தில் முற்றிலும் மாறுபட்ட கொமெடி கதாபாத்திரத்தில் ரசித்து நடித்தேன். இதுபோன்ற, மாறுபட்ட வேடங்களில் நடிக்கவே விரும்புகிறேன்.

எதிர்கால திட்டம்?

இன்னும் சில நல்ல படங்களில் நடிக்க வேண்டும் என்ற ஆர்வம் உள்ளது. அப்படிப்பட்ட படங்களில் நடித்து முடித்தபின்னர் நல்ல படங்களை இயக்கி நல்ல இயக்குனர் ஆக? வேண்டும் என்ற ஆசையும் உள்ளது என்றும் ஆனால், அதற்கு சில ஆண்டுகள் ஆகும் எனவும் கூறினார்.

# ...க்கு கிடைத்தது ...ந்தி விருது

...ல் ஆந்திர அரசின் நந்தி விருதுகள் உயரிய ... 2011ஆம் ஆண்டுக்கான நந்தி விருதுகளை ...முதல்வர் கிரண்குமார் ரெட்டி, இந்தி நடிகர் ...ர் பங்கேற்று விருதுகளை வழங்கினார்கள். ...ான விருது நயன்தாராவுக்கு கிடைத்தது. ... தெலுங்கு படத்தில் சிறந்த நடிப்பை ...இவ்விருது அவருக்கு கிடைத்தது. சிறந்த ...கேஷ்பாபு பெற்றார். நாகார்ஜுனா, லட்சுமி ...ருதுகள் பெற்றனர். அமிதாப்பச்சனுக்கு ...தை கிரண்குமார் ரெட்டி வழங்கினார்.

# ...புதிய எதிர்பார்ப்பு

...திற்கு பின்பு ஐஸ்வர்யா ...து. இந்நிலையில் சிலம்பாட்டம் புகழ் ...த்திக் ஒப்பந்தமாகியுள்ளார். ...லக்ஷ்மி மேனன் நடிக்கிறார். கடல் ...இதில் கல்லூரி மாணவராக ...ஷ்மி. ⁘போட்டோஷூட் ...5 இறுதியில் படப்பிடிப்பை ...ம் நடித்த கடல் படம் சரியாக ...தப் படம் கைகொடுக்கும் என்று ...ப்படுகிறது.



தலைவா



# நடிகைக்கு நடந்தது ரகசியத் திருமணம்

மலையாளத்தில் முன்னணி நடிகையான ரீமா கலிங்கலும் இயக்குநர் ஆஷிக் அபுவும் இரகசிய திருமணம்செய்து கொண்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ரீமா கலிங்கல் சமீபத்தில் தமிழில் யுவன் யுவதி படத்தில் நடித்திருந்தார். ஆஷிக் அபு மலையாளத்தில் சால்ட் அண்ட் பெப்பர், டாடி கூல் போன்ற படங்களை இயக்கியுள்ளார். இரு வரும் 22 பீமேல் கோட்டயம் படத்தில் நடித்த திலிருந்து காதலித்துவந்த தாகவும், திடீரென இரகசிய திருமணம் செய்து கொண்டதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. ஆனால் இதனை ஆஷிக் அபு மட்டும் மறுத்துள்ளார். நான் திருமணம் செய்தால் அதை வெளியில் சொல்ல எந்தத் தயக்கமும் இல்லை என்று அவர் கூறியுள்ளார்.



# ...லைவா...

...ர். ஜி.வி.பிரகாஷ் குமார் ... இப்படத்தின் இறுதிக்கட்ட ...ரேலியாவில் நடந்து வருகிறது. ...யே பெரும் எதிர்பார்ப்பை ...ருக்கும் இப்படத்தின் ...போது மேலும் பரபரப்பை

# தேன் கிண்ணம்

## வறுமையின் கொடூரம்!...

எம்.யூ அல்சாத், ஓட்டமாவடி.

என் சகோதரி - தன்
மழலை பசி போக்கவென
அவள் கரங்களை
என் சட்டைப் பைக்குள்
விட்டாள் - பையின் வெறுமையால்
ஏமாந்து போன கரங்களுடன்
என் முகத்தை ஏக்கத்துடன்
நோக்குகிறாள் - நான்
பேச வார்த்தையற்று வெட்கித்து
தலை கவிழ்கின்றேன்- நானோ
அம்மழலையை விட
பசியாயிருக்கிறேன் என்பதை
பாவம் அவள் எங்ஙனம்
உணர்ந்து கொள்வாள்!



## விலைபோகும் மனிதம்!

என் ஞாபகக் குறிப்பேட்டில்
வேதனையின் வலிகள்
வேகிடும் மனதில்
சூழ்ந்திடும் துயரங்கள்

காலவெளிகளில் மாளும்
பொழுது அதை எண்ணிப்
பார்க்கையில் விம்மிடும் மனது
பாழ்பட்ட சமூகத்தின் மாறிடும் - மனது
விலை போகும்
மனிதம் இறுதியில் அன்பின்
நெஞ்சங்களின் இரத்தத் திலகம்.

வாழ்விடத்தின் எச்சம்
வாழ்ந்து பார்த்தேன் சோகத்தின்
திரைமூட்டம் - கடவுளே!

உன்னிடம் ஓர் விண்ணப்பம்
இனிமேலும் வேண்டாம் மனிதப்
பிறவியின் துயர்க் கோலம்.

ஏக்கம் பல சுமந்து என்னைப்
போல் வாழும் மனிதருக்கு
அன்புதான் ஆறுதலின் நினைவுச்
சின்னம் மனிதர்களே! போதுமய்யா
விலை போகாதீர் மனிதம் வாழ...
நீங்கள் புது மனிதனாகுங்களே!
இனிமேலும் அன்பின் நிழலே
எமது ஆறுதல் நிம்மதி.

P.S முல்லையூர் பரணி

## பதில் தெரியவில்லை...

துளி விஷமாய்
நெஞ்சில் – நீ
விழுந்தாய்
மரணத்தின்
வாசற் கதவு
திறப்பதற்காய்
காத்திருந்தது – என்
ஜீவன்.
சுமைகளை மட்டும்
சுமந்த என் – இதயம்
சுகங்களையும்
சுமக்கும் காலம்
எப்போது...?



வி.சிறானி – சாவகச்சேரி

## துயர் நீங்க வேண்டுமே...

கூண்டினுள்ளே அடைபட்டு
குறைகளாலே பிடிபட்டு
குழப்பங்களால் வாழ்வு பெற்று
விழுப்பங்கள் ஏதுமின்றி
திருப்பங்களுக்காய் மட்டும்
மறைந்திருந்து காத்திருக்கும்
தேய்பிறை வாழ்வுதனை
உயிரோடு மாய்த்துக்கொள்ள
துயரோடு தேடி நிற்கும் - உயிர்கள்
இன்னலின் இருப்பை தாண்டி
வெறுப்போடு மாண்டு செல்லும்
வேண்டாத மறுப்புக்களையெங்கும்
ஆண்டாளின் அடிமைகளாய்
அன்பைத் தேடிச் செல்லும்
வனப்புள்ள மணத்தை நுகர
நித்தம் கேட்டீர் நீரே!

மூ.ஸ.ஸாமித், திருகோணமலை.

## நீயே சொல்...

பத்திரிகையில் பார்ப்பாயென
பத்திரமாய் எழுதினேன்
பார்க்கவில்லை போலும்
பதிலேதும் காணவில்லையே...
மௌன மாயுள்ளாய் நீ....

கற்பனையில் எழுதவில்லை
நிஜத்தையே எழுதுகிறேன்
மகிழ்வாய் இல்லையே
கண்ணீருடன் உள்ளே....

மலையது சாய்ந்ததும்
சிலையாய் மிளிர்கிறது
மரமது சாய்ந்ததும்
விறகாய் எரிகிறது
மலரது சாய்ந்ததும்
சரமாய் அமைகிறது – என்
மனது சாய்ந்ததே
என்னதான் செய்வது?...
நீயே சொல்...

எத்தனை நாள்தான்
வேதனையை சுமப்பது
வேடிக்கையான உலகில்
சுமப்பது சோகம்தான்.

கண்ணீரும் கவலையும்
வேதனையும் சோதனையும்
போராடியே பார்க்கிறேன்
என்னாலோ முடியவில்லையே..

செவ்வந்தி – அல்வாய் வடமேற்கு.

## தற்கொலைகள் மரணிக்கட்டும்

இப்போதெல்லாம்
இளையோர்களின் மனம்
திடமாக இல்லை
திண்டாடுகிறது தெளிவில்லாமல்...

காதலால் தோல்வி அடைந்தால்
வாழ்க்கையில் தோல்வியுற்றவனாய் நினைத்து
வாழ்க்கை துறந்து
மரணம் தேடுகிறார்கள்.

குடும்பத்தில் பிணக்கு வந்தால்
குழந்தைகளுக்கும் தனக்கும்
தரமற்ற மரணம் கொடுத்து
தற்கொலை தீர்வு வழங்கும்
கோழையாய் மாறி விடுகிறார்கள்.
பரீட்சையில் தோல்வியுற்றால்
அடுத்த நகர்வை
ஆரம்பிக்காமல்
இறுதித் தீர்வு
இதுதான் என்று
மாணவர் சமூகமும்
மரணம் தேட முயல்கிறார்கள்.

மனித கலாசாரம் - நவீன
மலையின் மேல் ஏறியுள்ளதால்

உழைப்பால் எட்ட முடியாதவர்களும்
உயிர் நீக்கத் துடிக்கிறார்கள்
நிறைவேற்றியும் கொள்கிறார்கள்
அடுக்குப் படிகளாய் தொடரும்
அத்தனை தற்கொலைகளும்
ஒடுக்கப்பட்ட வேண்டும் - உள்ளத்தில்
ஓர்மை வளர வேண்டும்.

ஏழையாய் வாழலாம்
கோழையாய் வாழவேண்டாம்
அத்தனை தோல்வியாளர்களும்
ஆயத்தமாகுங்கள்
தடைகள் உடைப்பதற்கும்
தற்கொலை கலாசாரம் நிறுத்துவதற்கும்.

தோல்வியிடம்
வெற்றி தோற்று விடாமல்
வெற்றியின் வீரத்தை - மரணத்திடம்
விலைபேசி விடாமல்
அத்தனை தோல்விகளையும்
வெற்றியின் கையால்
அடக்கி விடுங்கள்
தோல்விகளின் கதவுப் பூட்டுக்களை
வெற்றியின் திறவுகோலால் திறவுங்கள்.

A.பாரிஸ் - மிகிந்தலை.

கலாபூஷணம்
கே.எஸ்.ஆனந்தன்.

அத்தியாயம் 18

34

# சிங்கை மைந்தன்

## அமரசிம்மன்



"மாடன் தலைமையில் சென்றவர்கள் சிறந்த போர் வீரர்கள் யுத்தியாக எதையும் சாதிக்கக் கூடியவர்கள். நிச்சயம் எமக்கு முதல் வெற்றிச் செய்தியாக இப்போர் அமையும் பிரபு."

"நல்லது. சிறிதுநேரம் ஓய்வு எடுத்தால் காலையில் சுறுசுறுப்பாக செயற்படலாம்." என்று கூறிவிட்டு மீண்டும் அந்த திண்டில் சாய்ந்துகொண்டான் அமரசிம்மன்.

விடிந்தும் விடியாத அதிகாலை வேளையில் கலங்களிலிருந்து இறக்கப்பட்ட இரு சிறிய படகுகள் சில வீரர்களுடன் நீர்கொழும்பு துறை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தன. குளிர்காற்றுடன் பனிப்படலமும் சேர்ந்து கடற்கரையோரத்தை ஆக்கிரமிப்புச் செய்திருந்ததால் கரையில் என்ன நடக்கின்றது என்பதைப் படகிலிருந்தவர்களால் பார்த்து அறிய முடியாதிருந்தது. ஆனால் கரையில் இருந்தவர்கள் துறைமுக எல்லைக்குள் நுழைந்த படகுகளை அவதானித்துவிட்டதால் அளகக்கோனாரின் கீழ் இயங்கிய படைவீரர்களிடையே பரபரப்பு ஏற்பட்டது. கடலில் படகுகளில் இருந்தவர்கள் படகினை நகர்த்தாது பதுமைகளாயிருந்தனர்.

சில விநாடிகளில் அவர்கள் எதிர்பார்த்தபடி கரை யிலிருந்து படகைநோக்கி எரி அம்புகள் பறந்து வந்தன. படகிலிருந்தவர்கள் அதனை எதிர்பார்த்திருந்ததால் எரி அம்புகள் படகிற்குள் விழாதவாறு தற்காப்பு முறையில் எதிராளிக்கு விளையாட்டுக் காட்ட முற்பட்டனர்.

கரையிலிருந்தவர்கள் கூச்சல்களும், கோஷங்களும் படகிலிருந்தவர்களுக்குச் சிரிப்பை மூட்டியதனாலும் பின்வாங்குவது போல பாசாங்கு காட்டி முன்னேற முயல்வது போலவும் பாசாங்கு காட்டினார். வினாடிகள் கரைந்து கொண்டிருந்தன. குளிர்காற்றும் பனியும் எரியம்புகளின் வீரியத்தை குறைத்திருந்ததால் படகிற்குள் சில அம்புகள் வீழ்ந்த போதும் அவற்றால் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

திடீரென எரி அம்புகள் வீசுவது நிறுத்தப்பட்டன. கரையில் பெரும் அமளி நடப்பதை அவதானித்தனர் படைவீரர்கள். அவர்களின் ஒருவன் கூறினான்,

"மாரப்பா, மாடனின் படைவீரர்கள் உள்ளே நுழைந்துவிட்டார்கள். துறைமுகக் கரையில் சண்டை நடந்துகொண்டிருக்கின்றது. துடுப்பைப் போடுங்கள் நாமும் கரைக்குச் சென்றுவிடலாம்."

அடுத்த விநாடி படகுகளும், படகினை இறக்கிவிட்டு சற்று தூரத்தே நின்ற கலமும் கரைநோக்கி விரைந்தன. துறைமுகக் கரையை அடைந்ததும் கரையில் நின்ற படகுகளுக்கு தீ மூட்டினர் சிலர். மற்றவர்கள் களமிறங்கியதும் வெற்றிக் கோஷமிட்டவாறே துறைமுக வாயில் காவல்காரர்களையும் அவர்களுக்கு துணையிருந்த வீரர்களையும் தாக்கினர். இறந்தவர்கள் போக சிலர் புறமுதுகிட்டு ஓடினர்.

மாடன் தலைமையில் சென்றவர்கள் துறைமுகக் கரைக்கு அப்பால் கலங்களை நிறுத்திவிட்டு சிறு படகுகள் மூலம் கரை இறங்கி துறைமுக வாயிலருகே நின்ற படையினரை நோக்கி முன்னேறினார். கடற்பரப்பில் நின்ற படகுகளையே அவதானித்து அளகக்கோனாரின் படைவீரர்கள் அப்படகுகளைத் தாக்குவதில் குறியாயிருந்தனரே தவிர தம்மைத் தாக்கவரும் மாடனின் படைகளை கவனிக்கவில்லை. திடீரென படைவீரர்களின் கோஷத்தைக் கேட்டு கதிகலங்கிய எதிரிகள் எதுவித கட்டுக்கோப்புமின்றி தாக்க முற்பட்டனராயினும் அதிக நேரம் தாக்குப் பிடிக்க முடியாது பலர் இறந்தொழிந்தனர். வினாடிக்கு வினாடி கேட்கும் மரண ஓலங்களைக் கேட்டு அவர்களுக்கு தலைமை தாங்கியவன் மனங்கலங்கினான். அதேவேளை வாளுடன் பாய்ந்த மாடனின் தோற்றத்தைப் பார்த்ததும் கதிகலங்கிய தலைவன் தன் வாளை உயர்த்தும் முன்பே மாடன் அவன் தலையைத் துண்டித்துவிட்டான். காலைக் கதிரவனின் பொன்னொளியில் மாடனின் தோற்றம் எதிரி வீரர்களின் வயிற்றைக் கலக்கிக் கொண்டிருந்த வேளையில் தலைவனின் தலை துண்டிக்கப்பட்டதும் செய்வதறியாது திகைத்தவர்கள் போரிடும் எண்ணத்தைக் கைவிட்டு உயிர்தப்பினால் போதும் என்று ஓட ஆரம்பித்தார்கள்.

துறைமுக வாசலில் சிங்கை அரசின் வெற்றிக் கொடியை நாட்டிவிட்டு இறங்கிய மாடனை நோக்கி ஓர் ஈட்டி 'விர்' எனப் பறந்துவந்தது.

***

வானத்தில் வட்ட நிலா கீழ் வானிலிருந்து மேலெழுந்து கொண்டிருந்தது. பனியில் குளித்து, குளிர் தென்றலில் சிகை உலர்த்தும் மரஞ்செடிகள் அசுவங்களின் கனைப்பு, சில்வண்டுகளின் நானாவித ஒலிகள். இயற்கை அன்னையின் அழகும், செழிப்பும் அமரசிம்மன் மனதில் சேரநாட்டை நினைவூட்டின. அந்த நினைவு தோன்றியவுடன் மதுரவல்லியின் அழகு முகமும் அவனை ஆட்கொண்டது.

நிலவைப் பழிக்கும் முகம், வட்டக்கரிய விழிகள் தன்னையே ஆட்கொள்ளும் ஆபூர்வசக்தி, வீணையின் நரம்புகளில் சுண்டிவிட்டால் எழும் ஒலியை பழிக்கும் இனிய குரல். பளிங்கு மண்டபம் போன்ற உடல்வாகுடன் வானத்திலிருந்து இறங்கி வரும் தேவதை போன்ற அவள் தோற்றம் அவன் நினைவுகளை முற்றுமுழுதாக ஆட்கொண்ட நிலையில் இப்பூவுலகையே அவன் மறந்துவிட்டான்.

"வணக்கம் பிரபு" என்ற குரல் அவனை இவ்வுலகுக்கு அழைத்துவந்தது.

கனவுலகிலிருந்து நனவுலகிற்கு வந்தபோது கூடாரங்களில் எரியும் தீப்பந்தங்களின் ஒளி அவன் கண்களை கூசச் செய்தன. தூரத்தில் அங்கேயோ அருவி பாயும் ஓசை தன்முன்னே மார்புடன் அணைத்த கரங்களுடன் நிற்கும் மாடனைப் பார்த்தான். தன் இனிய கனவைக் கலைத்த அவன் மீது எரிச்சல் வந்தபோதும் கடமையின் கண்ணியமும் முன்னெழுந்ததும் புன்சிரிப்புடன் அவன் தோளைத் தட்டி அணைத்தவாறு கூடாரத்துக்குள் அழைத்துச் சென்றான். அவனுடைய தன்மையைக் குழப்பி விட்டேனோ என்ற பய உணர்வுடன் மௌனமாய் நின்றான் மாடன்.

"என்ன பேச்சையே காணோம். ஏதும் பிரச்சினையா?" என்று கேட்டான் அமரசிம்மன்.

(தொடரும்...)

3 ஆவது ஆண்டில்...

தினமுரசு

நாளிதழ்

தினம்தோறும்
கல்விமுரசு
இணைப்பு


இப்போது நீங்கள் அறிய விரும்பும்
அன்றாடச் செய்திகள் அனைத்துக்கும்

ரூ.10/=
மட்டுமே

- உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
- உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
- கனதிமிக்க கட்டுரைகள்
- தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
- சினிமா
- நாள் ராசி பலன்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்
- மருத்துவக் குறிப்புகள்
- பத்திகள் - 'பரமர் சங்கமம்', "மெய்தான் பாருங்கோ" "பதிவிறக்கப்பெட்டகம்"

A/L, O/L மற்றும் புலமைப் பரிசில் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் - விடைகளுடன் தினமும்

சனி, ஞாயிற்றுக்கிழமைகள் க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான அலகு ரீதியான குறிப்புகள், மாதிரி வினாக்களும் விடைகளும் வெளியாகின்றன!



பெண்கள் பக்கத்திற்குரிய தரமான ஆக்கங்கள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப் படுகின்றன.

# லேடிஸ் ஸ்பெஷல்

# சாகசங்களின் காதலி!

**எழுத்தாளர்,** புகைப்படக்காரர், பெண்ணியவாதி, வானூர்தி ஆர்வலர், விரிவுரையாளர் என்று பன்முகம் கொண்ட அமெலியா மேரி எர்ஹாட் – சாகசங்களின் காதலியும்கூட! 1897 ஜூலை 24 அன்று அமெரிக்காவில் உள்ள அட்சிசனில் பிறந்தவர் அமெலியா. 1917ல் சகோதரியுடன் டொரன்டோ சென்றார் அவர். அங்கே முதல் உலகப் போரில் பங்குபெற்ற வீரர்கள் காயங்களுடன் போராடுவதைப் பார்த்து நெகிழ்ந்தார். இராணுவ மருத்துவமனையில் செவிலியாகச் சேர்ந்தார்.



சைனஸ் பிரச்சினை காரணம் அடிக்கடி மருத்துவமனையில் தங்கி சிகிச்சை எடுக்க வேண்டியிருந்தது. அப்போது இயந்திரவியல் புத்தகங்களை விரும்பிப் படிக்க ஆரம்பித்தார். டொரன்டோ வானூர்தி காட்சியில் முதல் உலகப்போரில் பங்குபெற்ற விமானங்கள் இடம் பெற்றிருந்தன. அதிலிருந்த சிவப்பு நிற விமானம் மிகவும் ஈர்த்தது. உயிரற்ற அந்த விமானம் அமெலியாவிடம் ஏதோ சொல்வதாகப்பட்டது.

1920 இல் தந்தையுடன் விமானத்தில் பயணம் செய்யும் வாய்ப்பு கிடைத்தது. அந்த 10 நிமிடப் பயணமே, அமெலியாவின் வாழ்க்கையில் திருப்புமுனை. வானூர்தி வீரர் ஆகவேண்டும் என்று முடிவெடுத்தார். புகைப்படக்காரர், ட்ரக் டிரைவர், ஸ்டெனோகிராபர் என்று கிடைக்கும் வேலைகளை எல்லாம் செய்து பணம் சேர்த்தார். விமானப் பயிற்சியில் சேர்ந்தார்.

6 மாதங்களில் பழைய கின்னர் ரக விமானம் ஒன்றை வாங்கினார் அமெலியா. 1922ல், '14 ஆயிரம் அடிகள் உயரம் பறந்த முதல் பெண் விமானி' என்ற பெருமையைப் பெற்றார். பயம் என்பதை அறியாத அமெலியா அடுத்தடுத்து சாதனைகளை ருசிக்க ஆரம்பித்தார். 1927ல் 500 மணிநேரம் தனியாகப் பறந்து சாதனை நிகழ்த்தினார். வீட்டின் பொருளாதார நெருக்கடியால் அமெலியா விமானத்தை விற்க வேண்டியிருந்தது. வேலைக்குச் செல்ல வேண்டிய நெருக்கடியும் உண்டானது.

ஆசிரியராக வேலை பார்த்தார். அதேநேரத்தில் 'அமெரிக்கன் ஏரோநோட்டிகல் சொசைட்டி'யில் வைஸ்பிரசிடண்ட் பொறுப்பு வகித்தார். கின்னர் விமானங்களின் விற்பனைப் பிரதிநிதியாகவும் இருந்தார். விமான விற்பனைக்காக செய்தித்தாள்களில் கட்டுரைகள் எழுத ஆரம்பித்தார். இவருடைய கட்டுரைகளால், நிறையப் பெண்கள் விமானியாகும் ஆர்வத்தில் பயிற்சியில் சேர்ந்தனர்.

1928ல் அட்லாண்டிக் பெருங்கடலைக் கடக்கும் சாதனையில் ஒரு பெண்ணை களமிறக்கத் திட்டமிட்டது ஒரு நிறுவனம். அந்த புரஜெக்டை ஸ்பொன்சர் செய்ய புத்தகப் பதிப்பாளர் ஜோர்ஜ் பி.புட்னம் முன்வந்தார். அந்த விமானத்தை அமெலியா ஓட்டிப் பழக்கமில்லை என்பதால், அவர் ஒரு பயணி போல அதில் சென்றார். அட்லாண்டிக் பெருங்கடலைக் கடந்து, பத்திரமாகத் தரையிறங்கியது விமானம்.

'முதல் பெண் சாதனையாளர்' என்று பலரும் கொண்டாடினார்கள். அமெலியாவோ 'விமானத்தில் இருக்கும் உருளைக்கிழங்கு மூட்டையைப் போலத்தான் சென்றுவந்தேன். ஒருநாள் நான் தனியாக அட்லாண்டிக் பெருங்கடலைக் கடப்பேன். அதுதான் நிஜ சாதனை' என்றார். 1928இல் சாமுவேல் சாப்மென் என்ற கெமிக்கல் இன்ஜினியருடன் அமெலியாவுக்கு நிச்சயதார்த்தம் நடந்தது. அமெலியாவின் தன்னம்பிக்கை, துணிவு, ஆண்–பெண் சமத்துவம் போன்ற விஷயங்களை சாப்மென்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

(தொடரும்.....)

# கத்ரினா கைஃப் அழகு இரகசியம்



**"நான்** குறைந்தபட்சம் வாரம் 3 முறையாவது உடற்பயிற்சி செய்கிறேன். என் முழு உடலுக்கும் பயிற்சி அளிக்கும் வகையில் யோகா, நடைப்பயிற்சி, நீச்சல், ஜிம் என எல்லாம் கலந்துசெய்வேன். என் உடலைப் போலவே உடற்பயிற்சியையும் நேசிக்கிறேன்.

சரியான நேரத்தில் சரியான உணவு சாப்பிடுவது என் வழக்கம். வேக வைத்த காய்கறிகளும் பழங்களும் விருப்பமானவை.

காலை எழுந்ததும் 4 கிளாஸ் தண்ணீர் குடிப்பேன். அவ்வளவு தான் என் ஒல்லி இரகசியம்!

# குழந்தை வளர்ப்பு

**குழந்தை** வளர்ப்பு என்பதே ஒரு கைவந்த கலைதான். குழந்தைக்கு ஏதாவது ஒன்று என்றால் வயது முதிர்ந்த பாட்டியை நோக்கி ஓடுபவர்கள் தான் அதிகம். குழந்தையை கண்டவர்களும் எடுத்து கொஞ்சுவதை வயது முதிர்ந்த பாட்டியால் மட்டுமே அதட்டி தடுக்க முடியும்.

கைக்குழந்தைகளின் முகம் நெருங்கி பிறர் பேசுவதாலும், கையால்



தொடுவதாலும் எச்சில் முத்தம் கொடுப்பதாலும் குழந்தைக்கு தோஷம் ஏற்பட்டு நோய் உண்டாகும். இதையே சித்த மருத்துவமும் பெண் தோஷம், ஆண் தோஷம் எச்சில் தோஷம் என்று குறிப்பிடுகிறது.

அது மட்டுமின்றி காற்று வீசும் குளிர்ந்த நேரத்தில் வெளியில் குழந்தைகளை எடுத்துச் செல்வதால் பறவைகள், பூச்சிகள், விலங்குகள் இவற்றின் மூலமாக நுண் கிருமிகளும் தோன்றும் என்பதை சீதள தோஷம், பறவை தோஷம், பச்சி தோஷம், புள் தோஷம், விஷம தோஷம் என்றும் நீரின் மூலமாக தோற்றுவதை ஜலதோஷம் என்றும் சித்த மருத்துவம் குறிப்பிடுகிறது.

ஆகவே அனுபவம்மிக்க முதியோர்களின் அறிவுரைகள் பின்பற்றப்படுவதும், முதியோர்களை புறக்கணிக்காமல் அரவணைத்தால்தான் கவலையற்ற குழந்தை வளர்ப்பு சாத்தியமாகும்.

மயிலாடும் சிகை என்ற சிறுசெடிகள் மலைப்பகுதிகளில் அதிகம் வளருகின்றன. இதன் தண்டு மற்றும் வேர்களில் உள்ள ரூட்டின் என்னும் பொருள் இரத்தம் உறையும் தன்மையை அதிகப்படுத்தி இரத்தக்கசிவை கட்டுப்படுத்துகின்றன.

பக்றீரியா போன்ற நுண்கிருமியால் தோன்றும் மார்புச்சளி, வயிற்று மற்றும் எச்சிலை துப்பும் போது இரத்தம் போன்றவற்றை நீக்க இதன் வேர் பெருமளவு பயன்படுகிறது. குழந்தைகளுக்கான நோய் எதிர்ப்பால் முக்கிய பணியாற்றுகிறது இந்த மூலிகைச்செடி.

# அன்னாசிப்பழ ஜூஸ்



**தேவையான பொருட்கள்:**

தோல் சீவி சிறிய துண்டுகளாக நறுக்கிய அன்னாசிப்பழம் - 1 கப்
தேங்காய்ப்பால் - 1/4 கப்
ஐஸ் கட்டிகள் - சிறிது
சீனி - தேவையான அளவு

**செய்முறை:**

மிக்ஸர் ஜாரில் நறுக்கிய அன்னாசிப்பழ துண்டுகள், தேங்காய்ப்பால், தேவையான அளவு சீனி, ஐஸ் கட்டிகள் சேர்த்து pulse-இல் வைத்து 10-15 முறை சுற்றிவிடவும். பிறகு 1 நிமிடம் மிக்ஸியில் அரைக்கவும். வேண்டுமானால் மிகவும் குறைந்தளவு தண்ணீர் சேர்த்துக் கொள்ளவும்.

# வீட்டுக்குறிப்புகள்



துவரம் பருப்பை மிக்ஸியில் கரகரப்பாக அரைத்து வைத்துக்கொண்டால் சமைக்கும் போது பருப்பு சீக்கிரம் வெந்துவிடும். காஸ் மிச்சமாகும்.

பலகாரம் செய்ய எண்ணெய் காய வைக்கும் போது, முதலில் கொய்யா இலையைப் போட்டு எடுத்துவிட்டு, பிறகு முறுக்கு, வடை போன்ற பலகாரங்களைச் செய்தால் எண்ணெய் பொங்கி வழியாது.

சீனியில் 5 கிராம்புகள் போட்டு வைத்தால் எறும்பு வராது... நீர்த்தும் போகாது.

சர்க்கரைப் பொங்கல் செய்யும்போது அரிசியில் சிறிது நெய் கலந்து வேகவைத்தால் சுவையும் மணமும் கூடும்.

பச்சரிசியை வெந்நீரில் நனைத்து அப்பத்துக்கு அரைத்தால் மொறுமொறுப்பாக இருக்கும்.

இரண்டு டம்ளர் உளுந்துடன் ஒரு கரண்டி சாதம் சேர்த்து அரைத்து வடை தட்டினால், உளுந்து வடை சுவையாக இருக்கும்.

பால் அல்லது கஞ்சி ஆறினால் மேலே ஏடு படியும். லேசாக தண்ணீர் தெளித்து வைத்தால் ஏடு படியாது.

# பரிசு 1000/- ரூபா. வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

பரிசுப் போட்டி இல :-364

கேள்வி : அட்லாண்டிக் பெருங்கடலை விமானம்மூலம் கடந்த முதல் பெண் சாதனையாளர் யார்?

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:-30.04.2013

விடையைக் கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 364
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுப் போட்டி இல :- 362 இற்கான விடை :- அம்மா.
பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி :- ஜே.ஜன்சியா, Y.M.M.A நகர், ரத்மல்யாய, புத்தளம்.

364

பெயர் : ....................
முகவரி : ....................
....................
தே.அ. அட்டை இல : ....................
விடை : ....................
....................
கையொப்பம் : ....................

கட்சியின் தலைமைத்துவத்தில் படிப்படியாக முன்னேறி பல பொறுப்புகளை வகித்தார். 1970-ஆம் ஆண்டு கட்சியின் வட்டார செயலாளராக நியமிக்கப்பட்ட அவர் அடுத்த ஆண்டே மத்திய ஆளும் குழுவில் உறுப்பினராக சேர்த்துக்கொள்ளப்பட்டார்.

1980-ஆம் ஆண்டு சோவியத் ஆளும் குழுவின் முழு உறுப்பினராக அவர் பதவி உயர்வு பெற்றார். அந்தக் காலகட்டம் வரை சோவியத் யூனியனின் அதிபராக இருந்த Fyodor Kulakov 1982-ஆம் ஆண்டு மறைந்தபோது Andropov-வும், இரண்டு ஆண்டுகளில் அவர் மறைந்தபோது Chernenko-வும் அதிபர் பொறுப்பை ஏற்றனர். 1985-ஆம் ஆண்டு மார்ச் 11-ஆம் நாள் Chernenko இறந்தபோது அடுத்த நாளே கட்சியின் பொதுச் செயலாளர் பொறுப்பும்; அதிபர் பொறுப்பும் கொர்பசொவின் கைகளுக்கு வந்தது. முந்தைய சோவியத் அதிபர்களைப்போல் அல்லாமல் மற்ற நாடுகளுக்கு நிறைய பயணங்களை மேற்கொண்டவர் கொர்பசோவ். அதனால் அவரது பார்வையும், அணுகுமுறையும் வேறுபட்டதாக இருந்தது. அவர் பதவியேற்றபோது மிகப்பெரிய பிரச்சினைகளை எதிர்நோக்கியிருந்தது சோவியத் யூனியன். ஆயுத போட்டா போட்டிக்கு அளவுக்கு அதிகமாக சொத்து செலவழிக்கப்பட்டது அதற்கு முக்கிய காரணம்.

### 1987ஆம் ஆண்டின் அணு ஆயுதங்களை குறைக்கும் ஒப்பந்தம்

பதவியேற்ற வேகத்திலேயே ஆயுத போட்டா போட்டியை முடிவுக்குக் கொண்டுவர முடிவெடுத்தார் கொர்பசோவ். அப்போதைய அமெரிக்க அதிபர் Ronald Reagan-னின் அழைப்பை ஏற்று இருவரும் நான்கு உச்சநிலை சந்திப்புகளை நடத்தினர். அதன்பயனாக 1987ஆம் ஆண்டில் அணு ஆயுதங்களை குறைக்கும் ஒப்பந்தத்தில் இரு தலைவர்களும் கையெழுத்திட்டனர். அந்தக்கணமே சோவியத் யூனியனின் தலையெழுத்தும் மாறத்தொடங்கி விட்டது என்பதனை உலகம் அப்போது உணரவில்லை. அடுத்த ஆண்டே இன்னொரு முடிவையும் அறிவித்து உலகை அசத்தினார் கொர்பசோவ். ஒன்பது ஆண்டுகளாக ஆப்கானிஸ்தானை ஆக்ரமித்திருந்த சோவியத் படைகளை மீட்டுக்கொள்வதாக அவர் அறிவித்தார். முன்னைய தலைவர்கள் அவமானம் கருதி செய்ய மறுத்த செயல் அது. வெறும் வீம்புக்காக படைகளை அங்கே வைத்திருந்து இழப்பை அதிகமாக்கிக் கொள்வதை விட அங்கிருந்து வெளியேறி இழப்பை குறைத்துக் கொள்ள வேண்டும் என்ற அவரது விவேகத்தை உலகம் பாராட்டியது.

### பொருளியல் சீர்திருத்தமும் ஜனநாயக தேர்தலும்

அந்த இரண்டு வெளியுறவுக் கொள்கைகளுக்கும் தந்த அதே முக்கியத்துவத்தை நாட்டின் பொருளியலை சீர்ப்படுத்துவதிலும் தந்தார் கொர்பசோவ். perestroமைய என்ற பொருளியல் சீர்திருத்தத்தை அவர் அறிவித்தார். அந்த சீர்திருத்தத்தால் கம்யூனிஸ்டு கட்சியின் இரும்புப்பிடி தளரத்தொடங்கியது. சில துறைகளில் தனியார்மயத்திற்கு அனுமதி வழங்கினார். 1986-ஆம் ஆண்டு Glasnost என்ற திறந்த கொள்கையை அறிவித்தார். அந்தக் கொள்கைதான் கம்யூனிசத்தின் அழிவிற்கு அடிகோலியது. சோவியத் யூனியனில் மூடியிருந்த பல கதவுகளை அது திறந்துவிட்டது. தனி மனிதர்களும், பத்திரிகைகளும் அச்சமின்றி அரசியல் பேச அனுமதிக்கப்பட்டது. 1989-ஆம் ஆண்டு இன்னும் ஓர் அதிசயம் நிகழ்ந்தது. முதன்முறையாக சோவியத் நாடாளுமன்றத்திற்கு தேர்தல் நடந்தது. 1917-ஆம் ஆண்டு லெனின் ஆட்சியை கைபற்றிய பிறகு ரஷ்யாவில் நடைபெற்ற முதல் சுதந்திர தேர்தல் அது என்பது குறிப்பிடத்தக்கது.

### கிழக்கு ஐரோப்பாவிலும் கம்யூனிசம் வீழ்ந்தது

இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு பல்கேரியா, ருமேனியா, போலந்து, ஹங்கேரி, செக்கோஸ்லவாக்கியா, கிழக்கு ஜெர்மனி ஆகிய ஆறு நாடுகளில் சோவியத் யூனியனின் கம்யூனிஸ்டு கட்சி ஆதிக்கம் செலுத்தியது. அந்தக்கட்சிகள் அனைத்துமே மக்களால் வெறுக்கப்பட்டன. அந்த நாட்டின் கம்யூனிச தலைவர்கள் சோவியத் இராணுவத்தின் துணையுடனும், இரகசிய பொலிஸ் துணையுடனும் சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு இரும்புக்கரங்களுடன் கோலோச்சினர். ஆனால் 1989-90 ஆகிய இரண்டு ஆண்டுகளில் அந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் அதிசயித்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. 1989-ஆம் ஆண்டில் கிழக்கு ஜெர்மனியில் கொந்தளிப்பு ஏற்பட்டது இரண்டு ஜெர்மனிகளையும் பிரித்த பெர்லின் சுவற்றை (Berlin Wall) தாண்டி மேற்கு ஜெர்மனிக்கு செல்ல மக்கள் முயன்றனர். அப்போது கிழக்கு ஜெர்மனியில் கம்யூனிஸ்டு கட்சியின் தலைவராக இருந்த Erich u onecker வழக்கம்போல் அடக்குமுறையை கையாள நினைத்த அந்த தருணத்தில் பெர்லினுக்கு அவசர வருகை மேற்கொண்டார் கொர்பசோவ்.

அடக்குமுறையை பயன்படுத்த வேண்டாம் என்று எச்சரித்ததோடு சீர்திருத்தத்தை விரைவில் தொடங்குமாறு வலியுறுத்திய கொர்பசோவ் எந்த அடக்குமுறைக்கும் சோவியத் படைகள் பயன்படுத்தக் கூடாது என்றும் u onecker-ரிடம் கூறினார். அப்போது 380 ஆயிரம் ரஷ்யப்படைகள் கிழக்கு ஜெர்மனியில் இருந்தன. தக்க தருணத்தில் அவர் தலையிட்டதால் இரத்தக்களறி தவிர்க்கப்பட்டது. இரண்டே வாரங்களில் u onecker பதவி துறக்க நேரிட்டது. அதே ஆண்டு நவம்பர் 9-ஆம் நாள் நம்ப முடியாத ஒன்று நடந்தது ஆம் பெரிலின் சுவர் திறந்து விடப்பட்டது. மில்லியன் கணக்கான கிழக்கு ஜெர்மானியர்கள் சுதந்திரமாக மேற்கு ஜெர்மனிக்குள் நுழைந்தனர். வரலாற்றில் ஒரு களங்கமாக இருந்த பெர்லின் சுவர் தகர்க்கப்பட்டது. அதன் எதிரொலி மற்ற கம்யூனிச நாடுகளிலும் கேட்கத் தொடங்கியது. பல்கேரியாவில் இரும்புக்கரத்தோடு ஆட்சிசெய்து வந்த டோடொ ஜிப்கோப் நவம்பர் 10-ஆம் நாள் பதவி துறக்க நேரிட்டது. ஒரு வாரம் கழித்து செக்கோஸ்லவாகியா தலைநகர் ∴ப்ராகில் மிகப்பெரிய மக்கள் ஆர்பாட்டம் நடைபெற்றது.

ஹங்கேரியில் நவம்பர் 26-ஆம் நாள் சுதந்திர தேர்தல் நடைபெற்றது பெரும் வாக்கு வித்தியாசத்தில் கம்யூனிஸ்டு ஆட்சியாளர் தோல்வியைத் தழுவினர். போலந்திலும் கம்யூனிஸ்டு கட்சி தோற்கடிக்கப்பட்டு 1990-ஆம் ஆண்டு ஜனவரி முதல் திகதியிலிருந்து அங்கு சந்தைப் பொருளியல் அறிமுகமானது. தன்னுடைய சகாக்கள் ஒவ்வொருவராக மண்ணைக் கெளவுவதைப் பார்த்தபோதும் ருமேனியாவின் சர்வாதிகாரி விடாப்பிடியாக ஆட்சியைத் தொடர்ந்தார். ஆனால் மக்களின் ஆவேசம் எந்த சர்வாதிகாரியையும் விட்டு வைக்காது என்பதற்கு இன்னும் ஓர் உதாரணமாக அமைந்தது டிசம்பர் 25-ஆம் நாள் நிகழ்ந்த அந்த சம்பவம். அன்றைய தினம் ஆட்சியில் இருந்து கவிழ்க்கப்பட்டு பின்னர் சிறைப்பிடிக்கப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டார் சர்வாதிகாரிSakharov. அதோடு கிழக்கு ஐரோப்பாவின் கடைசி கம்யூனிஸ்டு சகாப்தமும் முடிவுக்கு வந்தது. இவற்றையெல்லாம் விரிந்த புருவங் களோடு பார்த்துக் கொண்டிருந்த சில சோவியத் குடியரசுகளும் சுதந்திர கோரிக்கை விடத்தொடங்கின.

### சோவியத் யூனியனில் 15 குடியரசுகளும் சுதந்திரப் பிரகடனம்

1990-ஆம் ஆண்டு மார்ச் 11-ஆம் நாள் சோவியத் யூனியனிலிருந்துதான் சுதந்திரம் பெற்றுவிட்டதாக தையரியமாக அறிவித்தது Lithuania. கொர்பசோவ் அதை விரும்பாவிட்டாலும் படை பலத்தை பயன்படுத்தவில்லை. அந்த ஆண்டு இறுதிக்குள் சோவியத் யூனியனில் இடம்பெற்றிருந்த 15 குடியரசுகளும் சுதந்திர பிரகடனம் செய்தன. சோவியத் யூனியனின் சிதைவை வைத்த கண்வாங்காமல் உலகம் பார்த்துக் கொண்டிருக்க கொதிப்படைந்த சில பழமைவாத கம்யூனிஸ்டுகளும், இராணுவத் தளபதிகளும் 1991-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஆட்சிக்கவிழ்ப்பில் ஈடுபட்டு கொர்பசோவை கைதுசெய்தனர். ஆனால் சில தலைவர்களும் சோவியத் மக்களும் அதற்கு கடுமையான எதிர்ப்பு தெரிவிக்கவே அந்த முயற்சி பிசுபிசுத்து போனது. அதன் பிறகு ரஷ்யாவில் அசுர வேகத்தில் மாற்றங்கள் நிகழ்ந்தன. கம்யூனிஸ்டு ஆட்சி தடை செய்யப்பட்டது அதன் சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டன. அந்த ஆண்டு இறுதிக்குள் அத்தனை சோவியத் குடியரசுகளும் தனித்தனியாக பிரிந்தன.

### ஆயுத போட்டா போட்டிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டதா?

சோவியத் யூனியன் அதிகாரபூர்வமாக கலைந்தது. அதே ஆண்டு சொந்தமாகவே பதவிவிலகினார் கொர்பசோவ். அவர் பதவி ஏற்று ஆறே ஆண்டுகளில் அத்தனையும் நடந்து முடிந்தது. இருபதாம் நூற்றாண்டை பாதுகாப்பற்றதாக மாற்றிய எத்தனையோ தலைவர்களுக்கு மத்தியில் தனி ஒரு மனிதனாக அதன் பாதுகாப்பை உறுதி செய்தவர் கொர்பசோவ். இன்று உலகில் ஓரளவுக்கு அமைதி நிலவுவதற்கு வித்திட்டு தேவையற்ற கொள்கைகளை தைரியமாக தூக்கியெறிந்தவர் அவர் என்று அமெரிக்கர் கூறுவர். கெளரவம் கருதி ஆயுதங்களை குவித்த தலைவர்களுக்கு மத்தியில் பொருளாதாரமும், உலக அமைதியும் கருதி ஆயுத போட்டா போட்டிக்கு முற்றுப்புள்ளி வைத்தவர் அவர் என சில ஆய்வாளர் கூறுவர். கம்யூனிசம் இல்லாத உலகமே அமெரிக்க இலட்சியம்.

பனிப்போர் உச்சக்கட்டத்தில் இருந்தபோது அணு ஆயுத போர் நீளுமோ? மூன்றாம் உலகப் போர் வெடிக்குமோ? என்று உலகம் அஞ்சிய நாட்கள் ஏராளம். ஆனால் 1917-ஆம் ஆண்டு உலகுக்கு முன்னுதாரணமான ஆட்சி வழங்கும் உறுதியோடு லெனின் மூலம் ரஷ்யாவில் வேரூன்றிய கம்யூனிசம் 74 ஆண்டுகளுக்குப் பிறகு 1991-ஆம் ஆண்டில் அடியோடு வேரறுந்து போகும் என்று எவரும் எதிர்பார்த்திருக்க முடியாது. ஆம். அந்த ஆண்டு சோவியத் யூனியன் சிதறுண்டது. கம்யூனிசம் சிதைந்துபோனது. பனிப்போரும் ஆவியாகி காற்றில் கரைந்துபோனது என நம்பப்பட்டது. ஆயுத போட்டா போட்டியிலிருந்து விடுபட்டதாக எண்ணி உலகம் நிம்மதி பெருமூச்சுவிட்டது. ஆனால் உண்மை நிலவரம் அவ்வாறு இல்லை.

### உலகப் போர்களைப் பார்த்த மனிதகுலம்

முதல் இரண்டு உலகப் போர்களைப் பார்த்த மனிதகுலம் போரையே வெறுக்கத் தொடங்கிவிட்டது. உலகப் போர்களால் ஏற்பட்ட சேதங்களும், மனித உயிர்களின் அழிவுகளும் எழுத்தில் அடங்காதவை. மிச்சம் மீதியிருந்த மக்கள் மனநோயாளிகளாகவே மாறிவிட்டனர்.

ஒருமுறை போரினால் ஏற்பட்ட அழிவுகளை ஈடுசெய்ய பல தலைமுறைகளாலும் முடியவில்லை. கல், வில், வாள், வேல், துப்பாக்கி, பீரங்கி என்று தொடங்கி இப்போது அணு ஆயுதங்களின் காலமாகப் போய்விட்டது. எனவே போரைத் தொடுக்கும் நாடும், துணைபோகும் நாடுகளும்கூட இனி தப்பிக்கவே முடியாது என்ற நிலை உருவாகிவிட்டது.

இரண்டாம் உலகப்போரின் முடிவில் வீசப்பட்ட அணுகுண்டுகளினால் ஏற்பட்ட அழிவு இன்னும் தொடர்கிறது. இனிமேல் போர் தொடங்கினால் அது அணு ஆயுதங்களின் போராகவே அமையும். அதனால் புல், பூண்டுகள்கூட மிஞ்சாது என்பதால் மக்கள் இந்தப் போரை வெறுக்கத் தொடங்கிவிட்டனர். போரை நேசிப்பவர்கள் மனநோயாளிகளாகவே இருப்பார்கள் என்று அறிவுலகம் முடிவு செய்துவிட்டது.

### மற்றொரு உலகப்போரின் அச்சுறுத்தல்

போருக்கான சூழ்நிலை முற்றிலும் மறைந்து விடவில்லை. எந்தநேரத்திலும் போர் வெடிக்கலாம் என்ற நிலையே தொடர்கிறது. உலகில் ஆங்காங்கு கலகம், உள்நாட்டுப் போர், நாடுகளிடையே சச்சரவு என மழைவிட்டும் தூவானம் விடவில்லை.

அமெரிக்கா போன்ற வல்லரசுகளின் கெடுபிடியால் ஆப்கானிஸ்தான், ஈராக், எகிப்து, லிபியா, சிரியா, பலஸ்தீனம், ஈரான், இஸ்ரேல், கொரியா எனப் போர்மேகங்கள் இடிஇடித்து எல்லோரையும் அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றன. எப்போது வேண்டுமானாலும் போர்மழை பெய்யலாம்.

இப்போது கொரிய தீபகற்பப் பகுதிக்கு அமெரிக்காவின் நாசகாரிப் போர்க்கப்பல் விரைந்துவிட்டது. வடகொரியாவின் இராணுவ நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் பொருட்டு அதிநவீன ராடர் கருவிகள் பொருத்தப்பட்ட கப்பலாகும் இது.

வடகொரியா, தென்கொரியா நாடுகள் இடையே அண்மைக் காலமாக மோதல் போக்கு அதிகரித்துவருகிறது. உலக நாடுகளின் எதிர்ப்பையும் மீறி அணு ஆயுதச் சோதனை, ரொக்கெட் ஏவுதல் போன்ற நடவடிக்கைகளால் வடகொரியா பொருளாதாரத் தடைக்கு உள்ளாகியுள்ளது.

இந்த நடவடிக்கைக்கு அமெரிக்கா தீவிரம் காட்டிவருவதால் வடகொரியா கோபம் கொண்டுள்ளது. இந்நிலையில் அமெரிக்காவுடன் இணைந்து தென்கொரியா போர்ப்பயிற்சி நடத்துகிறது. அமெரிக்காவின் அதிநவீன விமானங்கள் இதில் பயன்படுத்தப்படுகின்றன.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இருதரப்புக்கும் இடையேயான போர்நிறுத்த ஒப்பந்தத்தை வடகொரியா ஒரு தரப்பாக ரத்து செய்துவிட்டது. “இப்போதைய நிலையில் வடகொரியா, தென்கொரியா இடையிலான உறவுகள் போர்க்காலத்தில் இருக்கும் நிலைமைகளை ஒத்திருக்கிறது. எனவே, எந்த விவகாரமானாலும் போர்க்கால நடைமுறைகளின்படிதான் தென்கொரியாவுடன் பேச்சு நடத்துவோம்” என்று வடகொரிய அரசு செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இருநாடுகளுக்கும் இடையே உள்ள கடல், நில எல்லைப் பகுதியில் சிறு தவறு ஏற்பட்டாலும் அது போராக மாறிவிடும். அணு ஆயுதப்போர் ஏற்படவும் வாய்ப்புள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1950 - 53 ஆண்டுகளில் நிகழ்ந்த போருக்குப் பின்னர், இரு நாடுகளும் போர்நிறுத்த உடன்படிக்கையில் கையெழுத்திட்டன. எனினும் அமைதி ஒப்பந்தம் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை.

இந்நிலையில் வடகொரியா, ஏவுகணை மற்றும் அணு ஆயுதச் சோதனையை நடத்தியதைத் தொடர்ந்து, அதற்குப் பதிலடியாக தென்கொரியாவும், அமெரிக்காவும் இணைந்து போர்ப் பயிற்சிகளை மேற்கொண்டன. அதனால்தான் ஆத்திரமடைந்த வடகொரியா போர் நிறுத்த ஒப்பந்தத்தை ரத்து செய்வதாக அறிவித்துள்ளது.

இதனால் கோபம் கொண்ட அமெரிக்கா, “அந்தப் பகுதியில் 28,500 அமெரிக்கப் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர் என்றும், எங்களுடன் ஜப்பான் உள்ளிட்ட பல நட்பு நாடுகள் கைகோத்துள்ளன என்றும், எந்தச் சூழ்நிலையையும் எதிர்கொள்ளத் தயாராக இருக்கிறோம் என்றும் அமெரிக்காவின் இராணுவத் தலைமையகமான பென்டகனின் செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார்.

வல்லரசு நாடுகளான அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் மிகப்பெரிய வணிகமே ஆயுத விற்பனையாகும். இதற்காக நாடுகளுக்கிடையே பகைமை மூட்டியும், உள்நாட்டுப் போரைத் தூண்டியும் ஆயுத விற்பனைக்கு வழி செய்கிறது. வளைகுடா நாடுகளின் எண்ணெய் வளத்தினைக் கவரவும், ஆயுத விற்பனைக்காகவும் போர்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இப்போது கொரிய தீபகற்பம் அவர்களுக்கு வாசலைத் திறந்துவிடுகிறது. இவ்வாறான பழைய கண்ணோட்டமும் சில ஆய்வாளரிடம் உண்டு. தத்தமது பொருளாதார - வர்த்தக நலன்களை காப்பாற்ற பெரிய போர்கள் அற்ற உலகத்தையே வல்லரசுகள் விரும்பலாம்.

### ஐ.நா. அவையில் கொண்டுவரப்பட்ட சர்வதேச ஆயுத விற்பனை கண்காணிப்பு ஒப்பந்தம்

இந்நிலையில் ஐ.நா. அவையில் கொண்டுவரப்பட்ட சர்வதேச ஆயுத விற்பனை கண்காணிப்பு ஒப்பந்தம் 154 நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதில் இந்தியா, சீனா, ரஷ்யா, கியூபா, சவூதி அரேபியா முதலிய 23 நாடுகள் தங்களது எதிர்ப்பைப் பதிவு செய்து வாக்கெடுப்பைப் புறக்கணித்தன. வடகொரியா, ஈரான், சிரியா ஆகிய மூன்று நாடுகள் ஒப்பந்தத்திற்கு எதிராக வாக்களித்தன.

உலகில் ஆயுத விற்பனையில் அமெரிக்காவே முதலிடம் வகிக்கிறது. அதன்பின்னர் ஐரோப்பிய நாடுகள் ஆயுத விற்பனையில் கொடிகட்டிப் பறக்கின்றன. இந்நிலையில் இந்த ஒப்பந்தம் நிற்றைவேற்றப்படுவதன் மூலம் அமெரிக்கா நினைத்தால் ஒரு நாட்டுக்கு இந்த ஒப்பந்தத்தைக் காட்டி ஒருதலைப்பட்சமாக நடந்து கொள்ளமுடியும் என்று இதனை எதிர்க்கும் நாடுகள் கூறுகின்றன.

“இப்போது உலகளவில் ஆயுத விற்பனை ஆண்டுக்கு 10 ஆயிரம் கோடி அமெரிக்க டொலரை எட்டிவிட்டது. இந்த ஒப்பந்தம் நிறைவேற்றுவதன்மூலம் இனி ஆண்டுக்கு 7ஆயிரம் கோடி அமெரிக்க டொலர் என்றளவில் கட்டுக்குள் கொண்டு வர முடியும்” என்று ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

### இந்தியாவும், சீனாவும் இராணுவத்துக்கு அதிகளவில் நிதி ஒதுக்கீடு

கடந்த சில ஆண்டுகளாக இந்தியாவும், சீனாவும் இராணுவத்துக்கு அதிகளவில் நிதி ஒதுக்கீடு செய்துவருகின்றன. இந்தியா 2013,14ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் 2 இலட்சத்து 3 ஆயிரத்து 672 கோடி ரூபாய் பாதுகாப்புத் துறைக்கு ஒதுக்கியுள்ளது. இது கடந்த ஆண்டைவிட 14 விழுக்காடு அதிகமாகும்.

இதனால் கடந்த சில ஆண்டுகளாக அதிகளவில் இந்தியா இராணுவ ஆயுதங்களை இறக்குமதி செய்துவருகிறது. இந்த ஐ.நா. ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டதன் விளைவாக இனி இதனை அளவுகோலாகப் பயன்படுத்தி, அமெரிக்கா ஏனைய ஆயுத இறக்குமதியைக் கட்டுப்படுத்தும் உள்நோக்கமும் இதற்குள் அடங்கி இருக்கிறது. இதன்மூலம் ஆசியப் பகுதியில் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்கு இது வழி செய்யக்கூடும் என அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

உலகளவில் தனது பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டியநிலையில் இந்தியா இருக்கிறது. எனவே இராணுவத்தை நவீனமாக்க வேண்டிய தேவையிருப்பதால் இராணுவத்துக்குக் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனைத் தெரிவித்த மத்திய அமைச்சர் ப.சிதம்பரம், “நாட்டின் பாதுகாப்பைப் பொறுத்தமட்டில் இன்னும் கூடுதல் நிதி தேவைப்படுமானாலும், அதை ஒதுக்க எந்தவொரு தடையும் இருக்காது” என்றும் உறுதிபடக் கூறினார்.

ஒவ்வொருவரும் தங்கள் தாய்நாட்டின் பாதுகாப்பை விரும்புவது இயற்கை. ஆனால், தேசப் பாதுகாப்பு என்ற பெயரால் ஒதுக்கப்படும் பெருந்தொகையை ஆயுதம் வாங்குவது என்ற பெயரால் ஊழலுக்கு உட்படுத்தலாமா? அப்போதைய ‘∴போபர்ஸ் பீரங்கி பேர’ ஊழலும், இப்போதைய இத்தாலி ஹெலிகாப்டர் பேர ஊழலும் கூறும் கதை என்ன? தேசப் பாதுகாப்பு விஷயத்தில் யாருடனும் சமரசம் செய்து கொள்ள முடியாது என்று கூறுபவர்கள் ஊழலுடன் சமரசம் செய்து கொள்ளலாமா?

ஒவ்வொரு நாடும் தங்கள் இறையாண்மையைக் காப்பதாகக் கூறிக் கொண்டு, இல்லாத எல்லையில் பதற்றத்தை ஏற்படுத்திக் குளிர்காய்கின்றன. எனினும் தவிர்க்கமுடியாதபடி பொருளாதார - வர்த்தக விடயங்களில் சேர்ந்து செயற்படுகின்றன.

கொரிய தீபகற்பத்தில் ஏற்பட்டுள்ள பதற்றமும் இப்படிப்பட்டதுதான். வடகொரியாவின் பின்னணியில் சீனாவும், தென்கொரியாவின் பின்னே அமெரிக்காவும் இருக்கின்றன. அத்துடன் இந்த நாடுகளிடம் அணு ஆயுதங்களும் இருக்கின்றன.,ஒரு தீப்பொறி பட்டாலும் உலகம் வெடித்துச் சிதறிவிடும் எனும் கோரத் தோற்றம் உள்ளது.

இப்போது வடகொரியாவுக்கு எதிராக அமெரிக்காவும் தமக்குச் சொந்தமான குவாம் தீவில் ஏவுகணை எதிர்ப்பு அமைப்புகளை நிறுவிவருகிறது. பென்டகன் மற்றும் விண்வெளி பாதுகாப்புத் துறை சார்பில் டிரக்குகளிலிருந்து ஏவக்கூடிய ஏவுகணை எதிர்ப்பு அமைப்புகள் நிறுவப்பட்டு வருகின்றன. இதற்கிடையில் அமெரிக்க நிலைகள்மீது அணு ஆயுதத் தாக்குதல் நடத்தத் தமக்கு அனுமதி கிடைத்துவிட்டதாக வடகொரிய இராணுவம் கூறியுள்ளது. இதனால் கொரிய தீபகற்பத்தில் பதற்றம் உச்சநிலையை அடைந்துள்ளது.

அணுயுகத்தின் தந்தையெனக் கூறப்படும் அல்பேர்ட் ஐன்ஸ்டீனிடம் ஒரு நண்பர் கேட்டார்: “மூன்றாவது உலகப்போரில் என்ன ஆயுதம் பயன்படுத்தப்படும்?” அதற்கு அந்த அறிவியல் மேதை தந்த பதில்: “மூன்றாவது உலகப் போரைப் பற்றி எனக்குத் தெரியாது.. நான்காவது உலகப் போரில் கல்லும், வில்லுமே பயன்படுத்தப்படும்...”

இதற்கு என்ன் பொருள்? மூன்றாம் உலகப்போர் வந்தால் அணு ஆயுதங்களால் உலகமே அழிந்துபோகும். அதன் பிறகு கற்காலத்தில் இருந்துதான் நாகரிகம் தோன்றும். அப்போது கல்லும், வில்லும் தானே ஆயுதமாகும். இதைத்தான் அந்த அறிஞர் அவ்வாறு எச்சரித்துள்ளார்.

# சிறுபான்மை சமூகத்திற்கு ஓர் எச்சரிக்கை!

- ஏ.எச்.ஏ. ஹுஸைன் -

எனது ஆத்ம நண்பர் ராஜுவும் நானும் சமகால நிகழ்வுகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும்போது இனி வடக்கு, கிழக்கில் சிங்களம் பேசும் தமிழர்களும் சிங்களம் பேசும் முஸ்லிம்களும்தான் இருப்பார்கள் என்று கூறினார்.

அதற்குப் பதிலாக நானும் எனது புத்திசாலித்தனத்தைக் காட்ட வேண்டு மென்பதற்காக அது மட்டுமல்ல புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழ் தெரியாத ஆங்கிலத் தமிழர்களும் இருப்பார்கள் என்றேன்.

இதனை ஒரு நகைச்சுவையாகவும் கரிசனைக்குரிய விடயமாகவும் எப்படி வேண்டுமானாலும் வாசகர்கள் எடுத்துக் கொள்ளலாம்.

ஆனால், நமது கடல் வளம், காட்டு வளம், நில வளம், நீர் வளம் அவை மட்டுமல்லாமல் நமது மொழி கலாசாரப் பண்பாட்டு விழுமியங்கள் எல்லாமே மெல்ல மெல்ல ஏப்பம் விடப்பட்டுக் கொண்டிருக்கும் யதார்த்த நிலையை நாம் பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றோம்.

இதில் ஆபத்து என்னவென்றால், "நாடு பற்றி எரிகிறபோது நீரோ மன்னன் பிடில் வாசித்தானாம்" என்கின்ற கதைதான் நமது தமிழ்பேசும் மக்களின் கதையாகிவிட்டது.

எல்லாம் நம் கண்முன்னே நடந்து கொண்டுதானிருக்கின்றது. ஆனால் நாம் உறக்கத்தில் அல்லது மயக்கத்தில் வீணை இசையை ரசித்துக் கொண்டிருக்கின்றோம்.

நமது வளங்கள் கபளீகரம் செய்யப் பட்டு நமது இருசாராரினதும் வாழ்வியல் தடயங்கள் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற போதிலும்கூட நாம் எலும்புத் துண்டுகளுக் காகத் தெருத் தெருவாய் அலைந்து ஆளாளுக்கு அடிபிடிப்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

எப்படிப் பார்த்தாலும் வடக்கு, கிழக்கு என்பது தமிழ் பேசும் மக்களின் தாயகப் பகுதிகள்தான். இதில் இருவேறுபட்ட தர்க்கங்களுக்கு இடமில்லை. அங்குள்ள நிலபுலன்களும் வளங்களும் அந்த இருசாராருக்கும் சொந்தமானவைதான்.

ஆனாலும் இதனை நாம் யதார்த்தத்தில் உணர்ந்தபாடில்லை. இந்த இரு சாராரும் இவ்வளவு அடிபட்டும் இழப்புக்களைச் சந்தித்தும் இன்னமும் தங்களுக்குள்ளேயே முட்டி மோதிக்கொள்கின்ற சாபக்கேடு தொடர்வதுதான் வேதனை தரக்கூடியது.

முல்லைத்தீவில் தமிழர்களும் முஸ்லிம்களும் ஏட்டிக்குப் போட்டியான தூண்டிவிடப்பட்ட ஆர்ப்பாட்டப் போட்டியில் எதிரெதிரே நிற்கின்றார்கள்.

நிலத்தை அபகரிக்கின்றார்கள் என்பது அரசியல்வாதிகளால் தூண்டிவிடப்பட்ட உணர்ச்சியூட்டல்கள். எதிரும் புதிருமாக நின்று ஆர்ப்பாட்டம் செய்வது வேறு யாருமல்ல, அங்கே பூர்வீகமாக ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல் வாழ்ந்த தமிழ் பேசும் மக்கள்தான்.

அங்குள்ள நிலபுலன்களும் வளங்களும் யாருடையவை? எப்படிப் பார்த்தாலும் அவை அங்கு வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கும் மற்றும் இனிவாழப்போகும் தமிழ் பேசும் மக்களுக்குச் சொந்தமானவைதான்.

நிலத் தொடர்பால், தாய்வழி உறவால், தாய்மொழியால், சமூக கலாச்சார, பண்பாட்டு, விழுமியப் பண்புகளால் ஒன்றுபட்டு நன்மையான காரியங்களில் பங்கெடுத்து வாழ்ந்த நாம் இந்த யதார்த்தத்தை உணரத் தவறிவிட்டு இப்பொழுது தெருவுக்கு வந்து பிரிந்து நின்று கூச்சல் போடுகின்றோம்.

உண்ணும் உணவிலிருந்து அணியும் ஆடை வரை ஆக்கிரமிப்பாளர்களின் அனுமதியைப் பெற வேண்டும் என்று கூறுமளவிற்கு நிலைமை மோசமாகியுள்ளது.

போதாக்குறைக்கு இப்போது பின்னப்படும் சூழ்ச்சி வலைகளைவிட இன்னமும் ஆலோசனை கள் பெற்றுவருவதற்காக பொதுபல சேனாவினர் இப்பொழுது அமெரிக்கா பறந்துள்ளார்கள்.

இலங்கையில் ஒரே தாய் மொழியைப் பேசும் சிறுபான்மையினரை இணைந்து வாழ விடக்கூடாது என்பதிலும் சூழ்ச்சிக்காரர்கள் மிக மிக அக்கறையாக இருக்கிறார்கள்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக நமது இந்தத் தாய்வழி, தாய்மொழி உறவுகள் இன்னமும் தங்களையே வெட்டி வீழ்த்தும் பேராபத்தை உணராதிருப்பது எதிர்காலத்தை சூனியமாக்கி விடும் என்றே அஞ்ச வேண்டியுள்ளது.

நமக்குள் அவ்வப்போது வந்து மறையும் இந்த வகையான அரவணைப்பு எப்போதும் என்ன வகையான தியாகங்களைச் செய்தும் தொடர வேண்டும் என்பதே நலம் நாடுவோரின் எதிர்பார்ப்பாகும்.

சில சமயங்களில் நாம் ஒன்றுபட்டு ஓங்கிக் குரல் கொடுக்கின்றோம் என்பதில் இருவேறுபட்ட கருத்துக்கு இடமில்லை.

சதிகாரர்களின் சூழ்ச்சியால் சிறுபான்மை யினங்கள் பிளவுபட்டு நிற்கின்றபோது, கடந்த கால கசப்புணர்வுகளை மறந்து மீண்டும் யதார்த்தத்தின் அடிப்படையில், பாதிக்கப்படும்போது பரஸ்பரம் உதவுவதன் மேன்மைப் பண்பை இந்த நிகழ்வு பறை சாற்றுவதாக அமைந்திருக்கின்றது.

"முஸ்லிம் சகோதர சகோதரிகள் வீதிகளில் துன்புறுத்தப்பட்டால் அல்லது அவர்களின் வணக்கஸ்தலங்கள் தாக்கப் பட்டால் நாம் அக்கறையற்ற பார்வையாளர் களாக இருந்துவிட முடியாது.

சக சிறுபான்மையினர் என்றவகையில் தமிழ் மக்கள் முஸ்லிம்களின் பாதுகாப்பற்ற தன்மை அச்சம் மற்றும் பதற்றம் ஆகியன குறித்து வேதனையடைந்துள்ளோம்.

முஸ்லிம்கள் இந்த நாட்டில் சரித்திர ரீதியாக வாழ்ந்து வருபவர்கள். அத்துடன் நாட்டின் ஒட்டுமொத்த சமூகங்களின் அபிவிருத் திக்காக மிகப் பெரும் பங்களிப்பை பல நூற்றாண்டுகளாகச் செய்துவந்துள்ளார்கள்.

அவர்கள் தங்களுக்கெனத் தனித்துவமான பாரம்பரிய பழக்க வழக்கங்கள் உணவு மற்றும் உடைகளைக் கொண்டுள்ளார்கள்.

> **இலங்கையில் ஒரே தாய் மொழியைப் பேசும் சிறுபான்மை யினரை இணைந்து வாழ விடக்கூடாது என்பதிலும் சூழ்ச்சிக்காரர்கள் மிக மிக அக்கறையாக இருக்கிறார்கள்.**
> **ஆனால் துரதிர்ஷ்டவசமாக நமது இந்தத் தாய்வழி, தாய் மொழி உறவுகள் இன்னமும் தங்களையே வெட்டி வீழ்த்தும் பேராபத்தை உணராதிருப்பது எதிர்காலத்தை சூனியமாக்கி விடும் என்றே அஞ்ச வேண்டியுள்ளது.**

அவர்கள் தங்கள் மதத்தின் மீது தெய்வ நம்பிக்கை கொண்ட பற்றாளர்கள்.

8 ஆம் நூற்றாண்டு முதல் 13 நூற்றாண்டு வரை பரவியிருந்த இஸ்லாமிய பொற்காலத்தின் பண்பாடு சார்ந்த கொடையாளர்களாகிய இலங்கை முஸ்லிம் மக்கள் கலை மற்றும் இசை, மருத்துவம், சட்டம், விஞ்ஞானம், தொழில் முயற்சி, கல்வியறிவு மற்றும் இன்னோரன்ன துறை களின் வளர்ச்சியில் உயர்நிலையினை அடைந்துள்ளார்கள்.

எவ்வாறாயினும் இன்று காழ்ப்புணர்ச்சி கொண்டவர்கள் முஸ்லிம்களுக்கெதிராக வன்மம் சார்ந்த பிரச்சாரத்தை மேற் கொண்டுள்ளனர். பட்டப்பகலில் அவர்களது மத கலாசார உடைகளை அணிந்த பெண்கள் தீயநோக்கில் துன்புறுத்தப்பட்டுள்ளனர்.

இப்பொழுது முஸ்லிம்கள் நாட்டில் அச்சத்துடனும் அவமரியாதையான சூழலிலும் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் மக்களினதும் முஸ்லிம்களினதும் உறவு எப்போதும் மிகவும் நெருக்கமானதாக இருந்து வந்துள்ளது.

சில சமயம் இந்த உறவு மிகவும் அரிதானதாக இருப்பினும் வன்செயல் மற்றும் குரூரத்தனம் காரணமாக வெட்கப்படக் கூடியதாக இருந்தது என்றாலும் இரு தரப்பு உறவு மிகவும் நெருக்கமாகவே இருந்து வருகின்றது. மற்றவரின் விதியில் உயிர் பிழைக்கலாம் என்ற அடிப்படையில் எம் மக்கள் உறவு பின்னிப்பிணைந்துள்ளது.

நமது பொது மொழி மற்றும் வாழ்விடம் ஆகிய அம்சங்களின் இணைப்பை இலகுவாகத் துண்டிக்க முடியாது. ஆகவே முஸ்லிம்களுக் கெதிரான வன்செயல்கள் நிறுத்தப்படல் வேண்டும். தினமும் இடம்பெறும் வெறுப் பூட்டுகின்ற அவதூறுப் பிரச்சாரங்களுக்கு முடிவு கட்டப்பட வேண்டும்.

அரசாங்கமும் முஸ்லிம்களுக்கெதிரான அவதூறுகளுக்கு ஒத்துழைப்பு நல்குவதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்"

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் பாராளுமன்றத்தில் விடுத்த விஷேட அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

இதனிடையயே கிழக்கில் உள்ள முஸ்லிம் மத நிறுவனங்களின் தலைவர்களை விஷேட விமானத்தின் மூலம் கொழும்புக்கு அழைத்து பாதுகாப்புச் செயலாளர் பேச்சு வார்த்தை நடத்தி முஸ்லிம்களை அச்சப்படத் தேவை யில்லை என்று கூறியிருக்கின்றார்.

கிறீஸ் பேய் பிரச்சினையும் காத்தான்குடி கடற்பகுதியில் இருவர் கொல்லப்பட்டதுடன் தான் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது என்பதை இங்கு நினைவூட்டியாக வேண்டும்.

அப்பொழுதும் இது மாதிரி கிழக்கிலிருந்து முஸ்லிம்கள் விஷேட ஹெலிகொப்டர் மூலம் கொழும்புக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள்.

தற்சமயம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அவர்கள் முஸ்லிம் களுக்காகப் பாராளுமன்றத்தில் பரிந்து பேசி யிருக்கின்ற சூழ்நிலையில் கிழக்கிலிருந்து முஸ்லிம் சமயத் தலைவர்கள் அவசர அவசர மாக கொழும்புக்கு அழைக்கப்பட்டார்கள்.

முன்னரே கூறிய பிரித்தாளும் சூழ்ச்சிக் கான நுட்பங்கள் ஆழமாக அடித்தளமிடப்படு கின்றன என்பதை தமிழ் பேசும் மக்கள் மீண்டும் நினைவில் கொள்ள வேண்டும்.

---

# வந்தார்கள் சென்றார்கள்!

**இலங்கையில்** அவ்வப்போது அரசியல் மாற்றங்கள் மற்றும் அரசியல் நிகழ்வுகள் இடம் பெற்றுக் கொண்டிருக் கின்றன.

இதன் மத்தியில், இந்தியாவும் இலங்கையின் விடயத்தில் தமது அரசியல் நகர்வுகளை மேற்கொள்வதும் வழமையாக அமைந்துவிட்டது.

சிறிமா - சாஸ்திரி உடன் படிக்கை முதல் இந்தியா, இலங்கையின் அரசியல் விடயங்களில் நேரடி தாக்கங் களை ஏற்படுத்திவருவதாக கூறமுடியும்.

இந்த சிறிமா-சாஸ்திரி உடன் படிக்கையானது, மனிதாபி மான அடிப்படையற்ற ரீதியில் மேற்கொள்ளப்பட்டதாக அப் போதிருந்தே குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுவருகின்றன


குறிப்பாக, தாய், தந்தையர் இந்த உடன்படிக்கையின் கீழ் இந்தியாவினால் ஏற்றுக் கொள்ளப்பட்டனர்.

அதேநேரம் அவர்களின் பிள்ளைகள் இலங்கையிலேயே தங்கவைக்கப்பட்டனர். இதன் காரணமாக தமிழகத்தில் வாழ்கின்ற தமது பெற்றோருக் கும் இலங்கையில் மலையகப் பகுதியிலேயே வாழ்கின்ற பிள்ளைகளுக்கும் இடையில் பாரிய உறவு இடைவெளி தோன்றியது.

பெரும்பாலாக இந்தியாவில் இருக்கும் பெற்றோர் தமது பிள்ளைகளை சந்திக்க முடியாமலேயே மரணித்துப் போன சம்பவங்களும் இடம்பெற்றன.

இது இந்தியா, இலங்கையின் இந்திய வம்சாவளித் தமிழர்களை தமது அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்திக்கொண்ட சந்தர்ப்பம் என்று கூறமுடியும்.

இதன்பின்னர் 1983 இனவன் முறையின் பின்னரும் இந்தியா, தமது நலனுக்காக இலங்கையில் உள்ள ஆயுத இயக்கங்களுக்கு



பயிற்சியளித்து இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக செயற்படவைத்தது.

அத்துடன் 1987 ஆம் ஆண்டு தமது நலனை மட்டுமே கருத்திற் கொண்டு இலங்கையுடன் இந்து - இலங்கை உடன்படிக்கையை இந்தியா ஏற்படுத்தியது.

இதன்மூலம் இலங்கையில் தமிழர்களுடைய போராட்டத்துக் கான தீர்வை இந்தியா வழங்க முயற்சித்தது.

இதன் அடிப்படையில் இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதிகளை தமது கட்டுப்பாட்டுக் குள் வைத்துக்கொள்ளலாம் என்ற எண்ணமும் இந்தியா விடம் இருந்திருக்கலாம்.

ஆனால், 1987 ஆம் ஆண்டு இலங்கையுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கை யின் கீழ் இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் இன்னும் மாகாண சபை ஆட்சி முறை இன்னமும் உரிய நடைமுறைக்கு வரவில்லை என்பது கண்கூடு.

இவ்வாறான நிலையில் 2009 ஆம் ஆண்டு இறுதிப் போருக்கு இலங்கை அரசாங்கத் துக்கு உதவியளித்த இந்தியா, போரின்பின்னர், இலங்கையின் அரசியலில் செல்வாக்கை செலுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டுவருகிறது.

இதன் அடிப்படையிலேயே இலங்கை அரசாங்கத்தரப்பினர் எதிர்க்கட்சி தலைவர், தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினர் என்று பல தரப்பினரையும் இந்தியா அழைத்து பேச்சு நடத்துகிறது.

எனினும் அதனால் எவ்வித நன்மைகளும் தமிழ் மக்களுக்கு வந்துசேரவில்லை.

இதன் கட்டங்களாக ஏற்கனவே இந்திய நாடாளுமன்றக் குழு கடந்த வருடத்தில் எதிர்க்கட்சி தலைவர் சுஸ்மா சுவராஜின் தலைமையில் வடக்கு - கிழக்கு பகுதிகளுக்கு விஜயம் செய்தது. பேச்சுவார்த்தைகளை நடத்தியது. எனினும் எதுவும் நடக்கவில்லை.

அதேபோன்று ஜெனிவா வில் இலங்கைக்கு எதிராக தமது வாக்கை பயன்படுத்திய இந்தியா, கடந்த வாரத்தில் இந்திய நாடாளுமன்றத்தின் மற்றும் ஒரு குழுவை இலங்கை யின் வடக்கு - கிழக்கு பகுதி களுக்கு அனுப்பிவைத்தது.

இந்தக் குழுவும் வழமை போலவே சிவில் சமூகம்,

அமலன்

அரசியல்வாதிகள் என்று அனைவரையும சந்தித்தது.

ஆனால் அதன்மூலம் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு எட்டப்படுமா? என்பது கானல் நீராக உள்ளது.

வேறு நாடுகளின் பிரதி நிதிகள் தமது பகுதிகளுக்கு வருவதைக்காட்டிலும் இந்தி யர்கள் வரும்போது, தமது சொந்தப்பிரதிநிதிகளிடம் குறை களை கூறுவது போன்ற வடக்கு, கிழக்கின் மக்கள் தமது குறை களை முறையிடுகின்றனர்.

ஆனால் அதனால் எவ்வித பயனும் ஏற்படுவதில்லை என்று உணர்ந்தாலும்கூட அந்த முயற்சி களை வடக்கு- கிழக்கு மக்கள் கைவிடுவதாக இல்லை.

இந்தநிலையில் புதிதாக வந்துசென்றுள்ள இந்தியக்குழு வின் செயற்பாடுகளை இலங்கை யின் தமிழர்களை இலவுகாத்த கிளிபோல பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

# இயலாமையை இயலுமையால் வெற்றிகொள்வோம்

(சென்றவாரத் தொடர்ச்சி....)

**துன்பம்** வரும்போது அதையே நினைத்து அதற்காகப் பயந்திருப்பவன், அதிலிருந்து ஒரு நாளும் விடுபடமாட்டான். துன்பங்கள் பல இருந்தாலும் அவைகளைப் பற்றி சிந்திக்காமல், அவைகள் தன்னையும் தனது வெற்றியையும் ஒன்றும் செய்துவிட முடியாதென்று தைரியமாய் இருப்பவன் விரைவில் அத்துன்பங்களில் இருந்து விடுதலை பெறுவான். சிறிய நோய் வந்தபோது அதைப் பற்றி வருந்துபவன் அதைப் பெரிய நோயாக மாற்றிவிடுவான். இதுபோல் ஒருவன் எப்பொழுதும் தன் இயலாமையில் வாடியிருக்கக் காரணம், அவன் எப்பொழுதும் தன் குறையைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பதே ஆகும்.

இம் மண்ணுலகில் மனிதன் தினசரி வாழ்வில் மனம் எப்படிச் செயற்படுகிறது என்று இரகசியத்தை இன்று உங்களுக்கு சொல்கின்றேன். ஒருவன் நோயால் வருந்தாமல் பல இன்பங்களை அடையலாம், பொருள்களை இழந்து தவிக்கலாம். ஆனால் அவன் இவைகளுக்காக அஞ்சி இவைகளைப் பற்றியே சிந்திப்பானேயானால், அவை அவனை விட்டு ஒருநாளும் விலகா. இதற்குப் பதில் மேலும் பலமாய் அவனை வாட்டி, அழிக்க முயலும். மனிதன் எதைப் பற்றி ஆழ்ந்து அடிக்கடி



மு.சமீனா, பட்டாணிச்சூர், வவுனியா.

நினைக்கின்றானோ, அது அவனிடம் குடியிருக்கவே செய்யும்.

இதன் அடிப்படையில் மனிதன் மற்றோர் தன்மையை நீங்கள் அறிந்துகொள்ளலாம். தன்னை வாட்டும் இயலாமைகளைப் பற்றி ஒருவன் சிந்திப்பதற்குப் பதிலாக இயலுமைகளைப் பற்றி மட்டுமே சிந்தித்து வந்தால் மனதில் இருக்கும் இன்னல்களை நினைக்க இடந்தராமல் அவைகளுக்கு மாறான நன்மைகளைப் பற்றி நினைத்து வந்தால் வெகுவிரைவில் இன்னல்கள் மறைந்து வெற்றிகள் அவன் நினைத்திராத வழிகளில் அவனை வந்தடையும்.

நீங்கள் வெற்றியில் தன்னிலைபெற இயலாமை நிலையில் இருப்பதாக நினைக்கும் நினைப்பிலிருந்து விடுபட வேண்டும். இயலாமை என்ற சொல்லுக்கு மனதில் எப்போதும் இடந்தரக்கூடாது. வெகுவிரைவில் இயலுமையாக்கிவிடுவேன் என்ற சந்தேகமற்ற உறுதி எப்பொழுதும் இருக்க வேண்டும்.

'எப்படி ஆவேன்' ஒரு வழியுமில்லையே? என்று எப்போதும் சந்தேகிக்கலாகாது வெற்றி பெறும்போது அடையும் சந்தோஷத்தை இப்போதே அனுபவித்து வரவேண்டும். இந்த உறுதியுடன் உங்கள் இயலாமையை இயலுமாக்கி உங்களுக்கு எதிர்ப்படும் வழிகளில் தீவிரமாய் உழைத்து வாருங்கள். நீங்கள் எதிர்பாராத புதிய வழி உருவாகி உம்மை நிச்சயம் சாதனையாளனாக ஆக்கிவிடும்.

"மனதில் உறுதியாக நான் விரைவில் எனது இயலாமையை இயலுமாக்கி வெற்றி பெற்று மகிழ்வேன்" என்று பல தரம் எண்ணி எண்ணி கூறிக் கூறி வாருங்கள். இதற்கு மாறுபட்ட நினைப்பை எப்பொழுதும் நினையாதிருங்கள். இவ்வுறுதியை உங்களுக்கு நீங்களே திடப்படுத்திக் கொள்ளவேண்டும்.

கட்டுப்படுத்தாத எண்ணங்கள், கவலை, வருத்தம், பயம், வெறுப்பு, குற்ற உணர்வு போன்றவைகள் உள் மனதில் தோன்றச் செய்து அறிவு மனதைப் பாதிக்கும். ஆகவே நீங்கள் அடைய வேண்டிய உயர்வு பற்றிய நம்பிக்கையால் உங்கள் மனதை நிரப்புங்கள். இந்த தன்னம்பிக்கையை நீங்கள் விரும்பும் வெற்றி, சாதனை, புகழ், தலைமை போன்ற ஏதுவாயினும் உங்களுக்குக் கிடைக்க வழிகாட்டும்.

மனதைக் கட்டுப்படுத்தாவிட்டால் கவலை, பயம், வெறுப்பு, தாழ்மை போன்ற தேவையற்ற எண்ணங்கள் மனதில் தானாகத் தோன்றி தோல்வியடைய நேரிடும். சாதனை, வெற்றி, ஆகிய வெற்றி எண்ணமற்ற மனம் எதிர்மறை எண்ணங்களுக்கும் இடம்கொடுக்கும். ஆதலால் பலர் துன்புறுகிறார்கள். உங்கள் இயலாமையை சாதகமாக்கிக் கொள்ளுங்கள். அப்பொழுதே உயர்வும் உயர்ச்சியும் மலர்ந்திடும். வெற்றியும் வீரமும் உதித்திடும்! சித்தியும் சிறப்பும் பொங்கிடும்! வீரமும் தீரமும் நிலைத்திடும்!.

சேக்ஷ்பியர் கூறுகின்றார். "நான் தோல்வி அடைந்துவருகின்றேன். எனது எதிர்காலம் இருண்டது" என்று தம்மைப் பற்றி தமது திறமைகளைப் பற்றி தாழ்வாக, இழிவாக, குறைவாக மதிப்பீடு செய்பவர்களின் வாழ்வில் துன்பமும் துயரமும், பிணி, இடர்கள், தடைகள் இன்னல்கள் ஆகியவை இலகுவாகப் பற்றிக்கொள்ளும். தாழ்வு மனப்பான்மை கௌவிக்கொள்ளும். என்றென்றும் அல்லற்பட்டு ஆற்றாது அழுதுகொண்டே இருக்க நேரிடும், கண்ணீரும் கம்பலையுமாக வாழ நேரிடும்.

நல்ல யோகத்தை தருவது, கெட்ட, கூடாத, தாழ்வான யோகத்தைத் தருவதும் உங்கள் எண்ணங்களே. உங்கள் எண்ணங்கள் மூலமாகவே உங்கள் யோகத்தை நீங்கள் உருவாக்குகிறீர்கள். வாழ்விலும், சோதனையிலும் வெற்றி பெறுவதற்கு, உங்களைப் பற்றி நீங்கள் மிக நல்ல, உயர்வான சுயமதிப்பீடு செய்வது மிகமிக அவசியம். உங்களை ஏற்றுக்கொள்ளுங்கள். உங்களைப் பற்றி பெருமை கொள்ளுங்கள். உங்களை நீங்களே புகழுங்கள், பாராட்டுங்கள் உங்களை நீங்களே நம்புங்கள், போற்றுங்கள், மதியுங்கள் வெற்றி அடைந்து கொண்டிருக்கின்றேன் என்ற திரைப்படம் உங்கள் மனத்திரையில் ஓடட்டும்.

நான் உயருகின்றேன் உயருகின்றேன், தினம் தினம் உயர்ந்துகொண்டே இருக்கிறேன். ஒவ்வொருநாளும் ஒவ்வொரு வழியிலும் நான் மென் மேலும் சிறப்பான வாழ்க்கையைப் பெறுகிறேன். அதற்காக கடினமாகவும் உழைக்கின்றேன்.

இவ்வாறு உள்ளத்தில் உவகை பொங்கிட, மனம் மகிழ்ந்திட, உற்சாகம் ததும்பிட தினம் தினம் தன்னம்பிக்கை ஏற்றிடல் வேண்டும். உற்சாகமே வெற்றியின் ஆணிவேர். உற்சாகத்துடன் செயற்பட்டால் உங்களது இலக்கை இலகுவில் அடைய முடியும். தயக்கம், பயம் ஆகியவை வெற்றியின் எதிரிகள். வெற்றி, வீரம், சித்தி, சிறப்பு ஆகிய ஓங்கார நாதம் என்றென்றும் ரீங்காரம் செய்திடல் வேண்டும். இவைகள் நாளடைவில் எமக்கு பற்பல பலன் தரும். விருட்சமாக ஓங்கி உயர்ந்து வளர்ந்துகாயாகவும் கனியாகவும் பூத்துக்குலுங்கும் ஒளிமயமான எதிர்காலம் அமைந்திடும்.

நீங்களே உங்கள் எண்ணத்தின் எழில் அரசன்! நீங்களே உங்களைப் பற்றி மதிப்பீடு செய்கின்றீர்கள். அவ்வாறிருக்க நீங்கள் ஏன் தாழ்வான எண்ணங்களுக்கு உங்கள் மனதில் இடமளிக்க வேண்டும்? இச் சிறுமையை இன்றுடன் அகற்றுங்கள்.

நீங்கள் சாதனைகள் படைக்கப் பிறந்தவர்கள். வேதனைகயை அனுபவிப்பதற்கல்ல, உலகில் அவதரித்த அனைவரும் சாதனை படைக்கவே பிறந்தவர்கள். நீங்களும் ஓர் சாதனையாளனே! நீங்கள் தலை நிமிர்ந்து நிலை உயர்ந்து சாதனை புரிந்து, சரித்திரம் படைத்து வாழப் பிறந்தவர்களே!

நீங்கள் தனித்தன்மை உடையவர்கள்! முயற்சி நிறைந்தவர்கள்! எதிர் நீச்சல் போடக்கூடியவர்கள். எவ்வளவோ வளமும், நம்பிக்கையும் சக்தியும் சாதனையும் உங்கள் உள்ளே புதைந்து கிடக்கின்றன. உங்கள் மனதிலும் மூளையிலும் பலபல சாதனைப் பொறிகள் அமைந்துள்ளன.

அவற்றினை இனங்கண்டு இயலாமையை முடக்கிவிடுங்கள். அவைகள் உங்களது கட்டளைகளை எதிர்பார்த்த வண்ணம் இருக்கின்றன. இலக்கு, இலட்சியம், குறிக்கோள் ஆகியவற்றுடன் முயற்சிப்போர் மத்தியில் தாழ்வு மனப்பான்மை தோன்றுவதில்லை.

உங்கள் சுயமான முயற்சியே உங்களை உருவாக்குகின்றது. உங்களது வாழ்வும் வளமும், உயர்வும் உயர்ச்சியும் தன்னம்பிக்கையால் உருவாக்கப்பட்டவையே. எனவே உங்களைப் பற்றி உயர்வாக மதிப்பிடுங்கள். 'நான் சாதனைகளை புரிவேன் சரித்திரம் படைப்பேன்' என்றும் எண்ணுங்கள். 'எவை, எவற்றை நீங்கள் அடைய வேண்டும் என்று உறுதியாக எண்ணுகிறீர்களோ அவை எல்லாவற்றையும் அடைய விடாமுயற்சி செய்வது அவசியம்.

நீர் உயர நெல் உயர்வது போல் சுயமனம் உயர உயர நீங்களும் வாழ்விலும் சேவையிலும் உயருவீர்கள்! உன்னத நிலை அடைவீர்கள்! 'யாரால் முடியும்? யாரால் முடியும்? என்னால் முடியும்! என்னால் முடியும்! என்று தினம் தினம் திரும்பக் கூறுங்கள். நெஞ்சம் கனிந்து கனிந்து உள்ளம் உருக உருகக் கூறுங்கள். நெஞ்சத்திலே உதித்து, உள்ளத்திலே பதியும் வண்ணம் கூறுங்கள்.

நெஞ்சத்திலே உதித்து உள்ளத்திலே உறைந்து, நாடி நரம்புகளில் படர்ந்து இரத்தத்தினுள்ள இரத்தமாக கலந்தோடும் வண்ணம் நம்பிக்கையுடன் உவகையுடனும் கூறுங்கள். இயலாமையை இயலுமையால் வெற்ற முடியும் என்று கூறுங்கள். **[முற்றும்]**

---

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

**வாசக நெஞ்சங்களே!**
**உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

## குறுக்கெழுத்துப் போட்டி - 517

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | | 12 |
| | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | | 23 | 24 |
| 25 | 26 | 27 | | 29 | 30 |
| 31 | | 33 | 34 | 35 | 36 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **30.04.2013** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்ப வேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல - 517
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.
சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

## குறுக்கெழுத்துப் போட்டி 515- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 அ | 2 ங் | 3 கோ | 4 லா | | |
| 7 க் | | 9 சு | | 11 ர | 12 மா |
| 13 ரா | 14 தா | | 16 ம | 17 யூ | 18 ரி |
| | 20 ர | 21 ம் | | 23 ல் | |
| 25 உ | 26 பா | 27 சு | 28 ட் | | 30 ழ |
| 31 தி | 32 ம் | 33 க | | 35 சி | 36 ப |

**இடமிருந்து வலம்**

01. ஒரு வகை எண்ணெய் பெறக்கூடிய மரம்.
04. இன்பம் அல்லது பாக்கியம். (குழம்பியுள்ளது)
07. நிறைவேற்று. (குழம்பியுள்ளது)
14. அறுவைச்சிகிச்சை முறையை முதலில் கையாண்ட ஒரு முனிவர்.
19. பாரதப் போரில் கண்ணன். அருச்சுனனுக்கு இவ்வாறு கடமை புரிந்தார்.
23. ஒரு சாரியை உருபு.(திரும்பியுள்ளது)
25. பௌத்த குருமார் சமயக் கிரியை செய்யும் பொழுது ஓதுவது. (குழம்பியுள்ளது)
29. பருப்பதம். (திரும்பியுள்ளது)
33. இடையர்.

**மேலிருந்து கீழ்**

01. எஜமானன் அல்லது தனவந்தன்.
02. ஒளி அல்லது சந்தனம். (குழம்பியுள்ளது)
04. உபகரணம் அல்லது தொடர்பு. (குழம்பியுள்ளது)
06. இவர் ஒரு இந்தியர். சீனாவுக்குச் சென்று புத்த மதத்தை பரப்பியதுடன் குங்.ஃபூ என்னும் தற்பாதுகாப்பு கலையை அறிமுகப் படுத்தினார். (குழம்பியுள்ளது)
09. இந்த நாட்டின் தலைநகரம் 2012ஆம் ஆண்டிற்கான சிறந்த நகரமாகத் தெரிவு செய்யப்பட்டது.
17. அரசன். (குழம்பியுள்ளது)
19. அணிகை.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.515 இற்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

**அ.டிலோத்தமன், அராலி தெற்கு, வட்டுக்கோட்டை.**

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. ம.சசிவாணி, மாசார், பளை.
02. பி.வரதராஜா, வல்வெட்டித்துறை.
03. கு.அன்ரனிராஜா, கோவில் வீதி, வரணி.
04. க.தெய்வேந்திரன், பிரதான வீதி, காலி.
05. த.சிந்துஜன், நெல்சன் பிளேஸ், வெள்ளவத்தை.
06. இ.வந்தனா, ஹட்டன்.
07. மா.சங்கவி, முள்ளியவளை, முல்லைத்தீவு.
08. தி.சர்மிளா, கச்சாய் வீதி, கொடிகாமம்.
09. வ. நிஷாந்தன், குறுந்துவத்தை, சிலாபம்.
10. எம்.நஸ்மியா, பிரதான வீதி, தர்ஹாநகர்.

25



இராமசாமி ரமேஷ், அளம்பில்

ஆம்! வலிகளையும், சுமைகளையும் தோல்விகளையும், அவமானங்களையும் சுமந்து - கடந்து வெற்றிக்காகப் போராடும் எழுத்தாளன் ஒருவனின் எழுத்துலகப் பயணம் இங்கே தொடர்கிறது.


# வலிகளின் சன்மானம்

**வேதனை** நிலாவை ஆக்கிரமித்துக் கொண்டது. தேள்களாய் மாறி தேகத்தைத் தீண்ட ஆரம்பித்தது.

நட்சத்திரன் மீதிருந்த கோபத்தின் பரிசாய்த்தான் இந்தத் திருமண ஏற்பாடுகள் இன்று, கழுத்தில் தாலி ஏறும்வரை வந்துவிட்டிருந்தது. இது வரைக்கும் ஏதோ அசட்டுத் தைரியத்தோடு இருந்துவிட்டவளுக்கு, சுபநேரம் நெருங்க நெருங்க பதைபதைப்பு உதறத் தொடங்கியது.

நட்சத்திரன் ஏமாற்றிவிட்டான்! அதுவும் என் பேச்சை மதித்து வரவில்லை என்னும் ஒரே காரணத்துக்காக நம் காதலுக்கு இந்தளவாய் தண்டனையளிப்பதா? அவனுக்கு பழிக்குப்பழி வாங்குவதாய் எண்ணி என் வாழ்க்கையில் நானே மண்ணைக் கொட்டிக் கொள்கிறேன். நிலாவால் நேரம் கடக்க கடக்க, இயல்பாய் இருக்க முடியவில்லை, இனி எதுவும் பண்ணவும் முடியாதே!

சுவரிலே சாய்ந்திருந்தபடி சிந்தித்தவளுக்கு, எந்த முடிவை அடுத்து எடுப்பது? அல்லது



ஏற்றுக்கொள்வது என்று புரியவில்லை. வாழ்க்கை கண்ணாடிக்குவளை மாதிரி! சரியாகக் கையாளாமல் போனால், உடைந்து யாருக்குமே பயனில்லாமல் போய்விடும். அவசரங்கள், கோபங்களில் எடுக்கும் முடிவுகளெல்லாம் விபரீதங்களையும், கோபங்களையும் தோற்றுவித்துவிடும் என்பதை இந்நெருக்கடியான நிலையில்தான் உணர்கிறாள் நிலா!

காலம் கடந்த பின்னர் புத்தியில் ஏறினால், அதுபயனில்லாப் பண்டமாய் எதுவும் நன்மை ஏற்படுத்தப் போவதில்லை. இவளின் சிந்தனைகள் சில மணிநேர நாழிகைகளை விழுங்கிவிட, முகூர்த்தவேளை வருவதாகவும் சீக்கிரம் அழைத்து வரும்படியும் நிலாவின் தாய் இருவரை அனுப்பினாள்.

"நட்சா... என்னை..." இதற்குமேல் உச்சரிக்க முடியவில்லை. சேற்றுக்குள் விழுந்தாயிற்று!! இனி நனைவதைப் பற்றி கவலைப்படலாமா...? தன்னை அலங்கரித்தாள். தனியே நடந்து மணவறை வந்தாள்! மங்கள ஒலிகள், மலர்த் தூவல்கள் சிதற ரகு, நிலாவின் கழுத்திலே முடிச்சிடுகிறான். பெற்றவர்கள் கண் கலங்குகிறார்கள். நிலாவின் விழித்திரைப் பனித்து விழும் மலர்களோடு மறைகிறது.

☆ ☆ ☆ ☆

மறுபுறத்தில்....

தன் நெஞ்சுக்கூட்டுக்கள் இடம்பிடித்தவளுக்கு நிறைவாய் மணம் நிகழ்ந்துவிட்டது இந்த நெய்தல் நிலக்காரனுக்குப் புரியாது! தெரியவும் வாய்ப்பில்லை. எண்ணங்கள் ஒருமித்திருந்தால் எவ்வளவு தூரத்திலிருந்தாலும் அங்கு நடப்பது இவனுக்கும், இங்கு நிகழ்வது அவளுக்கும் உள்ளுணர்வுகளால் தானும் தெரியவந்திருக்கும். ஆனால், இவர்கள்தான் எதிர்மறையாயிற்றே!!

இலக்கிய மணமும், நெய்தல் நிலமும் உப்புக்காற்றும், ஊதா வெயிலையும்விட ரகுவின் மனமே போதுமென நினைத்தவள், மாலையும் கழுத்தும், நெற்றி நிறைந்த குங்குமமுமாக நின்றுவிட்டாள்.

நட்சத்திரன் நடந்ததை அறியவில்லை; அறிய முனையவுமில்லை. வலிகளின் சன்மானத்தின் பிரசுரத்திற்காய் கடும் பிரயத்தனப்பட்டுக்கொண்டிருந்தான். மகேஸ்வரி தன்னால் முடிந்தளவு மிச்சம் பிடித்துக்கொண்டு மகனின் வெற்றிக்காய் காத்திருந்தாள்.


தோழமைகளும் தோள் கொடுக்கத் தவறவில்லை. பிரவீன், வசந்தன் தம்மால் முடிந்தளவு தொகைப் பணத்தைத் தருவதாக இவனிடம் வாக்களித்திருந்தபோதும், இவன் ஏற்க மறுத்துவிட்டான்.

"இல்லையடா என்ர கனவுக்காக... நீங்க கஷ்டப்படக்கூடாது.." பாசமாய் மறுத்தான். தன் சக்திகளை ஒன்றாக்கி முழுநேரமும் கடலே தஞ்சமென்றானான். இன்னும் இருபதாயிரம் தேடவேண்டும். ஒன்றை வெளியிட்டாலும் உயர்ந்த தரத்தோடு யாரும் குறைகூறாதபடிக்கு வெளியிட வேண்டுமென்பது இவன் கருத்தும் எண்ணமும்.!

நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன.

அளம்பில் கரையில் இருந்து சசியனின் படகுக்கு நேற்றிரவு நல்ல சுறாவும், பாரையும் அகப்பட்டதாய் பேசிக்கொண்டார்கள். இவனுக்குள்ளும் சிறு எண்ணம் உதித்தது. "நானும் போனால்.." ரெண்டு, மூண்டு நாளில... தேவையான காசை எடுக்கலாம்..." எண்ணம் செயலானது. தாய் கட்டிக் கொடுத்த உணவுப் பொதியோடு புறப்பட்டான். மகேஸ்வரியும் கடற்கரை வரை வந்து வழியனுப்பி வைத்தாள். ஆனாலும், மனதுக்குள் அவளுக்கு ஏதோவொரு உறுத்தல்.

(வலிகள் தொடரும்...)




**சே....!** என்ன வாழ்க்கையிது. சிறைச்சாலை கம்பிகளூடாக வெளி உலகைப் பார்த்தான் காமில். அப்போது அங்கே சிறைக் கதவை திறந்துகொண்டு உள்ளே வந்த சிறை அதிகாரி காமிலை உற்றுப் பார்த்துவிட்டு இன்று உனக்கு விடுதலை என்றார். எனக்கு இன்று விடுதலையா? உணர்ச்சிகள் அவனுள் பரவ சிறைச்சாலையை விட்டு வெளியேறி வீதிக்கு வந்தான் காமில்.

அப்போது அங்கே பஸ் ஒன்று வரவே அதில் காமில் ஏறிக்கொண்டான். பஸ் செல்லும் பாதை அவனுக்கு புதுமையாக இருந்தது. வீட்டைவிட்டு அவன் சிறை சென்று

# பாசத் தங்கை



எம்.சி.கலீல், கல்முனை – 05

இரு வருடங்களாயிற்றே. அதனால்தான் அவ்வாறு அப்பாதை அவனுக்குத்தோன்றியது. அவன் இறங்க வேண்டிய இடம் வந்ததும் காமில் பஸ்ஸை விட்டு இறங்கி வீதியோரமாக நடந்தான்.

அங்கே அவன் முன்பு வேலை செய்த இரும்புக்கடை முதலாளி முஸ்தபாவின் மாடிவீடு அவன் கண்களுக்கு தோன்றவே, அங்கு சென்று அவன் கதவுகளைத் திறந்து கொண்டு உள்ளே செல்ல... ஓ! காமிலா வாங்க என்ன செய்தி சுகமாய் இருக்கீங்களா?

பரவாயில்லை... முதலாளி ஏதோ இறைவன் உதவியால் இங்கு வாழ்கிறேன். அது சரி காமில். "இந்தப் பக்கம் யாரையாவது சந்திக்க வந்தனீங்க? என்னையும் என்று முதலாளி இழுக்க இல்ல முதலாளி உங்களைச் சந்திக்கவே வந்தேன். அப்படி என்றால் மீண்டும் எங்க கடையில உங்களுக்கு வேலை வேணும் அப்படித் தானே? உங்களைப் போல சிறைக்கு போனவர்களை எல்லாம் எங்க கடையில வேலைக்கு சேர்த்துக் கொள்வதில்லை. நீங்க எங்க கடையை விட்டுச் சிறைக்கு சென்றதும் அந்த வெற்றிடத்திற்கு வேறொரு ஆளை வேலைக்கு அமர்த்திட்டன். அதனால நீங்க வேற கடையைப் பார்த்து வேலைக்கு சேருவதுதான் புத்தி.

"முதலாளி கொஞ்சம் யோசித்துப் பார்த்து செல்லுங்க... நான் இப்ப இருக்கிற நிலையில் வேறு எங்கதான் வேலைக்கு போவேன். என்மீது கருணை காட்டுங்க... முதலாளி.." என்றான் காமில். இந்தா இதில இருநூறு ரூபா பணம் இருக்கிறது. வாங்கிக்கோ... காமில் சிந்தித்தான். என்ன உலகமப்பா... இதுவென்று நினைத்தவாறு அப்பணத்தை அவரிடமிருந்து வாங்கிக் கொண்டு பாசத் தங்கை பர்வினின் வீட்டை நோக்கி சென்றான்.

சிறு வயதிலேயே பெற்றோரை இழந்த காமிலின் ஒரே தங்கை ஓர் ஆசிரியை. அவள் தனது எதிர் வீட்டு வாலிபன் ஒருவனை மனதார நேசித்தாள். அவனையே அவள் திருமணம் செய்து கொள்ளவேண்டுமென பிடிவாதமாக இருந்தாள். அவளது காதலனோ குடிப் பழக்கம் உள்ளவன். இதனால் காமிலுக்குத் இத்திருமணத்தில் கொஞ்சம் கூட விருப்பமில்லை.

எல்லா விடயங்களிலும் தன் தங்கைக்காக விட்டுக் கொடுக்கும் காமில் இவ் விடயத்திலும் அவன் தங்கை விரும்பியவாறே இருவருக்கும் திருமணம் செய்துவைத்தான். ஓரிரு வருடம் கணவன், மனைவி கலகலப்பாக வாழ்ந்தார்கள். அதன் பின் அவர்களுக்கிடையே அடிதடியால் இருவருக்கும் விரிசல் ஏற்பட்டது.

ஒரு நாள் காமில் வேலைக்குச் சென்று வீடு திரும்பிக் கொண்டிருந்தான். அப்போது சிலர் திருடன், திருடன் என்று கூக்குரலிட்டுக் கொண்டு வீதியில் ஓடிவந்தார்கள். யாரோ ஒருவன் ஓடி வந்து காமில்மீது முட்டிமோதி கீழே விழுந்தான். அவன் முகத்தைப் பார்த்த காமிலின் தலை சுற்றத் தொடங்கியது. அதற்குள் அங்கு ஓடி வந்தவர்கள் காமிலை பிடித்து அடித்தார்கள். அவன் செய்வதறியாது திகைத்தான். பணத்தை திருடிக்கொண்டு ஓடி வந்தவன் தனது தங்கையின் கணவன் என்று துரத்தி வந்தவர்களிடம் எப்படி அவன் சொல்வான். வெட்கித் தலை குனிந்தான். பணத்தை திருடியது திருடன் நானே என அவன் அவர்களிடம் ஒப்புக்கொண்டான். பாசத் தங்கை பர்வீனின் நல்வாழ்வுக்காக செய்யாத குற்றத்தை அவன் ஏற்று இருவருட சிறைத் தண்டனையை அனுபவித்தான். இப்போது காமிலுக்கு விடுதலை.





# கரைசேரத் தோணியில்லை

தோட்டத்து மூலையில்
தூங்காது படுத்திருந்தான்
கபிலன்.
மர நிழலொன்றுக்குள்
மறைந்தவன்
கிடந்தாலும் இரவின்
கொடுமைக்காரன்
இலைகளினூடே எட்டி
கசிந்திடும் கதிர்களால்
கபிலனின் தனியுடல்
தீண்டினான். தமியனின்
உயிரைத் தீயாக்கினான்.
தேனிறைக்கும் சந்திரன்
நின்று தீயிறைத்துச்
சுட்டான்.

மென்மையாய்த் தவழும்
தென்றலும் மேனியைக்
குத்திச் சென்றது.
மூளைக்குள் புகுந்த நீ
வழிந்தது - உடலெங்கும்
கொதிக்கும் சதைக்குள்
ஊர்ந்த காமம் நரம்புகளில்
பாய்ந்த செந்நீரை
வெந்நீராக்கிப் பரப்பியது.

புடைத்த நரம்புகள்
அதிர்ந்தன
சடைத்தெழுந்த அவள்
நினைவு சர்ப்பமெனச்
சீறியது.

தவளைக்குப் பாம்பின்
வாய்விரிப்பாய் அவள்
வியப்பின் விழிவிரிப்பில்
வீழ்ந்தவன் இவன்!
அவளை முதல் பார்த்த
நாளை நெஞ்சில்
மீட்டான் - அசை
போட்டான்.

சிறு தேளைக் கண்டு அந்த
நறுங்குமரி மருண்டு நின்றாள்
சென்றாள் - தடியெடுத்து
வென்றான். தேள் வாலைக்
கரம் தூக்கி எறிந்தான் மீண்டு
திரும்பினான் களிறெறிந்து
பெயர்ந்த காளையென.

அவள் விழிகளில்
சமுத்திரத்தை விரித்தாள்
இவன் வீழ்ந்தான்
முக்குளித்து மீள்வதற்குள்
முறுவலால் அம்பெய்தான்
கணை முனையில் தேன்
தடவி கண்ணிமைத்த
பொழுதுக்குள் நெஞ்சுருவிப்
பாய்ந்தாள் - நிறையழித்தாள்.

முன்னிருக்கும் எழிலமுதம்
விழியுள்ள பின்னிருக்கும்
நாகம் கூந்தலென அசைய
இடமும் வலமுமென அடி நகர
இடம்பெயரும் மருங்கசைய
'பாம்புரித்தன்ன'.

'காம்பு சொலித்தன்ன'
இடைச் சேலை சரசரக்க
முள்ளியி றிலங்கச்
செவ்வாய் முறுவல்
தாதியாக அள்ளிக்
கொண்டுண்ணக் காமம்
கனிவித் துய்ய நோக்க.

தயங்கிப் பின் தங்கி
மெல்ல மெல்ல இட்ட
அடியும் எடுத்த அடியும்
கொப்பளிக்குமோ எனப்
பயந்து தளர தெளிந்தே
குலையும் பின்னழகும்

எடுத்துவிட எடுத்துவிடச்
சரிந்தே மனங்குலைக்கும்
முந்தானை மறைக்க
வொண்ணா முன்னழகும்
விழியிழக்க வெறித்து
நோக்கி விருந்துண்டு
காமனார் அம்பு தாக்கி
அகமும் முகமும் களியேற
அவள் 'அணி மயில் அசை
நடை' கண்டித்தான் கபிலன்.

அருகில் வந்தாள். இவன்
உருகி நின்றான் கண்ணில்
ஈரம் பளபளக்க கனிவாய்
திறந்து 'நன்றி' என்றாள்
அந்தச் சொல்லில் தேனைச்
சொட்டினாள் நெஞ்சினுள்ளே
யாழை மீட்டினாள்.

பயத்தில் வெளுத்த முகம்
பனித்துளியாப் பளபளத்த
வியர்வை முத்து முறுவல்
கிளறும் தலையசைப்பு
கழுத்தணைத்த அணி
மின்னல் அதை
ஏற்றியிறக்கும் முச்சிழுப்பு
அலையலையாய்ப் புரண்டும்
முன் விழுந்த பிறை நிலவில்
சுருண்டும் அடங்காத்தனி
இழைகள் காற்றில்
அலைந்தும் குழல் நீட்டம்
இடுப்பில் இன்னொரு நிலவு
எறிந்தது கதிர்களை அந்த
மடிப்பில் சிக்கிய கண்கள்
திரியாகிச் சீற வெடித்தது
இதயம்.

எப்படிப் படைத்தான்
பிரம்மன் இப்படி ஒரு
வடிவை? சிரித்தாள்.
சிறக்கணித்து நோக்கினாள்
நன்றி சொன்னாள்.
இதயத்தைத் துண்டு
துண்டாய் நறுக்கினாள்
நின்று தயங்கி நடந்தாள்
உயிர்பிரித்து கபிலன்
கடலில் சிக்கிய
தோணியானான் காற்றில்
சூழலும் சருகானான்
ஆசைக்குத் தணிவேது?
அள்ளி அள்ளிக் குடிக்க
அடங்காக் கடல்நீர்த்
தாகம் போல - வெட்ட
வெட்ட அடர்ந்து சடைத்தது
எத்தனை தலைமுறை
வேட்டையின் வளர்ச்சி!
உண்ண உண்ண
நிறையாத ஓநாய்ப் பசி!

இரக்கமின்றிப் பிணங்
கொத்தும் கழுகாக அவள்
நினைவு! கண் இமை
பொருந்தவில்லை
காற்றுக்கும் இரக்கமில்லை.

படுக்கை நொந்து
பஞ்சணை உறுத்த
விட்டத்திலிருந்தும்
அவள் விழி நெருப்பே
வறுத்தெடுக்க வீட்டினுள்
இருக்கப் பிடிக்காமல்
வெளிக்கிட்டான்.

எங்கும் நிறைந்திருந்த
இரவின் அமைதி அவன்
தனிமைத் தணலை
ஊதிக் கொழுந்து விடும்
நெருப்பில் நெஞ்சவிய
தோட்டம் வந்தான்.
தூங்காமல் படுத்திருந்தான்.

காதல் கடலிலே வீழ்ந்து
விட்டான் கரைசேரத்
தோணியில்லை.

**காமக் கடல்மன்னும் உண்டே**
**அது நீந்தும்**
**ஏமப் புணைமன்னும் இல்.**
(குறள் 1164)




**◉ சிந்தியா! இலங்கையில் ஊடகங்களுக்கு எதிராக நடைபெறும் அச்சுறுத்தல்களால் ஊடக நடுநிலைமை ஏற்பட சாத்தியம் உண்டா?**

*எம்.கல்பனா, புத்தளம்.*

'ஊடக நடுநிலை' என்று உலகத்தில் எதுவுமே இல்லை. ஒவ்வொரு ஊடகமுமே அதன் உரிமை யாளர், அல்லது வழிநடத்துனரின் விருப்பு வெறுப்புகளுக்கு அமைவாகவே இயங்குகின்றன. ஊடகங்கள் தமது தர்மங்களை கொலை செய்துவிட்டு அதர்ம வழி நடக்கும்போது அநாவசியமான விளைவு கள் ஏற்படுகின்றது. ஊடகம் ஒரு ஜனரஞ்சக ஆயுதம் என்பதையும், அதை எவ்வாறு நாம் பிரயோகிக்கின் றோம் என்பதையும் சிந்திக்கவேண்டும்.

**◉ சிந்தியா! பாலஸ்தீனில் யூதர்களை குடியேற்றி இஸ்ரேல் எவ்வாறு அந்த பகுதிகளை ஆக்கிரமித்ததோ, அதேபோன்று வடக்கில் சிங்களவர்களை குடியேற்றி எமது பகுதிகளை அரசாங்கம் ஆக்கிரமிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாக சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி. குற்றஞ்சாட்டியுள்ளாரே?**

*அ.டேவிட், கிருலப்பனை*

சுரேஷ் சொல்லுவதே உண்மையாக இருக்கு மானால்கூட, அதைத் தடுக்க சுரேஷின் அறிக்கையும், அவர் ஒட்டியிருக்கும் இல்லாத கூட்டமைப்பின் செயற்பாடுகளும் ஒருபோதும் உதவப்போவதில்லை. எப்படி நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு இறுதி யுத்தத்தில் படுகொலைகள் நடந்தன என்று கூறுகின்றார்களோ, அதுபோல் எல்லாமும் முடிந்தபிறகு ஒப்பாரி வைப்பது எந்த வகை அரசியலோ?

**◉ இலங்கைக்கு வரும் உல்லாசப் பயணிகள் போதைப் பொருட்களை விற்பனை செய்வது குறித்து சிந்தியாவின் அபிப்பிராயம் என்ன?**

*ம.சுரேஸ்குமார், மஸ்கெலியா.*

"எந்நாடு என்றாலும் அது நம் நாட்டைப் போல் வருமா?" என்ற பாட்டு எல்லா நாட்டுக்காரர்களுக்கும் பொருந்தும். உல்லாசம் என்பது தடைகளற்ற பொழுது போக்கா? அல்லது குற்றங்களை தடையற்று அனுபவிப் பதற்கான அனுமதியா? என்பது விவாதத் துக்குரியதுதான். உல்லாசத்தின் பிரதான மூலதனமே போதையும், கலவியும்தான் என்றாகிவிட்டது. அது அதற்காக அத்தனை யும் செய்யும். அதில் வாற்பதும், வாங்குவதும் சாதாரணம். இலங்கையின் எதிர்கால பொருளாதாரமே உல்லாசத் துறையிலேயே தங்கி யுள்ளது. எல்லாமும் சட்டமாகிப் போகும் ஆச்சரியமும் நடக்கும்.

**◉ சிந்தியா! அமெரிக்கா வடகொரியாவை தாக்குவதற்குரிய தந்திரோபாயங்கள் எவை?**

*க.முரளிதரன், அராலி.*

கொரிய தீபகற்பத்திற்கு ஏற்கெனவே விமானம் தாங்கிக் கப்பல்களை அனுப்பியுள்ளது.

தனது ஏவுகணைத் தளங்களை வட கொரியாவின் முக்கிய இலக்குகளை நோக்கி தயார்நிலையில் வைத்துள்ளது.

தாக்குதலுக்கான அத்தனை ஏற்பாடு களையும் செய்துவிட்டு. வடகொரியா அணு ஆயுதம் வைத்துள்ளது, ஏவுகணை பரிசோதனை செய்கின்றது தென் கொரியாவை அச்சுறுத்துகின்றது என்றெல்லாம் பரப்புரை செய்து தமக்கான சூழலுக்காக காத்திருக்கின்றது.

**◉ சிந்தியா! 6ஆவது ஐ.பி.எல் போட்டியில் இந்திய வீரர்களான கொல்கொத்தா நைட் ரைடர்ஸ் அணி கப்டன் கம்பீர் மற்றும் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணிக் கப்டன் ஹோலி மோதிக் கொண்டமை குறித்து உமது கருத்து என்ன?**

*ச.றெஜிஸ்ரன், இணுவில்.*

தொலைக்காட்சிகளில் ஆடல், பாடல், விவாதங்கள் போன்ற நிகழ்ச்சிகளை நடத்துகின்றவர்கள். பரபரப்புக் காக ஏற்கெனவே பேசிக் கொண்டபடி வாய்த் தர்க்கம் செய்வதும், சண்டையிடுவதும், கோபித்துக் கொண்டு எழுந்து செல்வதும் ஒரு பிரசார யுக்தியாகிவிட்டது. அதுபோல் விளையாட்டிலும் செய்கின்றார்களோ . என்று எண்ணத் தோன்றுகின்றது.

கம்பீர், ஹோலி ஆகியோரின் சண்டை எந்த ரகமானது என்பது புரியவில்லை. எப்படியாக இருந்தாலும் பல இலட்சம் ரசிகர்கள் முன்னிலையில் இவ்வாறு நடந்து கொள்வது நல்லதல்ல.





ஸ்ரீ ராம ஜெயம்




ஸ்ரீ துர்க்கை தாசன், தேச பந்து, கலாநிதி, பேராசிரியர், P.K.சாமி JP ஐயா

## மலையாள மாந்திரிக சக்தி

இன்று பெய்கின்ற மழையில் பூக்கின்ற பூக்கள் நிரந்தரம் அல்ல. காலம் காலமாக மணம் வீசும் மல்லிகை பூ மணம் போல 48 வருட காலமாக மாந்திரிக துறையில் சாதிக்க முடியாத விசயங்களைக் கூட சாதிக்கும் உச்சாட பீடம் என்றால் 48 வருட காலமாக தொன்று தொட்டு மலையாள மாந்திரிக துறையிலும் ஜோதிட துறையிலும் செம்மையாக செயல்படும் நிறுவனத்தில் உங்கள் குறை நிறைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

1. ஓடிப் போனவர் தேடி வர வேண்டுமா?
2. தொடர்ந்து கணவன் மனைவி பிணக்கா?
3. காதலன் காதலி பிணக்கு தீர வேண்டுமா?
4. கல்யாணம் கை கூட வேண்டுமா?
5. கல்வியில் சித்தி பெற வேண்டுமா?
6. இழந்ததை ஈடு கட்ட வேண்டுமா?
7. குடி போதையை நிவர்த்தி வேண்டுமா?
8. தீராத நோய்க்கு பரிகாரம் தேவையா?
9. இழந்ததை மீட்க வேண்டுமா?
10. ஆண்மை குறைபாடுகளா?
11. தெட்ட தெளிவான ஜாதக குறிப்புகளுக்கு....

**MALAYALA MANTHIRIKA UCHCHADA PEEDAM**
23, Mayfield Road, Kotahena, Colombo - 13.
Tel : 011 2342463/4, 011 2470615 Fax : 011 2344831
E-mail : drpksamy@sltnet.lk
நுவெரலியா கிளை: ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்
இல. 33, தினசரி சந்தை கட்டிடம், நுவரெலியா. 052-2222508



ஜோசெப் கிருஷ்ணா

**விளையாட்டு**

# இது டோனியின் காலம்



**சௌரவ் கங்கூலி** தன்னகத்தே வைத்திருந்த சாதனைப் பெயரொன்றை தனதாக்கியுள்ளார். மகேந்திரசிங் டோனி, இதுவரை 47 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 24 வெற்றிகள் பெற்றுள்ளார். கங்கூலி 21 டெஸ்ட் போட்டிகளில் வெற்றி பெற்றிருந்தார். மேலும் இந்தியாவில் அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக விளையாடி எட்டு டெஸ்ட் போட்டிகளில் டோனி வெற்றி பெற்றுள்ளார்.

அதோடு 4–0 என்று அவுஸ்திரேலிய அணியைத் துடைத்தெறிந்தது (White wash) அற்புதமான சாதனை. அடுத்த டெஸ்ட் போட்டிகள் பதினொன்றை வெளிநாடுகளில் சந்திக்கவேண்டும், தென் ஆபிரிக்கா உட்பட. ஷேவாக் இல்லை, கம்பீர் இல்லை, சச்சின் இருப்பாரா, இல்லையா? என்று தெரியவில்லை. ஆகவே ஒரு இளந்தலை முறையை வைத்துக்கொண்டு வெற்றிகளைக் குவிக்கவேண்டும். இதுவே அதியுயர் அங்கீகாரமாகக் கருதப்படும்.

இது ஒருபுறம் இருக்க, டோனியின் மீது சென்னை சுப்பர் கிங்ஸ் அணி நிர்வாகம் மலைபோல் நம்பிக்கை கொண்டுள்ளது. இரண்டு தடவை சம்பியன் பட்டம் டோனி வென்று கொடுத்தார். இப்போதைய ஆறாவது ஐ.பி.எல் டோனிக்கு அவ்வளவு வாய்ப்பாக இல்லை. ஆனால் எப்படியும் அரையிறுதிக்குள் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி வந்துவிடும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் கிண்ணத்தை வெல்லும் அளவுக்கு டோனி திறமை மிகுந்தவர் என்பதே நம்பிக்கை. அதற்கு அடித்தளம் 4 – 0 என்று அவுஸ்திரேலிய டெஸ்ட் அணியைப் புரட்டிப் போட்டது.

இது ஐ.பி.எல் காலம். பல இந்திய வீரர்களுக்கு வசந்தம் வீச ஆரம்பிப்பது ஐ.பி.எல் காலத்தில் தான். ஐ.பி.எல் ஒன்றில் யூசுப் பதான், அடுத்து நெஹ்ரா, மூன்றாவது அஸ்வின், நான்காவது ராகுல் ஸர்மா, கடந்த வருடம் அஜின்சியா ராஹ்னே, இந்த ஆறாவதில் யார்? அப்படிச் சோபிக்கப் போகும் வீரர் இந்திய அணிக்குள் நுழையும் அதிர்ஷ்டம் செய்தவராகப் பார்க்கலாம். உங்களால் யாரையாவது ஊகிக்க முடிகிறதா?




**ஐ.பி.எல்** போட்டிகளில் விளையாடுவார்கள் எனப் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட வீரர்களுள் ஜெஸி ரைடரும் ஒருவர். இவரது முரண் நடத்தைகளால் நியூசிலாந்து தேசிய அணியில் இடம்பெறுவதில்கூட சில சங்கடங்களை எதிர்நோக்கியவர் இவர். ஆனாலும் மிகச் சிறந்த கிரிக்கெட் வீரர். இதனால்தான் ஐ.பி.எல். இருபதுக்கு இருபது போட்டிகளில் இவர் இடம்பெற்றிருந்தார். ஆனால் இவருக்கும் வேறு சிலருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலின் காரணமாக மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டு ஐ.பி.எல். போட்டிகளில் விளையாடுவது என்ற பேச்சுக்கே இடமில்லை என்றாகிவிட்டது.

ஆனால் தற்போது மெது மெதுவாக உடல்நலம் பெற்றுவரும் இவர் ஜூன் மாதம் அளவில் மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறவுள்ள அறிமுக சி.பி.எல் இருபது இருபது போட்டிகளில் பங்குகொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இவருக்காகக் குரல் தரவல்ல ஒருவர்

# கரிபியனில் விடியட்டும்!

கருத்துக் கூறுகையில், முன்னதாகவே சி.பி.எல் போட்டிகளில் ஜெஸி ரைடர் பங்கு கொள்வது பற்றிய பேச்சுவார்த்தைகள் நடைபெற்றிருந்தன என்றும், இவர் பூரண சுகம் அடையும் பட்சத்தில் சி.பி.எல் இல் இவர் பங்குகொள்வது நிச்சயமானதென்றும் கூறப்படுகிறது. ஜெஸி ரைடர் கிரிக்கெட்டுக்கு அப்பாலான தனது வாழ்க்கை முறையை ஒழுங்குபடுத்திக் கொண்டாராயின் இன்னும் நீண்ட காலத்துக்கு சிறந்த ஒரு வீரனை ரசிகர்கள் பார்க்க முடியும்.

# இவரின் தெரிவு என்ன?



ஜேர்மன் நாட்டின் பண்டஸ் லீசா உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் பேஜன் மியூனிக் அணி கிண்ணம் வென்றதை தடகள சம்பியன் உசேன் போல்ட் பாராட்டி மகிழ்ந்துள்ளார். இவருக்கும், பேஜன் மியூனிக் அணிக்குமான தொடர்பு எப்படி ஏற்பட்டது என்பது சுவையானது.

பேஜன் மியூனிக் அணியின் வைத்தியர் தான் ஒலிம்பிக் போட்டிகளின்போது, உசேன் போல்ட்டுக்கும் உதவிகள் செய்துள்ளார். இதனாலேயே போல்ட் ஜேர்மன் அணியைப் பாராட்டியுள்ளார். மேலும் பேஜன் மியூனிக் ஜேர்மனியின் மிகப் பிரசித்தமான கழகம். கடந்த ஐம்பது ஆண்டுகளில் இம்முறை பெற்ற வெற்றியுடன் சேர்த்து இருபத்தியிரண்டு முறை கிண்ணம் வென்றுள்ளதென்றால் அந்த அணியின் திறமையின் வரலாறு இலகுவாகப் புரியும். உலக 100 மீற்றர், 200 மீற்றர் குறுந்தூர ஓட்ச் சாதனையை வைத்திருப்பவர், உசேன் போல்ட். இப்பொழுது கருத்துக்கூறும் இவர், தனது தடகள வாழ்வின் பின் பேஜன் மியூனிக் அணியுடன் இணைந்து விளையாட விருப்பம் உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

போல்ட்டின் ஐரோப்பிய உதைபந் தாட்ட வீரர்களின் நண்பர்கள் வட்டம் மிகப் பெரிது. அதிலும் பிரான்ஸ், ஜேர்மன், இங்கிலாந்து வீரர்களின் எண்ணிக்கை அதிகம். போல்ட் உண்மையில் மென் செஸ்ரர் யுனைட்டட் அணியின் தீவிர ஆதரவாளர். இப்போது ஜேர்மனியின் பேஜன் மியூனிக் கழகத்தைப் பாராட்டி மகிழ்கிறார். எதிர்காலத்தில் இவர் தன்னை உதைபந்தாட்டத்துடன் இணைத்துக் கொள்வார் என்றால், அது மென்செஸ்ரர் யுனைட்டட் அணியா அல்லது பேஜன் மியூனிக் அணியா என்பதைப் பொறுத் திருந்துதான் பார்க்க வேண்டும்.

# இருப்பாரா?, இல்லையா?



**இந்திய** அதிரடி வீரர் விரேந்திர ஷேவாக்கின் சர்வதேச கிரிக்கெட் வாழ்வு முடிவுக்கு வருகிறதா என்ற கேள்வி எழுந்துள்ளது. ஏனெனில் ஜூன் மாதம் இங்கிலாந்தில் நடைபெறவுள்ள சம்பியன் கிண்ண ஒருநாள் போட்டித் தெரிவுக்கு அறிவிக்கப்பட்டுள்ள முன்னோடி அணி வீரர்கள் முப்பது பேரில் ஷேவாக்கின் பெயர் இல்லை. அதோடு ஷாகீர்கான், ஹர்பஜன்சிங் ஆகியோரின் பெயர்களும் இல்லை. 2011 இல் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக 219 ஓட்டங்கள் ஒரு நாள் சாதனையாகப் பெற்றவர் ஷேவாக்.

ஒரு நாள் போட்டிகளில் இரட்டைச்சதம் பெற்றவர்கள் என்றால், இரண்டேயிரண்டு பேர்தான். ஒருவர் ஷேவாக், மற்றவர் சச்சின். கடந்த மாதம் நடைபெற்ற அவுஸ்திரேலிய இந்திய டெஸ்ட் தொடரின்போதே ஷேவாக் கழட்டிவிடப்பட்டார். அந்தத் தொடரை 4–0 என்று இந்தியா வென்றது.

1999 இல் ஒருநாள் போட்டிகளில் அறிமுகமான ஷேவாக் 2001இல் டெஸ்ட் அணியிலும் இடம்பிடித்தார். அதில் இருந்து அணியில் புயலாகத்தான் இருந்தார். இந்திய டெஸ்ட் வீரர் வரிசையில் அதிகூடிய எண்ணிக்கையான 319 ஓட்டங்கள் எடுத்தவர் இவர்.

இதுவே டெஸ்ட் வரலாற்றில் அதிகவேகமான முச்சதமுமாகும். (278 பந்துகளில் 300 ஓட்டங்கள்), அதோடு மிகவேகமாக 250 ஓட்டங்கள் குவித்த சாதனையும் இவருக்கே உரியது. (207 பந்துகள்) மேலும் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளில் 219 ஓட்டம் பெற்ற சாதனையும் இவருக்கு உண்டு. மேலும் சர்வதேச டெஸ்ட் அரங்கில் 300 ஓட்டங்களுக்கு மேல் இரு தடவை பெற்ற வீரர்கள் நால்வரில் இவரும் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. மார்ச் 2009 இல் அதிவேகமாக, ஒரு நாள் போட்டியில் –அதாவது 60 பந்துகளில் சதம் போட்ட சாதனையும் இவருக்கே உரியது.

ஆனால் 34 வயதாகும் இவருக்கு இயல்பான சில பலவீனங்கள் ஏற்பட்டு விட்டன போலத் தெரிகிறது. ஓட்டம் பெறுவதில் மந்தம், வேகமாக ஆட்டம் இழத்தல், களத்தடுப்பில் ஆக்ரோஷம் இன்மை, பிடி எடுத்தலில் குறிப்பாக சிலிப் நிலைகளில் மிகப் பலவீனமாகிப் போனமை என்று அவரது வரைபடம் தாழ்வை நோக்கி வேகமாகச் சரிய ஆரம்பித்தது.

இந்த நிலையில் மிகத் திறமைகொண்ட இளரத்தம் இந்திய அணியில் போட்டி போட்டுக்கொண்டு தம் திறமையை நிரூபிக்கவே, இவரது இடம் கேள்விக்குறியாகிறது. நிலைமைகளைப் பார்க்கும்போது இனி சர்வதேச போட்டிகளில் ஷேவாக் இடம்பிடிப்பதென்பது கடினமாகத்தான் இருக்கும் என்றுபடுகிறது. என்ன இருந்தாலும் ஷேவாக் தன் திறமையை அதிகமாகவே இந்திய அணிக்காகக் காட்டியவர் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

# காதிலை பூ கந்தசாமி




**சதாம்.உ:** ஹ...ஹ...ஹ... நான் யார் தெரியுமா? (பாடுகிறார்...)

**மனிதன் மனிதன்!**

**எவன்தான் மனிதன்?**
**வாழும் போதும்**
**செத்துச் செத்துப்**
**பிழைப்பவன் மனிதா?**

**வாழ்ந்த பின்பும் பேரை**
**நாட்டி நிலைப்பவன் மனிதா?**

**சதாம்.உ:** மக்களைக் கேடயமாக நிறுத்தியுள்ளீர் என்கிறது ஐ.நா.சபை! நீர் என்ன சொல்கிறீர்?

**கா.பூ:** அநியாயமாக அழியப் போகிறீர் மிஸ்ரர் உசேன். நாங்கள் இரக்கம் காட்டுவோம், சரணடைந்துவிடும்.

**சதாம்.உ:** (பாடுகிறார்)

**கொடுமை கண்டும் கண்ணை மூடி**
**கிடப்பவன் மனிதா?**
**கோபம் கொண்டும் நியாயம் கேட்டு**
**கொதிப்பவன் மனிதா?**

**கா.பூ:** உலக சமாதானத்திற்காக நாங்கள் என்ன பாடுபடுகின்றோம் தெரியுமா? நீர் ஏன் கொதிக்கின்றீர்? குதிக்கின்றீர்? அமைதிக்கு வேட்டு வைக்கின்றீர்? இதுதான் மேன் பயங்கரவாதம்!.

**சதாம்.உ:** யாரிடம் அப்பனே சொல்கிறாய் கதை? உலகில் சமாதானம் வந்தால் ஆயுதம் எங்கே விற்பாய்? அடுக்கி வைத்திருக்கிற ஏவுகணைகளை எங்கே எறிவாய்? எங்கள் கைகளை எல்லாம் கட்டிப் போட்டுவிட்டுத் தட்டிக்கேட்க ஆளில்லாத சண்டப் பிரசண்டனாகும் உன் திட்டம் நமக்கா தெரியாது. நாடகம் ஆடாதே அப்பனே!

**ஏமாற்றாதே ஏமாற்றாதே**
**ஏமாறாதே ஏமாறாதே**
**போடா டேய் உபதேசமும்**
**நீங்களும்!**
**துடிக்கிறது மீசை**
**தடுக்கிறது பேச்சு நடத்த வந்த மேசை!**

(எழுந்து நின்று சொல்கிறார்)

மிஸ்ரர் கந்தசாமியார் என்னை அழிக்கலாம், எங்களை அழிக்க முடியாது. எழுவோம்! விழவிழ எழுவோம்! நீயொரு குப்பை! இப்போது நான் சொல்வது குட் பாய்....

(சதாம் ஏறுநடை போட்டுச் செல்ல; கந்தசாமியார் சிலையாகி நிற்கின்றார்.)

**சதாம்.உ:** அணு ஆயுதம் செய்வதை முதலில் நீர் நிறுத்தும், பின்னர் நான் நிறுத்துகிறேன்! அணுகுண்டுகளையும், நியூத்திரன் குண்டுகளையும் நீர் எங்கே வைத்திருக்கின்றீர்? எத்தனை வைத்திருக்கின்றீர்? என்ற விபரங்களைக் கூறும், பின்னர் நான் கூறுகின்றேன்!

**கா.பூ:** ஐக்கிய நாடுகள் சபை கேட்கிறது, அதற்கு என்ன பதில் கூறுகிறீர்?

**சதாம்.உ:** வல்லரசுகளின் வாத்தியக் கருவிதானே ஐ.நா.சபை!

**கா.பூ:** உலக நாடுகள் எல்லாம் அங்கம் வகிக்கும் சபையை கேலி செய்கிறீர்?

**சதாம்.உ:** அங்கம் வகிக்கும் நாடுகளுக்கு பங்கம் வந்தால்கூட வல்லரசுகளின் பக்கம் நிற்பதுதானே ஐ.நா சபை. வீட்டோ பவரும் உங்களிடம்! ஐ.நா. செயலாளரிடம் றூட் போட்டுக் காட்டும் திமிரும் உங்களிடம். அந்த சபையில் எங்களுக்கு எப்படிக் கிடைக்கும் நியாயம்?

**கா.பூ:** மக்களைக் கேடயமாக நிறுத்தியுள்ளீர் என்கிறது ஐ.நா.சபை! நீர் என்ன சொல்கிறீர்?

**சதாம்.உ:** ஐ.நா. சபை வல்லரசுகளின் கேடயமாகிவிட்டது என்று சொல்கின்றேன்.

**கா.பூ:** மக்கள் உயிர்களுடன் விளையாடுவதைக் கண்டிக்கக் கூடாது என்கிறீரா?

**சதாம்.உ:** எத்தனையோ நாடுகளில் மனித உயிர்கள் தினமும் மடிந்தும், அங்கெல்லாம் ஏன் எட்டிப் பார்க்கவில்லை இந்த ஐ.நா. சபை. போர் செய்யும் நாடுகளுக்கு நீர் பொருள் கொடுக்கின்றீர்! போராயுதம் கொடுக்கின்றீர்? அதனை எல்லாம் ஏன் தட்டிக் கேட்கவில்லை இந்த ஐ.நா.சபை. எத்தனையோ நாடுகள் உட்பூசலால் பற்றி எரிந்துகொண்டிருக்க ஐ.நா. ஒரு ஒரு தலைப்பட்சமான நீதி, ஒடுக்கப்படும் மக்களிடம் பாராமுகம், வாலாட்டும் வல்லரசுக்கு ஆலவட்டம். இன்று இதுதானே ஐ.நா.சபை.

**கா.பூ:** நிறுத்தும். இறுதியாக என்ன கூறுகின்றீர்?

**சதாம்.உ:** வாழு! வாழ விடு!

**கா.பூ:** நீர் ஒரு பயங்கரவாதி. மனிதன் அல்ல என்று எங்கள் அமெரிக்கா அறிவித்துவிடும்!



யாவும் கலப்படமற்ற பொய்

# உலகை வியக்க வைத்தவர்கள்




**முசோலினி** எங்கு சென்றாலும் வெறுப்பையும் வன்முறையையும் வெளிப்படுத்துவதையே வழக்கமாகக் கொண்டிருந்தார். ஒரு சமயம் ஸூரிச் நகரில் ஒரு விடுதியின் பணிப்பெண், ஒரு ஷில்லிங் கூடுதலாக பில், போட்டுவிட்டாள். இதனால் கொதித்துப்போன முசோலினி, தன் சகாக்களான மூன்று இத்தாலியர்களுடன் சேர்ந்து கொண்டு, அந்த உணவு விடுதியின் மேசைகளைப் புரட்டிப் போட்டு, நாற்காலிகளைத் தூக்கி வீசி, நாசப்படுத்தி, ஏக லூட்டி அடித்துவிட்டுப் போனார்.

"அபாயங்களின் நடுவே வாழுங்கள்" என்று இத்தாலிய மக்களுக்கு அறிவுரை கூறிய முசோலினி, முதல் தரமான பயந்தாங்குளி! அவாண்டி என்னும் சோஷலிசப் பத்திரியகயின் ஆசிரியராக இருந்தபோது, தம் மேசை மீது நீளமான கத்தியும் தோட்டாக்கள் நிரம்பிய துப்பாகியும் தயார் நிலையில் வைத்திருந்தார், இந்தத் தீர புருஷர்! இவருக்கு உதவியாளராக துணையாசிரியராகப் பணியாற்றியவர் ஒரு பெண்மணி. அந்தக் காலக் கட்டத்தில் முசோலினியோடு நெருக்கமாக இருந்தவர். முசோலினியைப் பற்றி மற்றவர்களைவிட அதிகமாகத் தெரிந்து கொண்டிருந்தவர் இத்துணையாசிரியரான பெண்மணி. தன் மேலதிகாரியான முசோலினியின் தொடை நடுங்கித்தனத்தைக் கண்டு வியந்திருக்கிறார். தன் நிழலைக் கண்டே பயப்படுவாராம் முசோலினி.

**(தொடரும்...)**

# இந்தவாரம் உங்கள் பலன்

**(18.04.2013 தொடக்கம் 24.04.2013 வரை)**

### மேடம்

நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்வதன் மூலம் சில காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். புதிய தொழில்கள் ஆரம்பம் செய்யலாம். புதிய ஆடை அணிகலன்களை வாங்குவதை தவிர்க்கவும். எழுத்துத்துறை, அச்சுத்தொழில்கள், புத்தகம் நோட்டு வியாபாரிகள், வக்கீல்கள், எழுத்தாளர்கள் ஆகியோர்கள் நல்ல பலன்களை அடைவார்கள். உடல்நிலையில் இருந்துவந்த தொல்லைகள் மாறிப் பொருட்செலவுகள் குறைய வாய்ப்புகள் உள்ளது. நாட்பட்ட வராத கடன் கொடுத்துள்ள பணம் திரும்பக் கிடைக்கும். சகோதரர்களால் மனநிம்மதி குறைந்தாலும் அவர்களால் சிற்சில ஆதாயங்களை அடைவீர்கள். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

### இடபம்

உடம்பில் மூளை நரம்பு ஆகிய உபாதைகள் வந்துபோகும். காதல் விசயத்தில் மிகுந்த கவனமுடன் நடந்து கொள்வது நல்லதாகும். கண்களில் கவனமுடன் இருக்கவும். நீண்டகாலமாக புதிய வீடு, நிலம் வாங்கப் போட்டிருந்த திட்டங்கள் நிறைவேற வாய்ப்பு உள்ளது. புதிய நண்பர்களின் சேர்க்கையால் மன மகிழ்ச்சி உண்டாகும்.தீராத நோய்களுக்கு புதிய முறை மருத்துவத்தின் மூலமாக நல்ல குணம் கிடைக்கும். திருமணம் ஆகாதவர்களுக்கு உறவினர்களின் உதவியால் திருமணம் நடக்கும். செய்தொழிலில் மிகுந்த கவனமுடன் செயற்படுவது நல்லது. உற்றார், உறவினர் வருகையால் பணச் செலவுகள் உண்டாகும். அரசு சம்பந்தமான வழக்கு விசயங்களில் சாதகமான தீர்ப்புகளை எதிர்பார்க்கலாம்.

### மிதுனம்

பிள்ளைகளால் மனமகிழ்ச்சியும், பொருள்வரத்தும் உண்டாகும் புதிய கடன் வாங்கிப் பழைய கடன்களை அடைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். பூர்வீகச் சொத்து விசயங்களில் இருந்துவந்துள்ள நாட்பட்ட பிரச்சினைகள் நீங்கிச் சொத்துக்கள் கிடைக்கும். பொதுப்பணிகளைச் செய்வோர்கள் கவனமுடன் பணி ஆற்றுவதால் வீண் பழிச்சொல்லுக்கு ஆளாகாமல் இருக்கலாம். பொருளாதாரத்தில் இதுநாள் வரையில் இருந்து வந்துள்ள நெருக்கடிகள் மாறி நல்ல சூழ்நிலை உருவாகும். நண்பர்கள் மற்றும் உற்றார் உறவினர்களின் வரவால் பொருட்செலவுகள் உண்டாகுவதோடு மனநிம்மதி குறைவதோடு வீண் பொருட்செலவுகளும் வந்துசேரும்.

### கடகம்

வெளிநாடு சென்றுவருதல் போன்ற புதிய முயற்சிகளில் மற்றவர்களை நம்பிப் பணம் மற்றும் பொருட்களைக் கொடுத்து ஏமாற்றம் அடைய வேண்டாம். குடும்ப சொத்துக்கள் சம்பந்தமாகிய விசயத்தில் சச்சரவுகள் வந்துபோகும். விருந்தினர்களின் வரவால் மனமகிழ்ச்சி அடைவீர்கள். செய்தொழிலில் புதிய கூட்டுமுயற்சிகளைத் தள்ளிப் போடவும். குழந்தைகளின் உல்லாசப் பயணங்களுக்காக பயணங்களை மேற்கொள்வதன் மூலம் பொருட்செலவுகள் உண்டாகும். நீண்டகாலமாக வராத கடன் கொடுத்து இருந்த பணம் மற்றும் பொருட்கள் காவல் துறையினர்களின் உதவியால் திரும்ப கை வந்து சேரும் காலமாகும்.

### சிங்கம்

காதல் விசயங்களால் ஏற்பட்ட பிரச்சினைகள் தீர்ந்து உறவுகள் வலுப்பெறும். கூட்டுத் தொழில்களைச் செய்வதற்கான முயற்சிகளில் நல்ல தகவல்கள் கிடைக்கும். அரசியல்வாதிகளிடம் இருந்து எதிர்பார்த்து இருந்த ஆதரவுகள் கிடைக்கும். மற்றவர்களுக்காக உழைப்பதில் மனம் மகிழ்ச்சி அடைவீர்கள். வெளிநாடு சென்று வருதல் போன்ற விசயத்தில் சற்றுக் கவனமாக நடந்துகொள்ளவும். விட்டுப்போன பழைய உறவுகள் மீண்டும் தொடர வாய்ப்பு உள்ளது. வீடு, நிலம் போன்றவற்றின் மூலமான புதிய கடன் வாங்குவதற்கான முயற்சிகளில் வெற்றி அடையலாம்.

### கன்னி

கண், காதுகளில் கவனம் தேவை. புதிய வீடு மற்றும் நிலபுலன்களை வாங்குவதன் மூலமாக புதிய கடன்களை வாங்குவீர்கள். தேவையற்ற விசயங்களில் தலையிட வேண்டாம். அரசு வழக்கு விசயங்களில் எதிர்பார்த்து இருந்த சாதகமான நல்ல முடிவுகள் கிடைக்கும். ஆலயப் பணிகளில் பங்கு கொண்டு மனநிம்மதி அடைவீர்கள். பழைய கடன்கள் மீண்டும் தொல்லை கொடுக்கும். காதல் விசயங்களில் அனுகூலமான சில செய்திகள் வந்துசேரும். பெண்களால் தொலைதூரத்தில் இருந்து நற்செய்திகளும் பொருள்வரத்தும் உண்டாகும். வருவதற்கான முயற்சிகளில் சில பின்னடைவுகள் ஏற்பட்டு நீங்கும்.

### துலாம்

விவசாயம் செய்வோர்களுக்கு விவசாயம் நன்றாகப் பலிதமாகும். ஆடம்பா அலங்காரப் பொருள் வியாபாரிகள், சினிமா மற்றும் நாடகத்துறை சார்ந்தவர்கள், அரசியல்வாதிகள், மற்றவர்களின் விசயங்களில் தலையிட்டு மனநிம்மதி இழக்க வேண்டாம். வெளிநாடு சென்றுவருதல் போன்ற முயற்சிகளுக்காகப் பணம், பொருள் ஏமாற்றம் அடையாமல் இருக்கவும். உத்தியோகத் துறையினர்களுக்கு மேலதிகாரிகளால் கண்டிப்பும், இடமாற்றமும் ஏற்படலாம். திருட்டுப் போன பொருட்கள் திரும்பி வீடு வந்துசேரும். புதிய வீடு தொழிற்சாலைகளை இடமாற்றம் செய்யப் போட்ட திட்டங்கள் நிறைவேறும் திருமணம் போன்ற சுபகாரிய நிகழ்ச்சிகளுக்கான முயற்சிகளைச் சற்றுத் தள்ளி போடுதல் நல்லதாகும்.

### விருச்சிகம்

தாயின் உடல்நிலையில் இருந்து நோய்கள் குறையக் கூடிய காலமாகும். விருந்தினர்களின் வரவால் சிறிய மன மகிழ்ச்சியும் பொருள்வரவும் உண்டாகும். புதிய தொழில்களை ஆரம்பம் செய்யப்போட்ட திட்டங்களில் இருந்துவந்த பிரச்சினைகள் தீர்ந்து புதிய தொழில்களை ஆரம்பம் செய்வீர்கள். சிலருக்கு வீடு மாற்றம் ஏற்படக் கூடிய காலமாகும். உடம்பில் வாயு மற்றும் வயிறு போன்ற தொல்லைகள் வந்துபோகும். தந்தை, மகன் உறவுகளில் சிறிய பிரச்சினைகள் வந்துபோகும். வீடு, நிலம் போன்றவற்றினை பிரிந்துபோன உறவுகளுடன் திரும்பவும் ஒன்று சேருவதற்கான காலமாகும். புதுப்பித்துக் கட்டுவதற்காக போட்ட திட்டங்களில் வெற்றி அடைய வாய்ப்புக்கள் உள்ளது.

### தனுசு

குலதெய்வ வழிபாடு செய்து வர எண்ணிய எண்ணங்கள் நிறைவேறும். சகோதரர்களால் திடீர் தனவரவுகள் உண்டாகும். சமுதாய முன்னேற்றத்திற்கான பொதுநலக் காரியங்களில் ஈடுபட்டு நற்பெயர் மற்றும் புகழ் அடைவதன் மூலம் மனநிறைவடைவீர்கள். தோல் சம்பந்தமான பொருட்களை ஏற்றுமதி, இறக்குமதி செய்வோர்கள், கழிவுப் பொருட்களை வாங்குவோர் விற்போர்கள், மீன் முட்டை மாமிசம் போன்ற உணவுப் பொருட்களின் வியாபாரிகள், பழைய இரும்பு, பழைய பேப்பர், பிளாஷ்டிக் போன்ற பொருட்களின் வியாபாரிகள் ஆகியோர்கள் நல்ல இலாபம் அடைவார்கள். சமுதாய நல்லிணக்கத்திற்காக உழைப்பதில் மனம் மகிழ்ச்சி அடைவீர்கள்.

### மகரம்

உடம்பில் கண் மற்றும் காதுகளில் கவனம் தேவை. தீராத நாட்பட்ட நோய்கள் தீருவதற்காகப் புதிய மருத்துவர்களின் உதவிகளை நாடுவது நல்லதாகும். புதிய நண்பர்களின் சேர்க்கை மூலம் காரணமற்ற பிரச்சினைகள் வந்துசேரக் கூடிய காலம் என்பதால் மிகுந்த எச்சரிக்கையுடன் இருத்தல் நல்லதாகும். தந்தையின் உடல் நிலையின் பாதிப்பால் வீண் மருத்துவச் செலவுகள் உண்டாகும். காதல் சம்பந்தமான விசயங்களில் உறவினர்களின் உதவிகளால் நல்ல தகவல்கள் வந்தசேரும் காலமாகும். பயணங்களை மேற்கொள்ள முயற்சிப்பீர்கள். அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் கவனமாகப் பழகிவருதல் நல்லது.

### கும்பம்

கணவன், மனைவி உறவுகளில் சிற்சில பிரச்சினைகள் வந்துபோகும். மாணவர்கள் கல்வியில் நல்ல மதிப்பெண்களையும், பாராட்டுதல்களை பெறுவார்கள். சொத்து சம்பந்தமான விசயங்களில் இருந்துவந்துள்ள பிரச்சினைகள் பெரிய மனிதர்களின் தலையிடுதலால் சாதகமான நல்ல முடிவுகள் கிடைக்கும். குழந்தைகளால் பொருட் செலவுகள் வந்தபோதிலும் அவர்களால் நன்மதிப்பைப் பெறுவீர்கள். உடம்பில் வயிறு, முதுகு போன்ற உபாதைகள் வந்து போகும். அரசியல்வாதிகள் மூலம் எதிர்பாராத ஆதாயங்களை அடைய வாய்ப்புகள் உள்ளது. வீடு மற்றும் வாகனங்களைப் பழுதுபார்ப்பதால் பொருட்செலவுகள் ஏற்படும். விபரீத எண்ணங்களை நினைத்து மன நிம்மதி இழக்காதிருங்கள்.

### மீனம்

உடல்நிலையில் மூலம் மற்றும் நீர் சம்பந்தம் ஆகிய உபாதைகள் வந்துபோகும். யாத்திரையின் போது புதிய பெரிய மனிதர்கள் தொடர்புகள் ஏற்பட்டு அவர் ணகளால் சில நன்மைகளை அடையலாம். புதிய கடன்கள் வாங்குவதைத் தவிர்ப்பது நல்லது. சகோதா சகோதரிகளின் சுபகாரிய நிகழ்ச்சிகளுக்கான முயற்சிகளில் வெற்றி பெற்று அவர்களுக்காகப் புதிய கடன்களை வாங்குவீர்கள். சுபகாரிய நிகழ்ச்சிகளுக்காக நீண்டதூரப் பயணமும் வீண் பொருட்செலவுகளும் உண்டாகும். வடக்குத் திசையில் இருந்து பெண்களால் எதிர்பாராத ஆதாயங்கள் வந்துசேரும். நீண்ட காலமாக எதிர்பார்த்திருந்த வெளிநாடு செல்லுதல் போன்ற முயற்சிகளில் நல்ல செய்திகள் வந்து சேரக்கூடிய காலமாகும்.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)

## ஏலம்

ஹொங்கொங் சோத்பி ஏல மையத்தில், 1662-1722 ஆண்டு காலத்தில் சீனாவை ஆண்ட பேரரசர் காங்ஜி பயன்படுத்திய அபூர்வ வகை சிவப்பு தாமரை கிண்ணம் ஏலத்துக்கு வந்தது. இளம் சிவப்பு, மஞ்சள் மற்றும் ஊதா நிறத்துடன் வரையப்பட்ட அந்த தாமரை கிண்ணத்தை, ஹொங்கொங் பீங்கான் பொருட்கள் விற்பனையாளர் 9.5 மில்லியன் டொலருக்கு ஏலம் எடுத்தார். கடந்த வருடம் இதுபோன்று பூ வடிவிலான அரசர் காலத்து கிண்ணமும் 27 மில்லியன் டொலருக்கு ஏலம் போனது, குறிப்பிடத்தக்கது.



## மைக்ரோ சிப்



உடல் பருமனை குறைக்க உதவும் மைக்ரோ சிப் மின்னனுக் கணினிச் சில்லு ஒன்றை தாங்கள் உருவாக்கியுள்ளதாகவும் அதை விரைவில் முழுமையாக ஆய்வு செய்தபின் வெளியிடும்போது மனித குலத்திற்கே பெரிதும் பயனுள்ளதாக இருக்கும் என்று லண்டன் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இந்த மைக்ரோ சிப்களை உடலில் பொருத்திக் கொண்டவருக்கு அதிகம் பசிக்காது என்பதால் அறுவை சிகிச்சையெல்லாம் செய்து உடல் எடையைக் குறைக்கலாம் என்று தெரிவிக்கின்றனர். எப்படா வரும் இந்த மைக்கிரோ சிப், என்று பலர் ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள்.

## நண்(ே)பன்டா

பசி வந்தால் பத்தும் பறந்துபோகும் என்று நம்மவர்கள் கூறுவதைக் கேள்விப் பட்டிருக்கின்றோம். அது மனிதர்களாகிய எமக்கு மட்டுமல்ல. புலி, சிங்கம் போன்ற காட்டு விலங்குகளுக்கும் பொருந்துகின்றது என்பதற்கான உதாரணத்தையே கீழேயுள்ள படங்களில் காண்கின்றீர்கள்.

சிறுத்தையின் பிடியில் சிக்கிய ஒரு மான்குட்டி நகரமுடியாமல் இருந்தது. அதனை சிறுத்தையும் கொல்லாமல் இருந்தது. எப்படியோ இருவரும் நண்பர்களாகி ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டிருந்தன. இவையெல்லாம் சிறுத்தைக்கு பசி வரும் மட்டும்தான். பசி எடுத்துவிட்டால் நட்பென்ன, உறவென்ற அருகில் இருப்பவர்களையும் குதறி எடுத்துவிடும் இந்தச் சிறுத்தை ஒரு சில மனிதர்களைப் போன்று.







Thai Ngoc(70) என்ற மலைக் கிராமத்தைச் சேர்ந்த நபர் 40 வருடங்களாக தூங்காமல் வாழ்ந்துவருகிறார். கடந்த 1973ம் ஆண்டில் இவருக்கு ஏற்பட்ட ஒருவகை காய்ச்சலுக்கு பின்பு இவரால் நித்திரை கொள்ள முடியவில்லை. இந்த விசித்திர மனிதர். நாள் தோறும் 50 கிலோ கிராம் எடையுள்ள பொருட்களை 4 கிலோ மீற்றர்கள் தூரத்திற்கு எடுத்துச்செல்கிறார். எனினும் இவரின் தூக்கமற்ற நிலையால் இவருக்கு எந்தவித உடல் பாதிப்பும் ஏற்படவில்லை.

இந்தியாவில் ஈரோடு மாவட்டத்தின் பெருந்துறை என்ற இடத்தில் அண்மையில் ஒரு கண்ணுடன் ஆட்டுக்குட்டி பிறந்த சம்பவம் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது. இச்சம்பவம் குறித்து மிருக வைத்தியத்துறையை சேர்ந்த மருத்துவர், அசோகன் கூறுகையில், கிராமங்களில் இவ்வாறான சம்பவங்கள் ஏற்படுவது மிகமிக அரிதான ஒன்று. எனினும் இச்சம்பவம் மரபணு குறைபாட்டினால் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.







இவரால் நித்திரை கொள்ள முடியவில்லை. இந்த விசித்திர மனிதர். நாள் தோறும் 50 கிலோ கிராம் எடையுள்ள பொருட்களை 4 கிலோ மீற்றர்கள் தூரத்திற்கு எடுத்துச்செல்கிறார். எனினும் இவரின் தூக்கமற்ற நிலையால் இவருக்கு எந்தவித உடல் பாதிப்பும் ஏற்படவில்லை.

தனது 6 பிள்ளைகளுடன் விவசாயம் செய்துவரும் இவர் இரவு நேரங்களை தனது தோட்டங்களை திருடர்களிடம் இருந்து பாதுகாப்பதில் செலவளித்து வருகிறார். சாதாரண மனிதர்களால் இப்படி நித்திரை இல்லாமல் வாழ முடியாது. கடந்த 2008 ஆம் ஆண்டில் டொனி ரைட் (Tony Wright) என்ற நபர் 266 மணி நேரம் தொடர்ச்சியாக தூங்காமல் இருந்து கின்னஸ் சாதனை புரிந்திருந்தார். அதற்கு மேல் அவரைத் தூங்காமல் இருப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை. காரணம் அவரின் உடல்நிலை மோசமடையத் தொடங்கியிருந்தது. சாதனையின் பின்பு அம்மனிதனர் இரண்டு நாட்களுக்கு அவரின் தூக்கம் 15 மணி நேரங்கள் நீடித்ததாம். சாதாரன ஒரு மனிதனால் 11 நாட்கள் தூங்காமல் இருப்பதே சாதனையாக இருக்கும்போது, 40 வருடங்கள் தூங்காமல் இருக்கும் Thai Ngoc ஒரு விசித்திர மனிதரே.

## தூங்கா மனிதன்!



## அதிசயம்!

சீனாவைச் சேர்ந்த ஸாஓ ஜியாங் என்ற பெண், தனது தமிழ் பெயரான கலைமகள் என்று அடையாளப்படுத்தும் வகையில் தமிழில் புத்தகம் ஒன்றை வெளியிட்டுள்ளார். அப்புத்தகத்தின் பெயர் சீனாவில் இன்ப உலா என்பதாகும். இவருக்கு சுமார் 25,000 ரசிகர்கள் காணப்படுகின்றனர். இவர்கள் அனைவரும் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



## இன்ப உலா

கனவான்களின் ஆட்டமாகப் பிரித்தானியத் தேசத்தில் உருவாகிய பிரித்தானியாவின் காலணித்துவத்தின் கீழ் இருந்த நாடுகளுக்கு எல்லாம் வியாபித்த கிரிக்கெட் விளையாட்டு, அந்தந்த நாடுகளில் எல்லாம் செல்வாக்குச் செலுத்துகின்ற அளவுக்கு வீரியமாக வளர்ந்திருக்கின்றது. இதன் உச்சமாகவே பணமழை பொழிகின்ற விளையாட்டாக இந்தியாவில் வருடந்தோறும் ஐ.பி.எல். போட்டிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. உலகின் அனைத்துப் பாகங்களிலும் திறமையான வீரர்களை அழைத்துவந்து பணத்தால் குளிப்பாட்டி உலகக் கிரிக்கெட் ரசிகர்களுக்கு விருந்தளிக்கின்ற நிகழ்வாக கிரிக்கெட் ஐ.பி.எல் போட்டிகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. இங்கு அவ்வப்போது கிரிக்கெட்டின் அடிப்படை பண்புகளுக்கு முரணான அசிங்கங்கள் அரங்கேறுவதும் தொடர்ந்கொண்டே இருக்கின்றது.

அண்மையில் பெங்களூர் றோயல் சலெஞ்சர்ஸ் அணிக்கும் கொல்கத்தா நைட் ரைடேர்ஸ் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரு அணித் தலைவர்களும் கோபம் தலைக்கேற மைதானத்தில் நடந்து கொண்ட அநாகரிகச் செயற்பாடு முழு கிரிக்கெட் உலகுக்கும் அருவருப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.




## அசிங்கம்...



இப்பத்திரிகை 373, பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் உள்ள அந்புகள் அச்சகத்தில் டி.டி என்டபிரைஸஸ் (பிரைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ஏப்ரல் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.